Registered as a News Paper
பக்கம் - 24

www.eezhanatham.com

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 16 | வெள்ளி - 41 | 02 - 08 - டிசம்பர் - 2005



## தலைவரின் மாவீரர் தின உரை சொல்லும் செய்தி...




எதிரியிடமிருந்து மட்டுமல்ல
இயற்கை அழிவிலிருந்தும்
மக்களைக் காக்க தலைவரின்
எண்ணத்தில் உதித்த
தமிழீழ காலநிலை அவதானிப்பு நிலையம்

# இதுவொரு எச்சரிக்கை



'டெட்ரா பேக்' எனப்படும் நான்கு அடுக்கு காகித அட்டைப் பெட்டிகளை தயாரிக்கும் உலகின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான சுவீடன் நாட்டைச் சேர்ந்த டெட்ரா பேக் நிறுவனம் ஐடி எக்ஸ் எனப்படும் அச்சுத் தொழிலில் பயன்படுத்தப்படும் வேதிப்பொருளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பழரசங்களை அடைத்து விற்பனை செய்யும் அட்டைப் பெட்டிகள் தயாரிப்பதை தான் உடனடியாக நிறுத்தப்போவதாக அறிவித்துள்ளது.

கடந்த வாரம் இத்தாலிய காவல் துறையினர் சுவிஸ் நாட்டைச் சேர்ந்த குழந்தைகளின் உணவுப் பொருட்களைத் தயாரிக்கும் நெஸ்லே நிறுவனத்தின் கைக்குழந்தைகளுக்கான பால் பொருட்கள் மற்றும் நெதர்லாந்து நாட்டின் நுமிகோ நிறுவனத்தின் தயாரிப்புகளில் ஐடிஎக்ஸ் வேதிப் பொருள் கலந்திருந்தது என்றும் டெட்ராபேக்கிலிருந்து இந்த வேதிப்பொருள், பால் மற்றும் வேறு உணவுப் பொருட்களில் கலந்திருக்கக் கூடும் என்றும் காரணம் காட்டி அவற்றை பறிமுதல் செய்த பின்னணியில் இந்த அறிவிப்பு வந்திருக்கிறது.

இவற்றில் காணப்பட்ட ஐடிஎக்ஸின் அளவு ஆரோக்கியக் குறைவை ஏற்படுத்தும் அளவுக்கு இல்லை என்று ஐரோப்பிய சுகாதார நிபுணர்கள் கூறினாலும் நெஸ்லே நிறுவனம் ஐரோப்பிய நாடுகளிலிருந்து குழந்தைகளுக்கான தனது பால் பொருள் தயாரிப்புகளை திரும்பப் பெற்றுள்ளது. டெட்ராபாக்கில் அடைத்து விற்கப்படும் மற்ற பொருட்களில் கூட ஐடிஎக்ஸ் வேதிப் பொருள் காணப்படுவதை தான் கண்டுபிடித்திருப்பதாக இத்தாலிய நுகர்வோர் அமைப்பு ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# கொக்கோ கோலாவை வென்ற பெண்மணி



மெக்சிக்கோவின் வரலாற்றிலேயே மிக அதிகபட்ச ஏகபோக வர்த்தக ஆதிக்கத்திற்கு எதிரான அபராதம் கொக்கோகோலா குளிர்பான நிறுவனம். அதன்தயாரிப்பாளர்கள் மற்றும் விநியோகத்தர்கள் மீது விதிக்கப்பட்டிருக்கிறது. மெக்சிக்கோ நகரை ஒட்டிய மிகவும் பின்தங்கிய பகுதியில் கடைவைத்திருக்கும் ரக்கல் ஷாவெஸ் என்ற பெண்மணிக்கு கிடைத்த வெற்றியாகவும் இது அமைந்திருக்கிறது. இந்த அபராதத் தொகையின் மதிப்பு சுமார் 35 மில்லியன் அமெரிக்க டொலர்கள்.கொக்கோகோலா நிறுவனம் இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யவிருக்கிறது. ஆனால் சட்டவல்லுனர்களோ, இந்தத் தீர்ப்பு நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளுக்கு எதிரான ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முடிவு என்று கூறத்தொடங்கியிருக்கிறார்கள்.

மெக்சிக்கோவின் ஸ்டபலாவா நகரின் தெருவொன்று குப்பைகள் நிறைந்து காணப்படுகிறது. மிகவும் பின்தங்கிய நிலையில் வாழும் மக்கள் கூட்டம் நிறைந்த இனம்அந்தத் தெருவின் ஓரிடத்தில்தான் இந்த வியாபார நிலையம். அதன் உரிமையாளர் ஒரு பெண். அவரது பெயர் "பாக்குவே சபேஸ்" இவர்தான் உலகில் பெரிய வர்த்தக நிறுவனமான கொக்கோகோலா நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து வெற்றியும் பெற்றுள்ளார். இதற்குக் காரணம் இவரது சிறிய கடையில் கொக்கோ கோலாவிற்கு எதிரான ஒரு பானத்தை விற்பனை செய்வதைத் தடுக்க முற்பட்டது.

ஆனால் அந்தப் பெண் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் கொக்கோகோலா நிறுவனம் தனது சேவையை அந்தப் பெண்ணுக்கு வழங்குவதை நிறுத்திக் கொண்டது. இதன் விளைவு அந்த சிறிய கடையின் வியாபாரம் மளமளவென சரியத் தொடங்கியது.

எனவே தான் அந்தப் பெண் கடை உரிமையாளர் தனது உரிமையைப் பெற்றுக்கொள்ளும் வகையில் உலகில் மிகப் பெரிய வர்த்தக நிறுவனமான அதாவது உலகச் சந்தையில் ஒளிரா வைரமாகத் திகழ்கின்ற கொக்கோ கோலா நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து வெற்றியும் பெற்றுள்ளார்.

மெக்சிக்கோவில் கொக்கோ கோலாவிற்குப் போட்டியாக "பிக்கோலா" என்னும் பானமும் விற்பனையாகிவருகிறது. இதற்கும் மக்களிடம் நல்ல கேள்வி இருக்கிறது. எனவே எனது கடையில் எதைச் செய்யவேண்டும் எப்படிச் செய்யவேண்டும் என்பது எனக்குத் தெரியும். அவர்கள் யார்? என்று கட்டளையிட மெக்சிக்கோ ஒரு சுதந்திரநாடு. எனவே நானும் சுதந்திரமாக வர்த்தகம் செய்ய வேண்டும். அதை தடுப்பதற்கு இவர்கள் யார்? எனவேதான் நான் வழக்குத் தாக்கல் செய்தேன் என்றார் அந்தச் சின்னக் கடை உரிமையாளரான சபேஸ் அம்மையார்.

இது தொடர்பாக கொக்கோ கோலா நிறுவனம் மேன்முறையீடு செய்யவிருப்பதாகக் கூறுகிறது. வர்த்தக உலகில் மிக அதிகளவான அபராதம் இதுவே என்பது குறிப்பிடத்தக்கது.

தென்னாபிரிக்காதான் ஆதிமனிதன் உருவெடுத்த இடம் என்பது மட்டுமல்ல டைனோசர்களின் பிறப்பிடமும் அதுதான் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. சுமார் 30 ஆண்டுகளுக்கு முன் தென்னாபிரிக்காவில் ஒரு தேசியப்பூங்கா அருகில் கிடைத்த ஏழு டைனோசர் முட்டைகளை ஆராய்ந்த புதைவடிவ ஆய்வாளர்கள் உலகிலேயே மிகப் பழமையான டைனோசர் கருவைத் தாங்கள் கண்டுபிடித்திருப்பதாக அண்மையில் கூறினார்கள். இந்த டைனோசர் முட்டைக்கரு 190 மில்லியன் ஆண்டுகள் பழமையானது என்று கூறுகின்றனர்.


இத்தகைய இரண்டு தொன்மையான கருக்களைக் கண்டுபிடித்திருப்பதால் டைனோசரின் வளர்ச்சிப்பாதையை சிறுவயது முதல் பெரிதாகும் வரை அறிவியல் அறிஞர்கள் முதல் தடவையாக மறு உருவாக்கம் செய்துள்ளனர். இந்த இரண்டு முட்டைக்கருக்கள் தரையில் வாழும் முதுகெலும்புள்ள பிராணிகளிலேயே மிகவும் பழமையானது என்று கூறப்படுகின்றது.

ஜோகன்ஸ்பர்கில் உள்ள விட்வாட்டர்ஸ்ரேன்ட் பல்கலைக்கழகத்தின் ஆய்வகக் காப்பாளர் மைக் ராத் இந்தக் கண்டுபிடிப்புப் பற்றி செய்தியாளர் கூட்டத்தில் அறிவித்தார். அப்போது பேசுகையில் இதுதான் உலகிலேயே மிகவும் பழமையான தரைவாழ் மிருகத்தின் முட்டைக்கரு என்றார்.

சிறிய தலையும் நீண்ட கழுத்தும் நீண்டவாலும் உடைய **MASSOS PONDILUS CARINATUS** என்ற ஆரம்பகால டைனோசர் இந்த முட்டை போட்டிருக்க வேண்டும். இந்த டைனோசரின் வால் ஐந்து மீற்றர் நீளத்திற்கு வளர்ந்தது என்கிறார்கள்.



# டைனோசர்கள் நல்ல பெற்றோர்கள்



இந்த டைனோசர் ஜுராசிக் காலகட்டத்தின் ஆரம்பத்தில் தென்னாபிரிக்கச் சமவெளிகளில் அலைந்துதிரிந்ததாம். உணவுக்குப் பெரும்பாலும் தாவரங்களையே உண்டது. சில சமயங்களில் கறையான் புற்றுக்களை தனது நகங்களால் உடைத்தும் பசியாறியது.

இந்தக் கண்டுபிடிப்பு முயற்சி சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கியது. 1977ஆம்ஆண்டில் தென்னாபிரிக்காவின் மத்திய பகுதியில் உள்ள கோல்டன் கேட் தேசியப் பூங்காவுக்கு அருகில் புதிதாகப் போடப்பட்ட சாலை ஓரத்தில் புகழ் பெற்ற தென்னாபிரிக்க புதைவடிவ ஆராய்ச்சியாளரான ஜேம்ஸ் சிட்சிங் 7முட்டைகளின் புதைபடிவுகள் ஒன்றாகக் கிடப்பதைக் கண்டார். நீண்டகாலமாக அந்த முட்டைகளின் புதைவடிவங்கள் விம்ஸ் பல்கலைக்கழகத்திலேயே கிடந்தன. சில சென்ரி மீற்றர் நீளமே உள்ள முட்டைகளையும் முட்டைக் கருவையும் பாறையில் இருந்து பிரித்தெடுக்கும் பயிற்சியும் திறமையும் எவரிடமும் இருக்கவில்லை.

2000மாவது ஆண்டில் ஆராய்ச்சிக்காக அங்கு சென்ற கனடாவின் ரொரன்ரோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ராபர்ட் ரெய்ஸ் என்பவர் அந்த முட்டைகளை திருப்பித்தருவதாகக் கூறித் தனது ஆய்வுகூடத்திற்கு எடுத்துச் சென்றார். அங்கு அவருடைய உதவியாளரான டியான்ஸ்காட் மிகவும் கஷ்டப்பட்டு டைனோசர் முட்டைகளைச் சுத்தம் செய்தார். அதன் விளைவாக நன்கு உருவான இரண்டு கருக்கள் கிடைத்தன. அவற்றை விஞ்ஞானிகள் ஆராய்ந்ததில் சுவையான பல தகவல்கள் தெரிய வந்துள்ளன. குழந்தைப் பருவத்தில் இருந்து இந்த டைனோசர்கள் எப்படி பெரியவையாக வளர்ந்தன என்பதையும் தனது குட்டிகளை எவ்வாறு பராமரித்தன என்பதையும் கண்டறிந்துள்ளனர். குறிப்பாக இந்த வகை டைனோசர்கள் நல்ல பெற்றோராக இருந்துள்ளன என்கிறார்கள்.

இந்த டைனோசர் குட்டி பெரிய தலை, பெரிய கண்கள், நான்கு பெரிய கால்கள் என்று பார்ப்பதற்கு அருவருப்பாக இருக்குமாம். ஆனால் பெரிதாக வளர வளர அதனுடைய கழுத்து வேகமாக வளர்ந்து உடம்பின் அளவு திடீர் மாற்றம் பெற்று கவர்ச்சிகரமான தோற்றம் பெற்றுவிடுகிறது.

இதற்கு முன்பு இந்த வகை டைனோசர்களின் எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால் முட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டது இதுவே முதல்தடவை. மேலும் முட்டையின் கருவை ஆராய்ந்ததில் இந்த டைனோசர்கள் தங்களது குட்டிகளை பாசத்துடன் வளர்த்ததும் தெரியவந்துள்ளது. குட்டி டைனோசர்களுக்கு பற்கள் கிடையாது என்பதால் அவற்றின் பெற்றோரே இரை ஊட்டின என்கிறார் மைக்ராத். பறவைகள் முட்டையிட்டு குஞ்சு பொரித்து அலகால் இரை எடுத்து வந்து குஞ்சுகளுக்கு ஊட்டுவதைப் போல டைனோசர்களும் தாய்ப் பாசத்தைக் காட்டியுள்ளன. டைனோசரின் பிள்ளைப் பாசத்திற்கு இந்த முட்டைக் கரு ஆராய்ச்சியே பழமையான சான்று என்கிறார் அறிவியல் அறிஞர் மைக்ராத்.

# மாவீரர் நாள் உரை; ஒரு மறு வாசிப்பு



நிலாந்தன்

**கடந்த தேர்தலில் தமிழர்கள் வாக்களிக்காததன் மூலம் சிங்கள மக்களின் தெரிவு எது என்பது அம்பலமாகியிருக்கிறது. இப்பொழுது மகிந்தவுக்கு தரப்பட்டுள்ள அவகாசம் மகிந்தவை மட்டுமல்ல, மேற்கு நாடுகளையும் அம்பலப்படுத்துக்கூடியது. அதாவது செய்யமுடியாத ஒரு சமாதானத்திற்காக தமிழர்களை தொடர்ந்தும் நிர்ப்பந்திப்பதா அல்லது தமிழர்களின் நீதியான கோரிக்கைகளை அங்கீகரிப்பதா என்ற முடிவை மேற்கு நாடுகளே எடுக்க வேண்டியிருக்கிறது.**

மேலோட்டமாகப் பார்த்தால் மாவீரர் நாள் உரையில் திரு.மகிந்தவுக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருப்பதாகவே தோன்றும். "அவர் நடைமுறை அரசியலில் நம்பிக்கை கொண்ட ஒரு யதார்த்தவாதி என்று கருதப்படுவதனால்"... இந்த சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருப்பதாகவும் எடுத்துக் கொள்ளலாம். இங்கேயும் குறிப்பாக ஊன்றி வாசிக்கப்படவேண்டியது "என்று கருதப்படுவதனால்" என்று வரும் வார்த்தைகளே. அதாவது மகிந்த ஒரு யதார்த்தவாதி என்று புலிகள் சொல்லவில்லை. மாறாக வெளியில் அப்படியொரு அபிப்பிராயம் இருப்பதனால் அவருக்கு இப்படியொரு வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இதைவிடவும் ஆழமாக அந்த உரை வாசிக்கப்படவேண்டியிருக்கிறது. அப்படி வாசித்தால் அந்த உரையின் பிழிவாக சில செய்திகள் கிடைக்கும். அவையாவன...

முதலாவது சிங்களத் தலைவர்கள் மீதான அவநம்பிக்கை. இரண்டாவது நம்ப முடியாத சிங்களத் தலைவர்கள் செய்யும் சமாதானத்தையும் நம்பமுடியாது என்பது.

மூன்றாவது கடந்த சுமார் நான்கு ஆண்டுகளாக இழுபட்டு வரும் சமாதான முயற்சிகளின் விளைவாக புலிகள் சலித்துப் போயிருக்கிறார்கள், விரக்தியுற்று இருக்கிறார்கள், கோபத்துடன் இருக்கிறார்கள்.

நாலாவது அப்படி கோபத்துடன் இருந்தாலும் கூட அவர்கள் நிதானமாய் இருக்க விரும்புகின்றார்கள் என்பதால்தான் மகிந்தவுக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கிறது.

இதுதான் மாவீரர் நாள் உரையின் பிழிவு. இது ஏறக்குறைய கடந்த ஆண்டின் மாவீரர் நாள் உரையின் தொடர்ச்சிதான். அல்லது கடந்த மாதம் நிகழ்ந்த சனாதிபதி தேர்தலில் தமிழர்கள் எடுத்த முடிவின் நீட்சிதான்.

சரி, புலிகள் சிங்களத் தலைவர்களிடத்திலும் அவர்கள் செய்யும் சமாதானத்திலும் அவநம்பிக்கையோடு இருக்கின்றார்கள் என்றால் பிறகேன் மகிந்தவுக்கு ஒரு சந்தர்ப்பம் தரப்பட்டிருக்கிறது? மகிந்தவின் சிந்தனைகளும் புலிகளின் சிந்தனைகளும் இரு துருவங்களாகக் காணப்படுகின்றன. இது மாவீரர் நாள் உரையில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்நிலையில் தமக்கு எதிர் துருவ நிலையில் இருக்கும் மகிந்தவுக்கு புலிகள் ஏன் ஒரு அவகாசத்தை வழங்கியிருக் கிறார்கள்?

உண்மையில் தரப்பட்டுள்ள சந்தர்ப்பம் மகிந்தவுக்கல்ல. அது அதன் ஆழமான புரிதலில் மேற்கு நாடுகளுக்குரியதே. சமாதானத்தில் தமக்கிருக்கும் ஈடுபாட்டை காட்ட மிக வெளிப்படையான ஒரு இனவாதிக்கு சந்தர்ப்பத்தை வழங்கியதன் மூலம் புலிகள் மறைமுகமாக மேற்கு நாடுகளுக்கே ஒரு வாய்ப்பை வழங்கியிருக்கிறார்கள்.

அதாவது மகிந்தவுடன் சமாதானம் செய்து பாருங்கள் என்று சமாதானத்தை மேற்பார்வை செய்யும் நாடுகளுக்கு ஒரு வாய்ப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. ஏனெனில் கடந்த தேர்தலில் தோற்றுப்போனது திரு.ரணில் விக்கிரமசிங்க மட்டுமல்ல, அவரை பின்னிருந்து இயக்கிய; சமாதானத்தை மேற்பார்வை செய்த; அல்லது சமாதானத்திற்கு அனுசரணை செய்த எல்லா நாடுகளும் அந்தத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றன.

இலங்கைத்தீவில் அவர்கள் முன்னெடுத்துவரும் சமாதானத்தை சிங்களவர்களில் சரி அரைவாசிக்கு மேலானோர் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழர்களும் அந்தச் சமாதானத்தை ஒரு பொறி என்று அஞ்சுகிறார்கள். மாவீரர் நாள் உரையில் இது சொல்லப்படுகின்றது... "சமாதானப் பேச்சு என்பது எமது விடுதலைப் போராட்டப் பாதையில் வைக்கப்பட்ட பொறி என்பதை நாம் நன்கு அறிவோம்...... ரணிலின் அரசாங்கமானது பேச்சுக்களை இழுத்தடித்து காலங்கடத்தியதோடு, உலக வல்லரசு நாடுகளுடன் இரகசிய கூட்டுச் சேர்ந்து எமது விடுதலை இயக்கத்திடமிருந்து ஆயுதங்களை களைந்துவிடும் ஒரு சூழ்ச்சிகர சதி வலையை பின்னுவதிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தியது"..... என்று மாவீரர் நாள் உரையில் வருகிறது.

இந்த இடத்தில் ஒரு கேள்வி எழும். சமாதானம் யாருடைய பொறி? அது அமெரிக்கா தலைமையிலான மேற்குநாடுகளின் பொறியா? அல்லது ரணில் விக்கிரமசிங்கவின் பொறியா?

உண்மையில் இந்தச் சமாதானம் ஒரு பொறிக்குள் பொறியே. மேற்குநாடுகள் ஒரு பெரிய பொறியை வைத்திருக்கின்றன. அதன்படி கிழக்கைரோப்பாவிலும் கிழக்குத் தீமூரிலும், தென்சூடானிலும், வட அயர்லாந்திலும் செய்ததுபோல அல்லது செய்துகொண்டிருப்பதுபோல ஒப்பீட்டளவில் மிக உயர்வான ஒரு தீர்வைக் கொண்டுவந்து புலிகளை அதற்கு இணங்கச்செய்து அவர்களுடைய ஆயுதங்களைக் களைவதே அந்தப் பொறி. இது ஒரு விதத்தில் தர்மர் பொறி போன்றது.

யுத்தமற்ற வழிமுறைகளினூடாகத் தமது இலட்சியங்களுக்கு ஏறக்குறைய கிட்டவரும் ஒரு தீர்வைப் பெறலாம் என்று போராளிகளை நம்ப வைத்து அவர்களுடைய ஆயுதங்களைக் களையும் நீண்டகால நோக்கம் இதில் உண்டு.

ஆனால் இந்தச் சர்வதேசப் பொறிக்குள் ரணில் தனது உள்நாட்டு அரசியல் தேவைகளுக்கேற்ப ஒரு உள்ளூர்ப் பொறியை செருகி வைத்திருந்தார். அது பிரயோக நிலையில் ஒரு வீமன் பொறி. அதன்படி ஒஸ்லோச் சந்திப்பில் வெளிவிடப்பட்ட அறிக்கையை ஒரு இறுதித் தீர்வுக்கான உத்தியோக பூர்வ பிரகடனமாக மாறாட்டம் செய்து புலிகளை அந்தப் பிரகடனத்துள் சிக்கவைப்பது அப்படி அவர்கள் சிக்க மறுத்துத் திமிறினால் அவர்களை சர்வதேச சமூகத்தின் பின்பலத்துடன் மடக்குவது என்பதே ரணிலின் பொறியாக இருந்தது. தேர்தலுக்குச் சில நாட்களுக்கு முன்பு யு.என்.பியின் வருங்காலத் தலைவர்களாக வரக்கூடிய திரு.நவீன் திஸாநாயக்கவும் திரு.மிலிந்த மொறகொடவும் இந்த மூலோபாயத்தை பகிரங்கமாகச் சொல்வதற்கும் கனகாலத்துக்கு முன்பே தமிழர்கள் இதைக் கண்டுபிடித்துவிட்டிருந்தார்கள். இது குறித்த தமிழர்களின் அச்சங்களைப் போக்கும் விதத்தில் மேற்கு நாடுகளும் போதியளவு அக்கறையெடுத்திருக்கவில்லை.

என்பதால்தான் மேற்குலகின் கருவியாக நின்று சமாதானத்தை முன்னெடுத்த ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் தோற்கும் ஒரு நிலை தோன்றியது. இது ரணிலுடன் சேர்த்து அவரை பின்னிருந்து இயக்கிய மேற்கு நாடுகளுக்கும் கிடைத்த ஒரு பாரதூரமான பின்னடைவு. அவர்கள் கடந்த சுமார் நான்கு ஆண்டுகளாக செய்து வரும் சமாதானம் எடுபடாது என்பதை தேர்தல் முடிவுகள் வெளிக் கொணர்ந்துவிட்டன.

இத் தோல்வியில் இருந்து அவர்கள் பெற்றிருக்கக்கூடிய படிப்பினைகளின் பின்னணியில் மகிந்தவுடனும் அவர்கள் சமாதானம் செய்து பார்க்கட்டும் என்று ஒரு சந்தர்ப்பத்தை புலிகள் வழங்கியிருக்கிறார்கள். மகிந்தவைப் பற்றி நன்கு விளங்கி வைத்திருந்தும் அவருக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியது என்பது மேற்கு நாடுகள் மகிந்தவுடனும் ஒரு தடவை பட்டுத் தெளியட்டும் என்றுதான்.

அதாவது இதை இதற்குரிய தர்க்கபூர்வ விளைவுகளின் அடிப்படையில் கூறின் சிங்களத் தலைவர்களுடன் சமாதானம் செய்வது எத்துணை கடினமானது; சலிப்பூட்டுவது; விரக்தியுறச் செய்வது என்பதை மகிந்தவின் விசயத்திலும் கண்டுபிடிப்பதற்கு அவர்களுக்கு ஒரு வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.

எனவே அடுத்த ஆண்டு ஒரு யுத்த ஆண்டா இல்லையா என்பதை தீர்மானிக்கவேண்டியது மகிந்த மட்டுமல்ல சமாதானம் செய்துவரும் மேற்கு நாடுகளும்தான்.

கடந்த தேர்தலில் தமிழர்கள் வாக்களிக்காததன் மூலம் சிங்கள மக்களின் தெரிவு எது என்பது அம்பலமாகியிருக்கிறது. இப்பொழுது மகிந்தவுக்கு தரப்பட்டுள்ள அவகாசம் மகிந்தவை மட்டுமல்ல மேற்கு நாடுகளையும் அம்பலப்படுத்தக்கூடியது.

அதாவது செய்யமுடியாத ஒரு சமாதானத்திற்காக தமிழர்களை தொடர்ந்தும் நிர்ப்பந்திப்பதா அல்லது தமிழர்களின் நீதியான கோரிக்கைகளை அங்கீகரிப்பதா என்ற முடிவை மேற்கு நாடுகளே எடுக்கவேண்டியிருக்கிறது.

ஒரு பிராந்திய வியூகத்துள் சமாதான முயற்சிகளை கொண்டு வருவதன் மூலம் மகிந்த புலிகளை தோற்கடித்துவிடலாம் அல்லது புலிகளின் பலத்தை மட்டுப்படுத்திவிடலாம் என்று நம்புவது தெரிகிறது. ஆசிய நாடுகள் உடனான உறவுகளை விரிவுபடுத்துவது அல்லது பக்கச்சார்பற்ற வெளியுறவுக் கொள்கை என்றெல்லாம் அவர் சொல்லி வருவதன் உட்கிடை இதுதான்.

பூகோளப் பொருளாதாரம் பிராந்திய எல்லைகளைக் கரைத்துக் கொண்டு சர்வ வியாபகமானதாய் பரந்து விரிந்து வரும் ஒரு உலகச் சூழலில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு பிராந்திய அளவில் காணப்படும் சவால்களே மகிந்தவுக்கும் அவருடைய நண்பர்களுக்கும் துணிச்சலைக் கொடுத்துவருகின்றன. இப்படியொரு துணிச்சல் உள்ளவரை மகிந்தவென்ன யார்தான் பதவியில் இருந்தாலும் சமாதானத்தை ஒரு பொறியாகவே பாவிப்பர். இப்படியொரு பிராந்திய யதார்த்தம் உள்ளவரை சிங்களத் தலைவர்களின் நிகழ்ச்சி நிரலில் யுத்தம் ஒரு தெரிவாகத் தொடர்ந்தும் இருக்கும்.

இந்த பிராந்திய யதார்த்தத்தை மீறி மேற்கு நாடுகள் ஒன்றில் மகிந்தவின் மீது நிர்ப்பந்தங்களை பிரயோகிக்கவேண்டும். அது வேலை செய்யவில்லை என்றால் தமிழர்களை பலப்படுத்தவேண்டும் இரண்டும் இல்லையென்றால் அடுத்த ஆண்டு ஒரு யுத்த ஆண்டாக மாறபோவதற்கு அவர்களும் பொறுப்பேற்கவேண்டும்.

# நறுக்கென...

## சாந்த கொட்டே கொட; பதவி பறிபோகுமா?



சிறிலங்காவில் உயர் அதிகாரபீடத்திற்கு புதிய வராக மகிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் முதற்கவனத்தை அமைச்சர வையை நிறுவுவதிலேயே செலுத்தினார்.

இந்த நிலையில் பிரதமர் பதவி அநுரா பண்டாரநாயக் கவுக்கு எனத் தெரிவிக்கப்பட்டுவந்த சூழ்நிலையில் அதற்கு மகிந்த சிவப்புக்கொடி காட்டினார். அத்தோடு ஏற்கனவே இருந்த வெளிவிவகார அமைச்சைக்கூட மகிந்த அநுராவுக்கு வழங்கவில்லை. அதைப்பிடிங்கினார்.

அடுத்தபார்வை முன்னாள் நிதியமைச்சர் சரத் அமுனுகம மீது திரும்பியது. அவரிடமிருந்து நிதியமைச்சை பிடிங்கியெடுத்து அவருக்கு பொதுநிர்வாக அமைச்சை வழங்கி ஒரு கதிரையில் ஓரமாக இருத்திவிட்டார்.

மகிந்தவின் கோபம் சரத் அமுனுகம மீது திரும்பியதற்குக் காரணம் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் மகிந்தவின் சிந்தனை உள்ளடக்கப்படவேண்டும் என மகிந்தராஜபக்ஷ பகிரதப் பிரயத்தனங்களைச் செய்தார். ஆனால், நிதியமைச்சராக இருந்த சரத் அமுனுகம இதற்கு மசிந்து கொடுக்கவில்லை. விளைவு சரத் அமுனுகமவிடமிருந்து நிதியமைச்சை மகிந்த ஏப்பம்விட்டார். இப்படி பல முக்கிய அமைச்சர்களுக்கு எல்லாம் மகிந்தர் ஒருபக்கம் விளையாட்டுக் காட்டிக்கொண்டு இப்போது அவரது கவனம் திரும்பியிருப்பது நாட்டின் பாதுகாப்புத் துறையின் பக்கம்.

இதன் விளைவு புதிய இராணுவத்தளபதி ஒருவர் நியமிக்கப்படலாம் எனத் தகவல்கள் வெளிவருகின்றன. இந்த வகையில் இராணுவத்தளபதி சாந்தகொட்டே கொட்வை வீட்டுக்கு அனுப்பிவிட்டு அவரது இடத்தில சரத்பொன்சேகா அமர்த்தப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதேநேரம் இராணுவத்தளபதியின் இடத்திற்கு நந்தமல்ல வராஜ்ஜின் பெயரும் அடிபடுகிறது.

எப்படியோ சாந்தகொட்டேகொட விரைவில் வீடுசெல்லப்போகிறார். ஆனால் இதற்கிடையில் ஒருமுறை முயற்சி செய்துதான் பார்ப்போமே என்றவகையில் சாந்த கொட்டேகொட களத்தில் காட்டவேண்டிய வீறாப்பை ஊடகங்கள் மூலம் காட்டியுள்ளார். இராணுவத்தினர்மீது தாக்குதல் நடாத்தப்பட்டால் படையினர் சும்மா இருக்கமாட்டார்கள் என அறிக்கைவிட்டுள்ளார்.

படையினர்மீது தாக்குதல் நடத்தினால் படையினரும் திரும்பித் தாக்குவார்கள் என்பது சிறுபிள்ளைக்குக்கூடத் தெரியும். இதனை ஊடகங்கள் மூலமாகவா அறிக்கைவிடவேண்டும்.

எல்லாம் பதவி பறிபோகப்போகிறதே என்ற அவசரம்தான். அதனால்தான் எதைப் பேசுகிறோம் எனத் தெரியாமல் பேசுகிறார்கள் போலும்.

## ஆழ் மனதில் உள்ள உண்மையை; அம்பலப்படுத்திய அமைச்சர்..!



சபாஷ் சரியான மதிப்பீடு. பலம்மிக்க விடுதலைப் புலிகளை இராணுவரீதியில் வெல்ல முடியாது என அமைச்சர் டி.எம்.ஜெயரட்ண தெரிவித்திருப்பதானது சிங்கள தேசம் உணர்ந்துகொள்ள வேண்டிய மிக முக்கியமான செய்தியாகும்.

ஆனால் இந்தச் செய்தியை சிங்களதேசம் எவ்வளவுதூரம் உள்வாங்கிக்கொண்டு செயற்படுகிறது என்றால் யதார்த்தத்துக்கு ஒத்துவராது.

எது எப்படியோ தற்போது ஆட்சி அதிகாரத்திலிருக்கும் அரசில் அங்கம் வகித்துள்ள ஒரு முக்கிய அமைச்சரின் இந்த மதிப்பீடானது தற்போதைய அரசின் நிலைப்பாடுகளிலும் பிரதிபலிக்குமாக இருந்தால் வரவேற்கத்தக்கது.

ஆனால் இவ்வாறு ஒட்டுமொத்தமாக அரசு இதனை உள்வாங்கியிருக்கும் என கருதிவிட முடியாது. ஏனெனில் சிங்கள தேசத்தில் எப்போதுமே முரண்பாடுகள் முற்றி அதிருப்திகள் வெளிப்படும் தருணங்களில் தான் சரியான மதிப்பீடுகளை வெளியிடும் வழக்கத்தை சிங்கள அரசியல் வாதிகள் கொண்டுள்ளனர்.

இந்த வகையில் பலம்மிக்க விடுதலைப்புலிகளை இராணுவரீதியில் வெல்ல முடியாது என தெரிவித்திருக்கும் அமைச்சர் டி.எம்.ஜெயரட்ணவைப் பொறுத்தவரையில் மகிந்த ராஜபக்ஷ அரசின் மீது சில அதிருப்திகளை கொண்டிருக்கும் ஒருவர்.

சிறிலங்காவின் பிரதமராக ரட்ணசிறி விக்கிரம நாயக்க பதவியேற்கும் இறுதித் தருணங்கள் வரை டி.எம். ஜெயரட்ணவே பிரதமராக வருவார் என எதிர்பார்க்கப்பட்டவர்.

அத்தோடு பிரதமர் பதவி தனக்கே வழங்கப்பட வேண்டும் எனவும் தானே அதற்குப் பொருத்தமானவன் என்றும் கட்சியின் மூத்த உறுப்பினர்களில் ஒருவன் எனவும் பிரதமர் பதவி தனக்கு வழங்கப்படவேண்டும் என்பதற்காக கடும் பிரயத்தனங்களை மேற்கொண்ட ஒருவர்.


இந்த நிலையில் கடைசி நேரத்தில் கழட்டி விடப்பட்ட நிலையில் இன்னும் மூன்று மாதங்களில் எப்படியும் தான் பிரதமராக வருவேன் என கோசமிட்டு வருகிறார் டி.எம். ஜெயரட்ண. அந்த வகையில் டி.எம்.ஜெயரட்ணவின் கருத்தானது மகிந்தவின் மீது கொண்டிருக்கும் அதிருப்தியின் வெளிப்பாடாக வெளிவந்திருக்கலாம்.

ஆனால் எது எப்படியோ உண்மையான யதார்த்தம் இராணுவரீதியாக புலிகளை தோற்கடிக்க முடியாது என்பதே. இந்த விடயம் ஒவ்வொரு சிங்கள அரசியல் வாதிகளினதும் படைத்தளபதிகளினதும், படைச்சிப்பாய்களினதும் அடிமனதில் ஆழமாகப் பதிந்துள்ளது.

ஆனால் இதனை புரிந்துகொள்ளாதவர்களாகவே தமது அரசியல் இலாபங்களுக்காக மூடி மறைத்து செயற்பட்டு வருகிறார்கள்.

எப்படியோ டி.எம்.ஜெயரட்ண அடிமன உண்மையை ஒரு முறை அம்பலப்படுத்தியுள்ளார்.

## தோல்வியிலிருந்து தப்ப; வலைவீசும் ரணில்..!



நடைபெற்று முடிந்த சனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணித்தது தொடர்பாக வழக்குத் தொடர்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆலோசித்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு- கிழக்கு மக்கள் தேர்தலை புறக் கணித்ததாலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தோற்கவேண்டிய தொரு நிலை ஏற்பட்டதென அந்தக் கட்சி தெரிவித்து வருகிறது.

கடைசியாக கொழும்பில் அந்தக் கட்சியின் தலைமையகமான சிறிகோத்தாவில் நடைபெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இது தொடர்பாக விவாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் இலட்சக்கணக்கான உறுப்பினர்களுக்கு எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சியை சீரமைக்க வேண்டும் எனவும் அதற்கு தனது முழுமையான ஆதரவு உண்டு எனவும் அந்தக்கட்சியின் பிரதித்தலைவர் கரு ஜெயசூரியா தெரிவித்துவருகிறார்.

இந்த வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பொறுப்பிலிருக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமை தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சிகள் அதிருப்திகள் எழத் தொடங்கிவிட்டன.

எனவே இதனை முறியடித்து சமாளித்து கட்சியின் தலைமைப் பொறுப்பை தொடர்ந்தும் தனது பிடியில் வைத்திருக்க ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒரு கால அவகாசம் வேண்டும்.

எனவேதான் ரணில் விக்கிரமசிங்க இப்போது வடக்கு-கிழக்கு பகுதி மக்கள் தேர்தலை புறக்கணித்தது தொடர்பாக வழக்குத் தொடர்வது என்ற மாயமானை காட்டி கட்சித் தொண்டர்களுக்கு 'கப்சா' விடுகிறார்.

இதில் வேடிக்கை என்னவென்றால் வடக்கு-கிழக்கு மக்கள் தேர்தலை புறக்கணித்தமைக்கான அழுத்தங்கள் தொடர்பான சாட்சியங்களை கிழக்கில் தேடிவருகின்றனராம்.

ஐயா சிறுகோத்தா மகான்களே மக்கள் அழுத்தத்தினால் வாக்களிக்காது விட்டதாக நீங்கள் கருதினால் சாட்சிகளை ஏன் வலைவீசித் தேடுவான். தேர்தலை புறக்கணித்த எல்லோருமே சாட்சிகள் தானே. எனவே ஏன் சாட்சிகளை தேடுகிறீர்கள்.

உங்களுக்கே தெரியும் அரசன் எவ்வழியோ மக்களும் அவ்வழி என்பது போல தமிழ்மக்கள் அவர்கள் முன்தோன்றாமல் தோன்றி வழிகாட்டிய தலைவனின் ஆணையை பின்பற்றியுள்ளனர்.

அந்த வகையில் சிங்கள தேசத்தில் இன்னமும் எம் மக்களின் அரசர்களாக நீங்கள் இருக்க நினைப்பது உங்களுக்கே வெட்கமாகத் தெரியவில்லையா?

## அம்மணி தொடங்குவாரா? இரண்டாவது சுற்று..?



முன்னாள் சனாதிபதி சந்திரிகா பதவியிலிருந்து ஓய்வுபெற்றுவிட்டாலும் அவர் அரசியல் வாழ்வைவிட்டு ஒதுங்குவதற்கு அவரது மனம் இடம்கொடுக்கிறதில்லைப் போலும்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொல்லப்பட்டதையடுத்து அவரது இடத்திற்கு காலியாக இருக்கும் நாடாளுமன்றக் கதிரையில் எப்படியாவது அமர்ந்து விட வேண்டுமென சந்திரிகா விரும்புவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நடந்து முடிந்த சனாதிபதித் தேர்தலில் மகிந்தராஜபக்ஷ வெற்றிபெற்று நாட்டின் அதிகாரத்தைப் பிடித்துவிட்ட நிலையில் இன்னும் தன்னுடைய கையில் எஞ்சியிருக்கும் கட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தக் கதிர்காமரின் கதிரையில் குந்திவிடலாம் என அம்மணி விரும்புகின்றார்.

அம்மணியின் இந்த விருப்பத்திற்கு ஆதரவாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் பல உறுப்பினர்களின் ஆதரவு உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாகப் புதிய சனாதிபதி மகிந்தராஜபக்ஷ பதவியேற்றபின்னர் அமைத்த அமைச்சரவையில் விரும்பிய அமைச்சுப்பொறுப்புக்கள் கிடைக்காத சுதந்திரக்கட்சி உறுப்பினர்களும், அமைச்சுப்பொறுப்புக்களேதும் இல்லாத உறுப்பினர்கள் என்றும் மகிந்தராஜபக்ஷவின் மீது அதிருப்தியுற்ற ஒரு தொகை உறுப்பினர்கள் இருந்தது தெரிந்ததே.

இந்த நிலையில் அம்மணி நாடாளுமன்றக் கதிரையை கைப்பற்றிவிடலாம் எனக் கருதிச் செயற்பட்டுவருகிறார்.

நாட்டின் அதிஉயர் பதவியான சனாதிபதிக் கதிரையில் அமர்ந்து ஆட்சிபுரிந்த காலத்தில் தான் அடைந்த மிக உயர்வான இடத்திலிருந்து நாட்டின் நன்மைக்காக கீழ்நோக்கி அதாவது (மாடியிலிருந்து குடிசைநோக்கிப் பார்க்காத அம்மணி) இப்போது முதன்முதலாகக் கீழ்நோக்கிப் பார்க்கவேண்டியதேவை ஏற்பட்டுள்ளது. அது கூட அம்மணியின் சுயலாபம் கருதியதாகவே இருக்கிறது.

சந்திரிகா பதவியில் இருக்கும்போது மகிந்தவை ஓரம்கட்டுவதற்காகவும், தேர்தலில் தோற்கடிப்பதற்காகவும் செய்த வேலைகளுக்கெல்லாம் சேர்த்து மகிந்த சந்திரிகாவின் அன்புத் தம்பி அநுராபண்டாரநாயக்காவை ஒரு மூலையில் இருத்திவிட்டார்.

இனி அநுராவின் அரசியல் எழுச்சி என்பது அவ்வளவுதான். ஏற்கனவே உள்ளதையும் கெடுத்தானாம் கொள்ளிக்கள்ளன் என்பதுபோல சொதப்பிவரும் அநுராவைநம்பி பேசாமல் இருக்கமுடியாது என கருதியதாலோ என்னவோ சந்திரிகா இரண்டாவது சுற்று ஆட்டத்திற்குத் தயாராகியுள்ளார்.

ஆனால் அம்மணியின் அவா அவ்வளவு இலகுவானதல்ல.

வேழினி

ஆக பந்து இப்போது மிகத் தெளிவாகவே மகிந்த ராஜபக்ஷவின் கையில் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. நவம்பர் 27 இல் மாலை 5.32 மணிக்கு தமிழீழத் தேசியத் தலைவர் ஆற்றிய உரை 6.05 மணிக்கு நிறைவடைந்தபோது இலங்கைத் தீவின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் பொறுப்பு மிகத் தீர்மானகரமாக மகிந்தவின் கையிற் பொறுப்பளிக்கப்பட்டுவிட்டதை உலக ராஜதந்திர சமூகம் கண்டுகொண்டது.

இங்கேதான் தமிழீழ விடுதலைப்புலிகளின் அல்லது தமிழர் தரப்பின் ராஜதந்திர முதிர்ச்சியையும் உலகம் அறிந்துகொள்ள முடிந்தது. கடும் போக்காளர்களையே தன்னைச் சூழவும் வைத்திருக்கின்ற; ஈழத் தமிழர்களின் மூலாதாரக் கோரிக்கைகளை முற்றாகவே நிராகரிக்கின்ற மகிந்தவை; அதனையே காரணமாகக் காட்டி தமிழ்த் தலைமை நிராகரித்துவிடவில்லை. மாறாக 'யதார்த்த பூர்வமான அணுகுமுறையைக் கொண்டவர் எனக் கூறப்படுவதால்' என்ற அடைமொழியுடன் வந்த மகிந்த ராஜபக்ஷ பதவியைப் பிடித்த பின்னர் தன்னைச் சுற்றி அமைத்துக்கொள்ளும் அரணும் கடும் போக்காளர்களைக் கொண்டதாகவே இருப்பது கவனத்துக்குரியது. ஆட்சி பீடத்தின் ஒவ்வொரு புள்ளியிலும் இத்தகையவர்கள் நிரம்புகின்றார்கள். பிரதமர், இராணுவத் தளபதி, அமைச்சரவை... என இது நடைபெறுகிறது.

இதற்கு மேலாக, மகிந்தவின் செஞ்சட்டைத் தோழர்கள் அரசாங்கத்தில் இணைந்துகொள்ளாது எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துகொண்டு தமது நிபந்தனைகளை மட்டும் தூக்கிப் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். போதாதற்கு பௌத்த பிக்குகளின் ஜாதிக ஹெல உறுமயவும் அமைச்சரவையைப் புறந்தள்ளிவிட்டு கையிலே தடியோடு காத்துக்கொண்டிருக்கிறது. தம்முடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை மீறி நடக்க முற்பட்டால் மகிந்த பலத்த எதிர்ப்பைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்று ஜே.வி.பி எச்சரித்திருந்ததையும் இங்கு மனங்கொள்ளுதல் வேண்டும்.

அல்லது அவற்றை நிராகரிக்கும் நடவடிக்கைகள் மகிந்தவின் தரப்பால் எடுக்கப்பட்டு வருகின்றன. அம்மையார் மீண்டும் நாடாளுமன்றத்துக்கு வருவதை மிகத் தீவிரமாக எதிர்த்து முறியடிப்பதற்கு மகிந்தவின் வட்டாரங்கள் தீர்மானித்துள்ளன. அம்மையாரைப் புறந்தள்ளிவிட்டால், அவருக்குப் பின்னர் வேறு செல்வாக்குள்ள தலைவர்கள் கட்சிக்குள் கிடையாதென்பதால் தனக்கு அண்மைய எதிர்காலத்தில் பிரச்சினைகள் இல்லையென்பது அவர்களது கணக்கு.

டிசெம்பர் 08 ஆம் திகதி மகிந்தவின் பட்ஜெற் நாடாளுமன்றத்திற்கு வரவிருக்கிறது. 'மகிந்த சிந்தனய' என்ற அவரது தேர்தல் விஞ்ஞாபனத்தை நடைமுறைக்கிடும் விதமாக இந்த பட்ஜெற் அமையவுள்ளதாம். இந்தத் திருவிழாவுக்கு பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்க மகிந்த முனையக்கூடும் என கொழும்பு அரசியல் அரங்கில் தகவல்கள்



# என்ன செய்யப்போகிறார் மகிந்த..?

மகிந்தவை விழித்து, தமிழ் மக்களுக்கு அவர் வழங்கவுள்ள நீதி என்ன? தீர்வு என்ன என்பதை குறுங்காலத்தில் அவர் அறிவிக்கவேண்டும் எனத் தமிழ்த் தலைமை கோரியுள்ளது.

இந்தக் கோரிக்கையை ஏற்று, காரியசாத்தியமான- அதாவது தமிழர் தரப்பால் ஏற்றுக்கொள்ளத்தக்க, காலத்துக்குப் பொருந்துகின்ற ஒரு தீர்வுத்திட்டத்தை சிறிலங்காவின் புதிய தலைமை முன்வைக்குமாயின் அதிலிருந்து தீர்வு முயற்சிகள் அடுத்த கட்டத்தை நோக்கிப் பயணிக்க முடியும் என்பதே மாவீரர் தின உரையின் எதிர்பார்ப்பு.

ஆனால் அவ்வாறு நிகழாவிடின், தமிழர்களின் தலையில் மிளகாய் அரைக்க சிறிலங்காவின் தலைமை முயன்றால்; காலத்தை இழுத்தடித்து அரசியல் சித்து விளையாட்டுக்கள் காட்ட முயன்றால் நிலைமை விபரீதமாகிவிடும் என்பதையும் நவம்பர் 27 உரை சொல்லத் தவறவில்லை. அவ்வாறு நிகழ்ந்தால் சுயநிர்ணயத்துக்கான சுதந்திரப் போர் மக்களுடன் இணைந்து வேகப்படுத்தப்படும் என்பதையும் அன்றைய உரை தெளிவுபடுத்திவிட்டது. எனவே எதிர்காலத்தில் என்ன நடைபெறக் கூடும் என்பதை தமிழ்த்தலைமை கோடிகாட்டிவிட்டது.

கடும் போக்குச் சிங்களத் தீவிரவாதம் பேசிப் பதவிக்கு

இவர்களது எச்சரிக்கை எல்லாம் மகிந்தவின் கையிலுள்ள நிறைவேற்று அதிகாரத்தின் முன் செல்லுபடியாகுமா? என்ற கேள்வி எழக்கூடும். தடியெடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் என்பதாக நடந்துகொள்ளும் ஜே.வி.பி ஐயும்

கசிந்துள்ளன.

ஏன் மகிந்தவுக்கு இந்த நடவடிக்கை?தற்போதைய நாடாளுமன்றில் ஜே.வி.பி க்கு இருக்கக் கூடிய குறிப்பிடத்தக்க செல்வாக்கை உடைப்பதே இந்த நகர்வின் இலக்கு எனக் கூறப்படுகிறது. ஏனெனில் ஜே.வி.பிக்கு அடுத்த தேர்தலுக்கு உடனடியாகச் செல்லும் விருப்பம் கிடையாது. அதனுடைய செல்வாக்கு எழுச்சி பெற்றிருப்பதாக நம்பத்தக்க சான்றுகள் எதுவும் கிடையாது. அத்தோடு நாடாளுமன்றத்துக்குப் பெருந்தொகையில் அவர்கள்

அவ்வாறு நடந்தால் மகிந்த எங்கே செல்லுவார்? அவரது பாதை நவம்பர் 27இல் சொல்லப்பட்ட விடயங்களைச் சந்திக்கக் கூடிய புள்ளிக்கு வந்து சேருமா?

அவ்வாறு வந்து சேராவிட்டால்; தற்போதைய 50 வருடங்களுக்கும் முன்னதான அரசியல் நிலைப்பாட்டிலேயே மகிந்த அப்போதும் தொங்கிக் கொண்டிருப்பாராயின் இலங்கைத் தீவின் நிலை என்னவாக இருக்கும்?

உண்மையில் இலங்கையின் மீது அக்கறையுள்ள

**ஒரு பட்சம் மக்களையும் 18 ஆயிரம் வரையான மாவீரர்களையும் பல்லாயிரங் கோடி சொத்துக்களையும் பாரம்பரிய நிலத்தில் வாழ்ந்த தொன்மைமிகு வாழ்வையும் இழந்து 30 ஆண்டுகளாக தமிழ்ச் சமூகம் நடாத்தும் இனவிடுதலைப் போருக்கான தீர்வு என்பது தர்க்கபூர்வமானதாக நியாயமானதாக சமமானதாக ஏற்றுக்கொள்ளத்தக்கதாக அமைய வேண்டும். மகிந்த கூறும் 'கௌரவமான சமாதானம்' என்பது இந்தத் தராசில் வைத்து எடைபோடத் தக்கதாக இருக்கவேண்டும். அவ்வாறன்றி தங்களது பேரினவாத தம்மதீபக் கோட்பாட்டை மற்றுமொரு தடவை திருப்திப் படுத்த முயன்றால் அது இலங்கைத் தீவை ஆரோக்கியமான உடனடி எதிர் காலத்தை நோக்கி இட்டுச்செல்வதாக அமையாது.**

ஜாதிகஹெல உறுமயவையும் மகிந்த ஒரு தட்டுத்தட்டி வைக்கக் கூடுமோ? என்றும் சில தரப்புகளில் சொல்லப்படுகிறது. இதற்காக அவர் தனது சொந்தக் கட்சிக்குள் தனக்கான தளத்தை இறுகத் தாபித்துக்கொள்ள புதிய சனாதிபதி முயல்வதாகக் கூறப்படுகிறது. அதனாலேயே கட்சித் தலைவர் என்ற கோதாவில் முன்னாள் சனாதிபதி சந்திரிகா அம்மையார் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு மறுத்தாள் கொடுக்கும்

சென்று சாதித்தது எதுவுமில்லையென்ற கருத்து தென்னிலங்கையில் தோன்ற ஆரம்பித்தும் விட்டது. எனவே உடனடியாக அடுத்த தேர்தலுக்குச் செல்வதன் மூலம் ஜே.வி.பியின் கொட்டத்தை அடக்க முடியுமென மகிந்த எதிர்பார்க்கிறார்.

இவ்வாறு ஒரு தேர்தலுக்குச் செல்வதன் மூலம் தனக்குச் சாதகமான ஒரு நாடாளுமன்றத்தை மகிந்த பெற்றுக்கொள்ள முடியுமா? என்பதற்கு அப்பால்;

அனைவருக்குமே மனதில் எழக் கூடிய கேள்வி இதுவாகத்தான் இருக்கமுடியும்.

ஒரு பட்சம் மக்களையும் 18 ஆயிரம் வரையான மாவீரர்களையும் பல்லாயிரங் கோடி சொத்துக்களையும் பாரம்பரிய நிலத்தில் வாழ்ந்த தொன்மைமிகு வாழ்வையும் இழந்து 30 ஆண்டுகளாக தமிழ்ச் சமூகம் நடாத்தும் இனவிடுதலைப் போருக்கான தீர்வு என்பது தர்க்கபூர்வமானதாக, நியாயமானதாக, சமமானதாக ஏற்றுக்கொள்ளத்தக்கதாக அமையவேண்டும்.

மகிந்த கூறும் 'கௌரவமான சமாதானம்' என்பது இந்தத் தராசில் வைத்து எடைபோடத் தக்கதாக இருக்கவேண்டும். அவ்வாறன்றி தங்களது பேரினவாத தம்மதீபக் கோட்பாட்டை மற்றுமொரு தடவை திருப்திப் படுத்தமுயன்றால் அது இலங்கைத்தீவை ஆரோக்கியமான உடனடி எதிர்காலத்தை நோக்கி இட்டுச்செல்வதாக அமையாது.

ஒற்றையாட்சிக் கோட்பாடும்; தமிழ் பேசும் மக்களது மனிதாபிமானத் தேவைகளுக்கான கட்டமைப்புக்களையே நிராகரிப்பதும்; தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை சுயநிர்ணய உரிமை என்றும் ஒரு தேசிய இனத்துக்கான அடிப்படைக் கூறுகளை இவ்வளவும்

**பு. சத்தியமூர்த்தி**

நடந்து போன வரலாற்று வளர்ச்சியின் பின்பும் புறந்தள்ளுவதானது; வழங்கப்பட்டிருக்கும் குறுங்காலக் தவணையை பயனற்றதாக்கி அடுத்த கட்டத் தர்க்கபூர்வ வளர்ச் சிக்கு இட்டுச் சென்றுவிடக் கூடும்.

அவ்வாறு நிகழாமல் இருக்க வேண்டுமாயின், தான் தன்னைச் சுற்றி இறுக்கிக்கொண்டுள்ள தீவிரப் போக்கெனும் அரணைத் தகர்த்து வெளியே வந்து யதார்த்த உலகிற்குப் பொருந்தக்கூடிய தெரிவுகளை மகிந்த மேற்கொள்ளவேண்டியது அவசியம். அவர் அதனைச் செய்வாரா? என்பதிலேயே இலங்கையின் எதிர்காலம் தங்கியுள்ளது.

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 02. 12. 2005
மின் அஞ்சல :- weekly @ eezhanatham.com

# கால அவகாசத்தை; அரசு பயனுள்ளதாக்குமா?

மூன்றாண்டைக் கடந்து நான்காவது ஆண்டை அண்மித்துக் கொண்டிருக்கும் சமாதான முயற்சி ஒருவித தீர்வுமின்றி இறுக்கமான எந்த முடிவுமின்றி கால நீடிப்பிற்குள் கரைந்து கொண்டிருந்த சூழ்நிலையில் இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் ஒரு முடிவுக்கு வருவதற்கு இலங்கையில் இரண்டு முக்கிய விடயங்களை இந்த ஆண்டிறுப்பகுதியில் உலகம் எதிர்பார்க்க வேண்டிய நிலை இருந்தது.

ஒன்று நவம்பர் 17 இல் நடைபெற்று முடிந்த இலங்கையின் சனாதிபதித் தேர்தல் முடிவு.

இரண்டாவது நவம்பர் 27 இல் நடைபெற்ற மாவீரர் நாளில் தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் மாவீரர் தின உரை.

நவம்பர் மாத இறுதிப்பகுதியில் நடைபெற்ற இந்த இரண்டு நிகழ்வுகளின் முடிவுகளின் அடிப்படையிலும், விடுக்கப்பட்டிருக்கும் செய்தியின் அடிப்படையிலும் இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் தீர்க்கமான முடிவுகளை எடுக்கும் வாய்ப்புக்களை சர்வதேச சமூகத்திற்கும் சமாதான முயற்சியில் ஆர்வம் கொண்ட ஆர்வலர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

நவம்பர் 17 இல் நடைபெற்ற சனாதிபதித் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு ஆட்சிபீடம் ஏறியுள்ளது.

இதன்படி இந்த அரசின் சமாதான முயற்சிகளின் அணுகுமுறை எத்தகையதாக இருக்கப் போகிறது என்பதை மகிந்த ராஜபக்ஷ கூட்டுச் சேர்த்து வைத்திருக்கும் துணைக்கட்சிகளின் அடிப்படையிலும், மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனமான மகிந்தவின் சிந்தனையின் அடிப்படையிலும் அவரது கொள்கை விளக்க உரை என்பவற்றின் அடிப்படையிலும் உய்த்துணர முடியும்.

இதேநேரம், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் நிலைப்பாடு தொடர்பாக மாவீரர் தின உரையில் தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் தெளிவாக வெளிப்படுத்தி விட்டார்.

எனவே, இலங்கையின் சமாதான முயற்சியின் நிலை என்ன? இலங்கையின் சமாதான முயற்சியின் பின்னணியில் இயங்கி வரும் சர்வதேச சமூகத்தின் நிலை என்ன? என்கிற கேள்விகள் தவிர்க்க முடியாதபடி எழுகின்றன.

ஏனெனில், இந்த சமாதான முயற்சியின் நான்காண்டு காலத்தில் சிங்கள தேசத்தின் மூன்று தலைமைப்பீடங்களுக்கு இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக பேச்சுக்கள் மூலம் தீர்வு காண்பதற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் வாய்ப்பளித்துள்ளது.

ஆனால், சிங்கள தேசம் இந்த வாய்ப்புக்களைப் பயன்படுத்தி சமாதான முயற்சிகள் மூலமாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக இந்த வாய்ப்க்களைப் பயன்படுத்தி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை பலவீனப்படுத்துவதாகக் கருதிக் கொண்டு சமாதான முயற்சிகளை பலவீனப்படுத்தியுள்ளது. இதனை சர்வதேச சமூகமும் ஒருவகையில் பார்த்துக் கொண்டிருந்தது என்றே கூறவேண்டும்.

விளைவு, இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரம் ஒரு தீர்க்கமான கட்டத்தை எட்டியுள்ளது. இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு யுத்தமா? சமாதானமா? என்பதை சிங்கள தேசம் ஒரு குறுகிய கால இடைவெளிக்குள் தீர்மானிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் சிங்கள தேசம் பிரச்சினைக்குச் சமாதான முயற்சிகள் மூலமாகத் தீர்வுகாண்பதில் சூழ்ச்சிகளை வைத்துக் கொண்டு, யுத்தத்தை ஒத்திப் போட எத்தனிக்கும் அணுகுமுறை யானது இனி எந்த விதத்திலும் சிங்கள தேசத்திற்குக் கைகொடுக்கப் போவதில்லை.

எனவே இலங்கையின் சமாதான முயற்சியில் சர்வதேச சமூகத்தின் செயற்பாடு கடந்த நான்காண்டுகாலப் பகுதியில் இருந்தது போல அரசின் போக்கை அனுசரித்து இலக்கை அடைய முயல்வது எவ்வளவு தூரம் சாத்தியப்பாடானது என்பதை சர்வதேச சமூகம் மீள் பரிசீலனை செய்ய வேண்டியது அவசியமாகும்.

ஏனெனில், இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்பது யுத்தத்தை தள்ளிப் போடுவதால் மட்டும் விளைந்து விடப் போவதில்லை.

இது வரையான நான்காண்டு காலப்பகுதியில் யுத்தத்தை தள்ளிப் போடுவது மட்டுமே நிகழ்ந்தது.

இனியாவது சர்வதேச சமூகம் உறுதியான அரசியல் தீர்வைக்கான புலிகள் இயக்கம் வழங்கியிருக்கும் கால இடைவெளியை பயனுள்ளதாக அரசு பயன்படுத்திக் கொள்ள அரசின் மீது பாரிய அழுத்தத்தை மேற்கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

பதிலாக, சர்வதேசத்தின் உடனடிக் கவனமானது ஒரு யுத்தம் தோன்றாது அதனை தள்ளி வைப்பதற்கான முயற்சியாக மட்டுமே இருக்குமானால் இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் எந்தப்பயனும் விளைந்துவிடப்போவதில்லை.

# மாவீரர் நாள் நிகழ்வும் மக்கள் உணர்வும்

சுதந்திர தாகமும் விடுதலை வேட்கையும் கொண்ட எந்தவொரு மக்கள் கூட்டத்தையும் எந்தவொரு சக்தியாலும் அழித்துவிட முடியாது என்ற தமிழீழ தேசியத் தலைவரின் கூற்றை மெய்யாக்கும் வகையில் தமிழ் மக்கள் பல்வேறு சந்தர்ப் பங்களில் தங்களது உணர்வெழுச்சிகளை வெளிப்படுத்தியுள்ளனர். விடுதலைக்காகப் போராடிக்கொண்டிருக்கின்ற தமிழ் இனம் ஆக்கிரமிப்பாளர்களால் அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டுக்கொண்ட வேளைகளில் எல்லாம் தங்களது எதிர்ப்புக்களை அன்று தொட்டு இன்று வரை பல்வேறு வழிகளில் மேற்கொண்டு வந்துள்ளனர்.

அந்த வகையில் தாயகத்திலும் சரி புலம்பெயர்ந்து வாழ்ந்து வரும் பிரதேசங் களிலும் சரி தமிழ் மக்கள் மேற்கொண்ட அடக்குமுறைக்கு எதிரான நடவடிக்கைகள் பல தரப்பினரையும் பல்வேறு வழிகளில் சிந்திக்கத் தூண்டியது.

இராணுவ ஆக்கிரமிப்புக்குள் இருந்து கொண்டும் எமது மக்கள் தாயக விடுதலைப்போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் முகமாகப் பல்வேறு மக்கள் எழுச்சிப் போராட்டங்களை அடக்குமுறையாளர்களின் இராணுவத்தின் அடாவடிச் செயல்களுக்கு மத்தியில் தமிழ் மக்கள் உணர்வெழுச்சியுடன் மாவீரர் தின செயற்பாடுகளை மேற்கொண் டதை எவராலும் எதுவுமே செய்யமுடியாது போயிற்று.

மாவீரர் தின நிகழ்விற்காக பல்வேறு வேலைத்திட்டங்களில் ஈடுபட்டுக் கொண் டிருந்த மக்கள் மீது இராணுவத்தினர் அநாகரிகமான முறையில் துப்பாக்கிச் சூடுகளை மேற்கொண்டும் நினைவுப் பந்தல்கள் மற்றும் இதர அலங்காரச் சின்னங் களை சிதைத்தும் அவர்கள் மேற்கொண்ட செயற்பாடுகள் எதுவுமே அவர்களது நோக்கத்தை அடையச்செய்யவில்லை.

மாறாக மக்கள் எழுச்சியுடன் தங்கள் மாறாத சுதந்திர வாழ்வுக்காக மரணித்த மாவீரர்களின் நினைவு நாளை வெகு சிறப்பாக அனுஷ்டித்தனர்.

இவ்வாறுதான் புலம் பெயர்ந்த நாடுகளில் வாழ்கின்ற தமிழ் மக்கள் தாங்கள் வாழ்கின்ற நாடுகளில் அதாவது லண்டன், சுவிஸ்,இத்தாலி, கனடா,ஜேர்மன், தென்னாபிரிக்கா,சுவீடன், அவுஸ்திரேலியா, அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளில் புலம் பெயர்ந்து வாழ்ந்து வரும் எமது மக்கள் மாவீரர் நாளை மிகவும் எழுச்சியுடன் கடைப்பிடித்தனர். வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த அந்த நாள் தமிழ் உள்ளவரை , தமிழர் உள்ளவரை மறக்க முடியாத எழுச்சி மிக்க புனித நாளாகக் கொண்டாடப்படும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. புலம் பெயர்ந்தும் தங்களது தாயக மண்ணின் விடுதலைக்காகப் போராடிச் சாவினைத் தழுவிக்கொண்ட



பல எதிர்ப்பு நடவடிக் கைகளுக்கு மத்தியில் மேற்கொண்டனர்.

அந்த வகையில் அண்மையில் இடம்பெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகளும் அவ்வாறே தேசவிடுதலைக்காகப் போராடி உயிர் நீத்த தங்களது உறவுகளுக் குரிய உன்னதமான அந்தப் புனிதநாளை சிறப்பாக அனுஷ்டிக்க யாழ்ப்பாணம் உள்ளிட்ட தயாகத்திலுள்ள ஏனைய இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேச மக்கள் தயாரானபோது இராணுவமும்அதனோடு சேர்ந்து இயங்கும் ஆயுதக்குழுக்களும் மேற்கொண்ட நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியது.



இவர்கள் அந்த மாவீரர் நாள் நினைவுகளை முடக்குவதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் எரிச்சலை தோற்றுவித்ததாகவே காணப்பட்டது. இறந்துபோனவர்களுக்காக மேற்கொள்ளப்படும் ஒரு நிகழ்வினைத் தடுக்க இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கைகள் கண்டிக்கத்தக்கவையாகக் காணப்பட்டன.

இருந்தும் எழுச்சி கொண்ட தமிழ் மக்கள் முன் அவர்களின்அனைத்துச் செயற்பாடும் பிசுபிசுத்துப்போனது. நவம்பர் 21 முதல் 27வரை மக்கள் எழுச்சி நாளாக மிகச் சிறப்பாகக் கடைப்பிடித்தனர்.

மாவீரர்களின் நினைவு நாளை அந்த மக்கள் நினைவு கூர்ந்த விதத்திலிருந்து அவர்களின் மனவெழுச்சிகளைப் புரிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது.

நாங்கள் வாழவேண்டும் என்பதற்காக தங்கள் வாழ்வை முடித்துக்கொண்ட, நாங்கள சுவாசிக்க வேண்டும் என்பதற்காக தங்கள் சுவாசத்தை நிறுத்திக்கொண்ட மாவீரர்களின் இந்தப் புனிதர்களின் நாள் இந்த உலகில் என்றும் எழுச்சிமிக்க புனித நாளாகத் தமிழர்களால் அனுஷ்டிக்கப்படும் அதனை எந்தச் சக்தியாலும் எந்தச் செயற்பாட்டினாலும் எதுவுமே செய்ய முடியாது என்பது இந்த மாவீரர்நாள் நிகழ்வுகளை இராணுவ ஆக்கிரமிப்பு பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களும், புலம் பெயர்ந்து வாழ்ந்து வரும் மக்களும் மேற்கொண்டதிலிருந்து புரிந்துகொள்ளலாம்.

# மங்களவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் சமாதானப் பொறுப்பு

இனப்பிரச்சினை தொடர்பான விவகாரங்களைக் கையாளும் பொறுப்பு மகிந்த ராஜபக்ஷ அரசின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன. இதற்கான முதல் முயற்சியாக முதலில் அவர் இந்தியாவுக்கும் பின்னர் இணைத்தலைமைகள் நாடுகளிற்கும் பயணம் செய்து அந்நாடுகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இனப்பிரச்சினை விவகாரத்தில் மங்கள சமரவீரவிடம் சனாதிபதி சந்திரிகாவும் ஒரு பொறுப்பை ஒப்படைத்திருந்தார். அதாவது அவர் "சமாதானத்துக்கான" தீவிர யுத்தம் ஒன்றை நடத்திக்கொண்டு சமகாலத்தில் "வெண்தாமரை இயக்கம்" என்ற பெயரில் சிங்கள மக்கள் மத்தியில் சமாதானம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அது செற்பட்டதாகக் கூறப்பட்டது.

இந்த இயக்கத்துக்கு தலைமை வகித்தவர் மங்கள சமரவீர ஆவார்.

அவர் பல்வேறு பகுதிகளிலும் சமாதானத்தின் பெயரில் விழாக்களை நடத்திய அதேவேளை தமிழ் மக்களின் மனங்களை வெல்வதற்காக யாழ் நூலகத்திற்கென புத்தகமும் செங்கல்லும் சேர்த்துக்கொண்டு திரிந்தார்.

அதாவது தமிழ் மக்களின் பூமியை சுடுகாடாக்கிக் கொண்டும் தமிழ் மக்களை இருப்பிடங்களைவிட்டு அலையவும் விட்ட யுத்தத்தை மூடி மறைக்க இந்த இயக்கம் நடத்தப்பட்டது. இப்பொழுது மகிந்த ராஜபக்ஷ சமாதான முயற்சிகளுக்கு விரோதி என்ற வகையில் சர்வதேசத்தில் எழுந்துள்ள கருத்தை மாற்றிய மைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ள தால் வெளிவிவகார அமைச்சர் என்ற வகையில் மங்கள சமரவீரவிடம் இந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

முன்னைய வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு தமிழ் மக்களுடைய போராட்டத்திற்கு பயங்கரவாதமென்றும் அதற்குத் தலைமை தாங்கிய புலிகளைப் பயங்கரவாதியென்றும் நிரூபிக்க வேண்டிய தேவை இருந்தது. ஆனால் இப்போதுள்ள வெளிவிவகார அமைச்சருக்கு மகிந்த ராஜபக்ஷ



சமாதான விரோதி என்றவகையில் ஏற்படுத்தப் பட்டுள்ள கருத்துருவாக்கத்தை நீக்கவேண்டிய தேவை எழுந்துள்ளது.

தனிப்பட்ட மகிந்த ராஜபக்ஷவாகவோ அல்லது பொதுசன ஐக்கிய முன்னணியின் சனாதிபதி மகிந்தவாகவோ இருந்திருந்தால் தேர்தலில் வெற்றி பெற்ற மறுகணமே அது ஒன்றும் பெரிய விடயமாக இருந்திராது.ஆனால் மகிந்தவுடன் கூட்டுச் சேர்ந்துள்ள ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய பேரன்றவற்றின் நிலைப்பாடுதான் சங்கடமான நிலையைத் தோற்றுவித்துள்ளது.

சமாதான முயற்சிகளிலிருந்து நோர்வேயை விலக்க வேண்டும் என ஜே.வி.பி வலியுறுத்துவது இணைத் தலைமை நாடுகளுக்கு பிரச்சினைக்குரிய விடயமாகும். ஏனெனில் அந்நாடுகளே நோர்வேயை இம்முயற்சியில் ஈடுபடுத்தியுள்ளன.

சமாதான முயற்சியில் ஏற்பட்டுள்ள சந்தேகமானது சிறிலங்காவின் வர்த்தகத்தையும் பாதித்துள்ளது. பங்குச் சந்தை விலைவீழ்ச்சி இதனை வெளிப்படுத்துகிறது.

இதற்கு மேலாக புதிய அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை, பொருளாதாரக் கொள்கை என்பன குறித்த மேற்குலக நாடுகள் சந்தேகம் கொண்டுள்ளமையே மிகவும் பெரிய பிரச்சினையாகும். ஏனெனில் "மகிந்த சிந்தனைகள்" என்ற பெயரில் வெளியிடப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனமானது அந்நாடுகளுக்கு சாதகமாக இல்லை.

ஆனால் தேர்தல் வெற்றிக்காக மட்டும்தான் மகிந்த சிந்தனை என்ற பெயரில் ஜே.வி.பியைத் திருப்திப்படுத்தக் கூடியவகையில் தேர்தல் விஞ்ஞாபனம் முன்வைக்கப் பட்டதாகவும் ஆனால் பதவியேற்றதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளே கடைப்பிடிக்கப்படுமென்றும் கூறப்பட்டு வந்தது. அது உண்மைதானா? என்பதை தெளிவுபடுத்த வேண்டிய தேவையும் இப்பொழுது எழுந்துள்ளது.

இந்தத் தெரிவை யாரிடம் ஏற்படுத்த வேண்டியுள்ளதென்றால் சிங்கள மக்களிடமோ தமிழ் மக்களிடமோ அல்ல. ஏனெனில் சிங்கள மக்களை அடுத்த தேர்தலின் போதுதான் இவர்களுக்குத் தேவை. அவ்வாறு இல்லாவிடின் நிறைவேற்றவே முடியாத வாக்குறுதிகளையெல்லாம் இவர்கள் வழங்கியிருக்க மாட்டார்கள். தமிழ் மக்களுக்கு தெளிவு படுத்த வேண்டிய அவசியம் இவர்களுக்கு இல்லை.

ஆனால் இவர்கள் ஆட்சியைக் கொண்டுநடத்த உதவி வழங்கும் நாடுகளின் தயவு தேவை. எனவே அவர்களுக்கு தெளிவு படுத்தவே மகிந்த ராஜபக்ஷ விரும்புகிறார். இதற்கு அவர் மங்கள சமரவீரவை தெரிந்தெடுத்திருக்கிறார்.

மங்கள சமரவீர ஜே.வி.பிக்கும் கூட்டாளியாக இருப்பதால் வெளிநாட்டுக் கொள்கை பொருளாதாரக் கொள்கைகள் என்பவற்றில் ஜே.வி.பியிடமிருந்து சில விட்டுக்கொடுப்புக்களைப் பெற உதவக் கூடியவராக அவர் இருப்பார். இவ்இரு விடயங்களிலும் ஓர் இணக்கப்போக்கைக் கண்டுவிடுதலே இவர்களின் இந்த முயற்சியின் நோக்கமேயொழிய இனப்பிரச்சினையைத் தீர்க்க எடுக்கும் முயற்சியாக அது அமைந்துவிடப் போவதில்லை.

ஏனெனில் அவ்வாறான முயற்சிக்கு முதலில் செய்ய வேண்டியது புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான முயற்சியேயாகும்.

**வேலவன்**

## நேர்நோக்கு

# மகிந்த வெளிப்படுத்தும் துக்குறிகள்

சிறிலங்கா அரசியலில் இதுவரை சந்தித்திராத மிக நெருக்குவாரமான ஒரு சூழ்நிலையில் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இருக்கின்றார் என்பது தான் சரியானதும் மிக பொருத்தப் பாடானதுமாகும்.

இதுவரை காலமும் சமாதான காலத்திற்கு முன்பும் அதன் பின்பும் விடுதலைப் புலிகளால் ஒரு திட்டவட்டமான தமது நிலைப்பாடுகள் குறித்த அறிவிப்பு மிக உறுதியாக விடுக்கப்பட்டிருக்கவில்லை. காரணம் விடுதலைப்புலிகள் சிறிலங்கா அரசுக்கு மிகப் பெரிய சந்தர்ப்பத்தை இதனூடாக வழங்கியிருக்கின்றார்கள்.

நடைபெற்று முடிந்த தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வீழ்ந்தார் என்பதற்கு அப்பால் மகிந்த ராஜபக்ஷ மிகப்பெரிய பொறிக்குள் சிக்கியிருக்கின்றார் என்பதுதான் உண்மை.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுக் களை நடத்தத் தயார் என்ற மகிந்த ராஜபக்ஷ வினுடைய தேர்தல் கால வாக்குறுதிகளுக்கும் தேசியத் தலைவரின் மாவீரர் தின உரையின் பின்பு மகிந்தவின் பேச்சுக்கான இணக்கத்திற்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன.

மகிந்த சனாதிபதியாகப் பதவியேற்ற பின்பு அவரது நகர்வுகள் சந்தேகத்துக்குரியதாக இருக்கிறது.

இதுவரை காலமும் அமைதிப்பணியில் உழைத்த நோர்வேயை புறந்தள்ளிவிட்டு மகிந்த தனக்குச் சார்பான சாதகமான நாடுகளின் அனுசரணையில் பேச்சுக்களை முன்னெடுக்கும் ஒரு திட்டம் தொடர்பான நகர்வுகளையே மேற்கொள்வதுபோல தோன்றுகிறது.

பிராந்திய விடயங்களில் தன்னை வல்லரசாக வெளிப்படுத்தும் இந்திய கொள்கை வகுப்பாளர்களும் இந்திய புலனாய்வுத் துறையினரும் இலங்கையின் அரசியல் நிலைப்பாட்டைத் தீர்மானிக்கும் சக்தியில் செல்வாக்குச் செலுத்தும் நிலையில் மகிந்த இதற்கு சாதகமான ஒரு நகர்வை மேற்கொள் கின்றமை மறுப்பதற்கில்லை.

மகிந்தவின் இவ்வாறான நிலைப் பாடுகள் வலுப்பெறுமாயின் நோர்வே தனது அனுசரணையாளர்கள் என்ற நிலையிலிருந்து பின்வாங்கும் நிலை ஏற்படலாம்.

எனவே மகிந்த சனாதிபதியானதும் அவர் மேற்கொண்ட பல நகர்வுகள் மிகவும் நுணுக்கமாக நோக்கவேண்டியதாகவே இருக்கிறது.

சிறிலங்காவின் பிரதமர் தெரிவும் மகிந்தவின் சிந்தனைக்கமைவாகவே நடந்தேறியிருக்கிறது.

இறுதிச் சந்தர்ப்பத்தில் ரட்ணசிறி விக்கிரமநாயக்க பிரதமராகத் தெரிவு செய்யப் பட்டிருக்கின்றார்.

ரட்ணசிறி விக்கிரம நாயக்கவின் நிலைப்பாடுகள் மிக மோசமானதும் கடந்த காலங்களில் போர்நிறுத்த உடன்பாட்டை மிக மோசமாக விமர்சித்து வந்தவரும் சமாதான முயற்சிகளுக்கு மாற்றுக் கருத்துக்களை முன் வைத்து வந்தவரும் கடும் இனவாத கோட்பாட்டாளருமாக இந்த ரட்ணசிறி விக்கிரமநாயக்க முத்திரை பதித்தவர்.



மகிந்த பதவியேறிய பின்பு பாதுகாப்புத் துறையில் செய்திருக்கின்ற மாற்றங்கள் சிலவும் நோக்கத்தக்கது. தனது சனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் அதிகாரிகளை மாற்றம் செய்ததும் கடற்படையின் அதிகாரிகளின் மாற்றங்களும் குறிப்பாக காவல்துறை மற்றும் இராணுவ தலைமைகளில் மாற்றங்கள் செய்ய முயன்றிருப்பதும் குறிப்பிடப்பட வேண்டிய விடயங்கள். அத்தோடு தனது பதவியேற்ற பின்னர் முப்படை தளபதிகளுடனான சந்திப்பின் போதும் கூட மகிந்த கரையோரப் பாதுகாப்புப் போர் நிறுத்த உடன்பாடு குறித்த விடயங்களிலேயே கூடிய கவனம் எடுத்து கருத்துக்களை முன்வைத்திருந்தார்.

இந்த நிலையில்தான் கதிர்காமரின் கொலைக்குப் பின்னர் நடைமுறைக்கு வந்த அவசரகாலச் சட்டம் மேலும் ஒரு மாதத்திற்கு சென்ற வாரத்திலிருந்து நீடிக்கப்பட்டுள்ளது. இந்த அவசரகாலச் சட்ட காலப்பகுதியில் சந்திரிகா அரசு தாயகப்பகுதிகளில் மேற்கொண்ட அடாவடி நடவடிக்கையின் கருவியாக பயன்படுத்திய இந்த அவசரகாலச் சட்டம் மகிந்தவின் அரசிலும் மேலும் ஒரு மாதம் நீடிக்கப்பட்டுள்ளது. இந்தச் செயற்பாடானது சிங்கள அரசியலில் தமிழருக்கான தீர்வு இல்லை என்ற செய்தியைச் சொல்லாமல் சொல்லி நிற்கின்றது.

மகிந்தவின் 6ஆவது நாடாளுமன்ற கூட்டத் தொடரின் ஆரம்ப உரைதான் தமிழர்களின் சுயநிர்ணய போராட்டத்திற்கு எதிரானது மட்டுமல்லாது பலமானதுமான ஒரு நிராகரிப்பதாகவும் இருக்கிறது.

தமிழர்கள் தமது விடுதலையின் அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கின்ற சுயநிர்ணய உரிமையை முற்றாகவே நிராகரித்து மகிந்த கருத்துக்களை முன்வைத்தார்.

மகிந்தவின் இந்த உரையில் உள்ளடக்கப்பட்ட அம்சத்திற்கூடாக சமாதான முயற்சி எந்தளவில் சாத்தியப்படும். விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனையவர்களுடனும் மகிந்தவின் சமாதானப் பேச்சுக்கள் நடத்தப்படுமாயின் அதன் பெறுபேறுகளை பற்றி எப்படியிருக்கும் என்பது தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தான் மகிந்த முன் வைக்கும் அரசியலமைப்பு யோசனைகள் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு உடன் பட்டு விடுமா என்ற பலத்த கேள்வி உருவாகின்றது. ஏனென்றால் இவ்வாறு பல அரசியலமைப்பு யோசனைகளை தமிழ் மக்கள் கடந்த காலத்தில் கண்டு ஏமாற்றமடைந்தவர்கள்.

இவ்வாறுதான் அரசியலமைப்பு யோசனைகள் முன்வைக்கப்படுகின்றன என்ற பெயரில் கடந்த காலங்களில் போருக்கான முஸ்தீவுகள் முன்னைய அரசுகளால் முன்னெடுக்கப்பட்டன. இதையே தான் இன்று மகிந்தவின் அரசும் மேற்கொண்டு வருகிறது என்ற உண்மை தெளிவாகி வருகிறது.

விடுதலைப்புலிகளின் வான்காப்புப் படையின் வளர்ச்சியானது சிறிலங்காவுக்கு மாத்திரமன்றி இந்தியாவுக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்ற பரப்புரையின் ஊடாக இந்தியாவிலிருந்து பாதுகாப்பு கலங்களை கொள்வனவு செய்யும் முயற்சியில் இப்பொழுது மகிந்த அரசும் ஈடுபட்டுள்ளது.

இதனடிப்படையில் தான் இந்திய பாதுகாப்புக் குழுவொன்று சிறிலங்காவுக்கு அழைக்கப்பட்டிருக்கிறது.

இதன் முதல் கட்டமாக விமான பாதுகாப்புக் கருவிகள் சிலவற்றை இந்தியா சிறிலங்காவுக்கு வழங்கியுள்ளது.

இதன் அடுத்த கட்டத்தில் போர் நிறுத்த உடன்பாடு குறித்த சில உதவிகளையும் இந்தியாவிடமிருந்து மகிந்த பெற்றுக் கொள்ளவிருக்கின்றார்.

இவ்வாறு தனக்கே உரிய இனவாத கொள்கையில் அரசியல் இராணுவ வியூகங்களை நகர்த்திய மகிந்த தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் மாவீரர்தின உரையின் பின்பு பன்னாட்டு பிரமுகர்களுடன் விடுதலைப்புலிகளை பேச்சுக்கு விடுமாறு அழைப்பு விடுவதான ஒரு செய்தியினையும் வெளியிட்டிருக்கின்றார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடித்த மகிந்த அரசு போர் நிறுத்தத்தை மீளாய்வு செய்ய எத்தனிப்பது கூட கேள்விக்குரிய விடயமாகவே இருக்கிறது.

பன்னாட்டு பிரதிநிதிகளுடனான சந்திப்பில் ஒரு சமாதான பேச்சுக்கான தோற்றத்தை காட்டும் மகிந்த கடந்த கால அரசியலாளர்களை விட எதனை சாதிக்கப்போகின்றார்.

எவ்வாறாயினும் மகிந்தவின் அரசியல் இராணுவ நகர்வுகள் குறிப்பிடக் கூடியளவுக்கு ஏற்புடையதாக இல்லை.

இருப்பினும் மகிந்த அரசின் நகர்வுகள் எவ்வாறு இருப்பினும் அடுத்த ஆண்டின் விடுதலைப்புலிகளின் நகர்வு கேள்விகள் பலவற்றுக்கு விடை சொல்லும் ஆண்டாக இருக்கும் என்பது மட்டும் உறுதி.

**அசிதன்**

தமிழீழ தனியரசை நோக்கிய கட்டுமானங்களில் தமிழர் தாயகம் பல துறைகளில் அதீத வளர்ச்சிபெற்று வருகிறது. அந்த வகையில் அதன் தனியரசு நோக்கிய வளர்ச்சிப் பாதையின் ஒரு அங்கமாகத்தான் அண்மையில் கிளிநொச்சி அறிவியல் நகரில் ஆரம்பிக்கப்பட்ட (weather monitoring center) காலநிலை அவதானிப்பு நிலையமாகும்.

எமது தாயக மக்களை பல்வேறு இயற்கை அனர்த்தங்களிலிருந்தும் பாதுகாப்பதற்கு இந்நிலையம் பெரும் பங்காற்றும். அந்த வகையில் காலநிலை அவதானிப்பு நிலையத்தின் செயற்பாடுகள் தொடர்பாக அதன் உருவாக்கத்தில் பெரும் பங்காற்றிய புலம்பெயர்ந்து வாழ்ந்துவரும் குகதாசன் கண்ணன் அவர்கள் தரும் விளக்கங்கள்.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட பின்பு எமது தாயகத்தில் ஏற்பட்ட இழப்புக்களின் விளைவால் இனி இவ்வகையான இயற்கை அனர்த்தத்திலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக முதலில் சுனாமியை அவதானிப்பதற்கான ஒரு ஒழுங்குபடுத்தலை ஏற்படுத்தத் திட்டமிட்டு கணினி மென்பொருள் ஒன்றை கொண்டுவந்து கணினியோடு இணைத்து சுனாமியை மட்டும் அவ

அதில் பிரதானமாக கடலடியில் ஏற்படுகின்ற பூகம்பம், மற்றது கடலடியில் இடம்பெறும் எரிமலை வெடிப்பு, இதைவிட நிலநடுக்கத்தாலும் ஏற்படலாம். இதை அறிவதற்கு மூன்று நிறுவனங்கள் உண்டு.

1. I.O.C
2. P.T.W.C
3. U.S.C.S

இந்த மூன்று அமைப்புகளோடு 24 நாடுகள் சேர்ந்து ஹவாய் தீவில் அந்த நாடுகளினுடைய 12இற்கு மேற்பட்ட செயற்கைக் கோள்களின் உதவியுடன் ஒரு வலைப்பின்னலில் முழு உலகையும் கண்காணித்து வருகின்றன. இதன்படி உலகில் எங்கேனும் ஓர் இடத்தில் சாதாரண ஒரு நிலநடுக்கம் ஏற்பட்டால் கூட அதாவது 01.5ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டால் கூட அவர்களுக்குத் தெரியும்.

இதனைக் கவனத்தில்கொண்டுதான் லண்டனிலிருந்து ஹவாய் தீவிலுள்ள நிலையத்தோடு தொடர்புகொண்டு எங்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று கேட்டபோது அதற்கு அவர்கள் முதலில் மறுத்தார்கள். எதுவாக இருந்தாலும் தாங்கள் இலங்கை அரசினூடாகத்தான் செய்வோம் என்றார்கள்.



தரவுகளையும் இணையத்தளம் மூலம் நாங்கள் உள்வாங்கி இங்குள்ள கணனிகள் மூலம் பரிசீலனை செய்து 05.5ரிச்டர் அளவுக்கு மேல் உள்ள நிலநடுக்கங்களை எங்களுக்கு உடன் அறியப்படுத்தும். (பதினைந்து நிமிடத்திற்கு ஒரு முறை ஹவாய் தீவிலிருந்து நாம் தகவல்களை பெற்றுக்கொள்வோம்) இது எங்களுடைய கணனியில் எச்சரிக்கை ஒலியுடன் எழுத்து வடிவிலும் பெற்றுக்கொள்வோம். அதே நேரம் இங்குள்ள கண்காணிப்பாளர் ஒருவர் நித்திரையில் இருந்தால் கூட அந்த சத்தத்தைக் கேட்டு எழுந்து உடனே அவர் அடுத்த கட்டமாக கணனி மூலம் உலக வரைபடத்தை எடுத்துப் பார்த்து இந்த நிலநடுக்கம் எங்கு இடம்பெற்றுள்ளது. கடலிலா நிலத்திலா என்பதை அறிந்து கடலடியில் நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தால் அது இலங்கைத்தீவுக்கு அண்மையில் ஏற்பட்டிருக்கின்றதா என்பதையும் அறிந்து அது எவ்வளவு அளவுகோலில் உள்ளது என்பதையும் அறிந்து இங்குள்ளவர்களுக்கு எமது நிலையத்தின் மூலம் அறிவிப்பு விடுக்கப்படும்.

இவ் எச்சரிக்கையை நாங்கள் மூன்று வகையாகப் பிரித்துள்ளோம். அதாவது பச்சை, மஞ்சள், சிவப்பு என்று. இதில் பச்சை சமிக்ஞை லிருந்து அறிந்து எமது மக்களுக்கு முன் எச்சரிக்கையாக விடுப்போம் என்றார்.

இக்காலநிலை அவதானிப்பு நிலையத்தை பொறுத்தவரையில் முதலில் நாங்கள் கிளிநொச்சியில்தான் ஆரம்பித்துள்ளோம். இதனால் ஏனைய மாவட்ட மக்கள் யோசிக்கக்கூடாது.எங்களுடைய பிரதேசங்களில் ஆரம்பிக்கவில்லை என்று இனிவருங்காலங்களில் தமிழர் தாயகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் சிறு சிறு காலநிலை அவதானிப்பு நிலையத்தை ஆரம்பிக்கவுள்ளோம். இப்போது காற்றின் ஈரப்பதன், காற்றழுத்தம், இடிமின்னலுடன் மழையா? சாதாரண மழையா? புயல் போன்ற தகவல்களை அறிந்து 24மணித்தியாலங்களுக்கு முன் எதிர்வு கூறக்கூடியதாக ஒழுங்குபடுத்தி யுள்ளோம்.




# இயற்கை அழிவிலிருந்து மக்களைப் பாதுகாக்கும்

## தமிழீழ காலநிலை அவதானிப்பு நிலையம்

தானித்துக் கூறக்கூடிய ஒரு ஒழுங்குபடுத்தலைத்தான் நாங்கள் முதலில் சிந்தித்தோம்.

இதன்படி இந்தத் தகவலை அரசியல் துறைப் பொறுப்பாளர் ஊடாக தேசியத் தலைவருக்கு தெரியப்படுத்தியபோதுதான் அவர் கூறினார், ஏன் நாங்கள் எங்களுடைய வளங்களை பயன்படுத்தி ஒரு காலநிலை அவதானிப்பு நிலையத்தை ஆரம்பிக்கக்கூடாது? என்று. எனவேதான் தமிழீழத்தில் இவ்வாறானதொரு நிலையம் இன்மையால் தலைவரினது சிந்தனையின் செயல் வடிவமாகத்தான் இந்த காலநிலை அவதானிப்பு நிலையம்.

**சுழியன்**

நாங்கள் லண்டனிலிருந்து இங்கு வரும்போது இவ்வாறான ஒரு சிந்தனையோடு வரவில்லை. ஆனால் இங்கு வந்ததன் பின்புதான் தலைவரின் ஆலோசனைக்கு அமைய இத்துறைசார்ந்த இந்நிலையத்தை இருக்கின்ற வளங்களைக்கொண்டு ஆரம்பித்தோம். இந்நிலையத்தின் செயற்பாடுகள் இரண்டுவகையானவை.


அதாவது ஒன்று சுனாமி அவதானிப்பு நிலையம், மற்றது காலநிலை அவதானிப்பு நிலையம். இதில் மூன்று பேர் கடமையாற்றுகிறார்கள். இவர்களில் ஒருவர் காலநிலை அவதானிப்புப் பிரிவிலும், ஏனைய இரண்டு பேரும் சுனாமி அவதானிப்புப் பிரிவுகளிலும் 24மணி நேரமும் கடமையில் இருப்பார்கள்.

முதலில் சுனாமி தொடர்பான எமது செயற்பாடு எப்படி இருக்குமென்று பார்ப்போம். அதாவது சுனாமி பல வகையில் ஏற்படலாம்.

ஆனால் நாங்கள் தொடர்ந்தும் தொடர்புகளை ஏற்படுத்தி சுனாமி, மற்றும் இயற்கை அனர்த்தம் தொடர்பாக மக்கள் அறிவது ஒரு இராணுவ இரகசியம் சார்ந்த விடயமல்ல. இதுவொரு மனிதாபிமான உதவி. எனவே இலங்கையிலுள்ள வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் நலன் கருதி நீங்கள் இவ் உதவியைச் செய்ய வேண்டும் என்று மீண்டும் கேட்டபோது அதற்கு இறுதியில் அவர்கள் சம்மதித்தனர்.


இதற்கு முதல் அவர்களுடன் முதலில் தொடர்புகொண்டு எங்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று கேட்டபோது அவர்கள் கூறிய முக்கியவிடயம் என்னவெனில் இலங்கை அரசு கூட இதுவரை தங்களோடு தொடர்புகொண்டு இத்தகைய உதவியை கேட்கவில்லை என்றார்கள். இன்னும் தென் இலங்கையில் இப்படியொரு ஒழுங்குபடுத்தல் இல்லையென்றுதான் கூறவேண்டும்.

எனவே இதன்படி ஹவாய் தீவு நிலையம் தங்களது 12இற்கு மேற்பட்ட செயற்கைக்கோள்கள் மூலம் பெற்றுக்கொள்கின்ற அனைத்துத்




என்றால் நிலநடுக்கம் இடம்பெற்றுள்ளது என்றும், 05.5சமிக்ஞை புள்ளிக்கு மேல் என்றால் மஞ்சள் என்றும், 08புள்ளிக்கு மேல் என்றால் சிவப்பு சமிக்ஞை என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இதில் 08 புள்ளி என்பது கடும் ஆபத்து, 05.5புள்ளிஎன்றால் அது கடல் கொந்தளிப்பாகக் காணப்படும் நிலையாக இருக்கும்.

இதன்படி தமிழீழக் காலநிலை அவதானிப்பு நிலையம் பெற்ற தகவல்களை இங்குள்ள ஊடகங்கள் ஏனைய வசதிகளோடு எமது மக்களுக்குத் தெரியப்படுத்தி அவர்களை பெரும் ஆபத்திலிருந்து காப்பாற்றுவோம் என்றவரிடம் இனியொரு சுனாமி அனர்த்தம்



ஏற்பட்டால் எமது மக்களின் உயிரிழப்பை தவிர்த்துக்கொள்ளலாமா எனக் கேட்டபோது சடுதியாக ஆம் நிச்சயமாக என்றார். அவர் மேலும் கூறுகையில்,

குறைந்தது இரண்டு மணித்தியாலங்களுக்கு முன் நாம் தகவல்களை ஹவாயி



ஆனால் காலநிலை மாற்றங்களை துல்லியமாக அறியவேண்டுமென்றால் அதற்கு எங்களுக்கென தனியான செயற்கைக்கோள் தேவை இருந்தும் நாங்கள் சாதாரணமாக மழை, வெயில் போன்ற காரணிகளில் ஏற்படுகின்ற மாற்றங்களை அறியக்கூடியதாக இருக்கிறது.

நவீன தொழில்நுட்ப வசதிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கமுடியாது இருந்தாலும் எங்களிடம் உள்ள வசதி வாய்ப்புக்களைக் கொண்டு எமது மக்களை பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம் என்றார் கண்ணன்.

# மகிந்தவுக்கு ஓர்மடல்...



பிரியமுடன் மகிந்த மாமாவுக்கு!
எப்படியிருக்கிறீர்கள்?
சொல்லிவைத்த மாதிரி சோக்கான வெற்றிதான்.
சபாஷ்!
எழுபதில் தொடங்கிய உங்கள் அரசியல் வாழ்வில்
எதிர்பாராத வெற்றியை எட்டியிருக்கிறீர்கள்.
அதிலும் சிறப்பு - உலகில், பிறந்த நாளன்று
அதிபரான அதிர்ஷ்டக்காரன் நீங்கள் ஆகிறீர்கள்.
எங்களுக்கு எப்போதோ தெரியும்
நிச்சயமாக நீங்கள் வருவீர்களென்று.
ஏனெனில்,
நீலநிறக்காரராகிய நீங்கள் கைகோர்த்து நிற்பது
சிவப்புச் சட்டை சண்டியரும் மஞ்சள்காவி மண்டையருமாச்சே.
சுருங்கச் சொன்னால்
பேரினவாதிகளின் பேராதரவோடு
அரியணையில் அமர்ந்துள்ளீர்கள்.
பாவம் ரணில் அங்கிள்,
அறிக்கை விட்டே கவுண்டுபோனார்.
"மிலிந்த" பார்த்த மலிந்த வேலையால்
வேதனை ஏனோ அவருக்குத்தான் இல்லையா?
இதைத்தான் இப்படித்தான் நடக்கவேண்டும் என
நாங்களும் எதிர்பார்த்தோம்.
ஏன் தெரியுமா?
இனியும் இழுபட முடியாது
இனி இழுபடவும் கூடாது.
மேலும் அங்கிள் அறிவது!
உங்கள் அந்தரங்கத்தை அலசுவதாக ஆத்திரப்படவேண்டாம்.
சிநேகபூர்வமாகக் கேட்கிறேன் செல்லுங்கள் அங்கிள்
"ஹெல்பிங் அம்பாந்தோட்டை"யில் வேட்டை எப்படி?
சும்மா "பொக்கற்மணி"க்காக எடுத்திருப்பீர்கள் என அங்கிள்
பார்வைக்கு கனவானாய் காட்சிதரும் - நீங்கள்
தேவைக்குக் கையாடல் செய்தல் தகுமா?
சீதனமும் சேர்க்கத் தேவையில்லை
ஏனெனில்,
நீங்கள் பெற்றது மூன்றும் ஆண்சிங்கங்களாச்சே.
பிறகு ஏன்? அள்ளுகொள்ளையாக இப்படி அடித்தீர்கள்?
அங்கிள்! அம்பாந்தோட்டை உங்கள் சொந்த ஊரல்லவா?
அந்த ஊரின் அபிவிருத்திக்கு அனைத்துலகம் தந்தவற்றில்
அள்ளி எடுத்தபோது உங்களுக்கு உறுத்தவில்லையா?
இது அரசியலில் சகஜம் என்று சமாளித்துக்கொள்வீர்கள்.
ஆனால், நாங்கள் இதை இப்படிப்பார்க்கின்றோம்.
அதாவது,
உங்கள் ஊருக்காய் வந்ததிலேயே இப்படிச் சுரண்டினால்
எங்கள் ஊருக்காய் உலகம் தருவதை எப்படிச் சூறையாடுவீர்கள்?
ஐயகோ, இது அபச்சாரம் அங்கிள்!


நிற்க,
முன்பு ஒரு காலம் ஒரு முற்போக்குவாதியென
உங்களை நாங்கள் நினைத்திருந்தோம்.
ஆனால், பின்புதான் தெரிந்தது
உங்களுக்குள் தூங்கிக் கிடக்கும்
அந்த "பௌத்தபேரினவாத பக்ஷ"வின் மூஞ்சி
அதனால் தான் என்னவோ

அன்று ஒரு நாள் ஞாபகம் இருக்கிறதா?
சுனாமியின் பின்னர் சில பினாமிகளோடு
நீங்கள் வடக்கே வந்தபோது
சோற்றுப் பார்சலாலும், செருப்புக்கட்டையாலும்
ஆலாத்தி எடுத்து மக்களால் அதிருப்தி காட்டப்பட்டது.
ஏன் அது மட்டுமா?
பரப்புரைப் பணிக்காக பலாலிவரை வந்த உங்களால்
கடைசி கச்சேரிவரையாவது வரமுடியவில்லையே.
ஆக, நடேஸ்வராவில் வைத்து நாற்பது பேரைச்
சந்தித்துவிட்டு நடையைக் கட்டவேண்டியிருந்தது.
அந்த நாற்பது பேர்கூட "தாடிமாமா"வின்
கைக்கூலிகளால் கையூட்டுக்கொடுத்து கையோடு அழைத்து
வரப்பட்டவர்கள்தான் என்பது
எமக்குப் பிந்திக்கிடைத்த செய்தி.
ஏன் அங்கிள் இந்த நிலைமை?
வேறு,
"நான் தான் சிறிலங்காவின் சின்ன பண்டா"எனச்சொல்லி
அண்மையில் அதீதமாக ஆனந்தப்பட்டீர்களாம் மெய்யா அங்கிள்?
ஆம்! அநேகர் ஆட்சியைப் பிடிப்பதற்காக
சாட்டுக்காவது தமிழர்களை தலைதடவுவார்கள்.
ஆனால் நீங்களோ,
பச்சை இனவாதம் பேசியே பதவிக்கு வந்தீர்கள்
அந்தவகையில் பார்க்குமிடத்து
பண்டாவுக்குப்பின் இப்படி ஒருவர் உண்டா என்றால்
உண்மையில் அது நீங்கள் தான் அங்கிள்.
அங்கிள்,
வடக்கு என்றுமே தெற்கை ஏப்பமிட எத்தனித்ததில்லை.
ஆனால், தெற்குத்தான் வடக்கை வம்புக்கு இழுக்கிறது.
தென்னிலங்கையர் தெளிவாக ஒன்றை தெரிந்துகொள்ளவேண்டும்.
சிங்களத்தேசியம் சிங்கக்கொடியோடு சீறிநிற்பதால் தான்
தமிழ்த்தேசியம் புலிக்கொடியோடு புரட்சிக்குப் புறப்பட்டது.
இதனால்தான் இலங்கைத் தேசியமும் இல்லாதுபோனது.
நாங்கள் கேட்பதெல்லாம்
நாங்கள் நாங்களாக நமது மண்ணில் நமது அடையாளங்களோடு
நமது தலைவிதியை நாமே தீர்மானித்தபடி
வாழப்போகின்றோம்.
உங்களிடம் உங்களுக்கானது ஒன்றையும் நாம் கேட்கவில்லை.
எங்களிடம் எங்களுக்கானதைத் தாருங்கள் என்றுதான் கேட்கின்றோம்.
தர்மத்தை ஏற்று நீங்களாகத் தராவிடின்,
அதர்மத்தை அழித்து நாங்களாகப் பெறுவோம்.

மேலும்,
சர்வதேச உணர்விற்கு சரியானமதிப்பளித்து
சமாதான வழிமுறையில் முடிந்தவரை முயன்றுபார்த்தோம்
பயன் ஏதும் கிட்டவில்லை.
பொறுமையே பொறாமைப்படுமளவிற்கு
பொறுத்தும்பார்த்தோம் நீங்கள் பொருட்டாய் எடுக்கவில்லை.
எனவே பொறுமையின் எல்லையில் நிற்கிறோம்
நோர்வே வளர்த்த சமாதானப்புறா நோகடிக்கப்பட்டது
உங்கள் தரப்பால்தான் - ஆனால்
எங்கள் தரப்பில் சமாதானத்திற்காக
சமாதியானவர்கள் எத்தனைபேர்'தெரியுமா?
இனியும் சுற்றிவளைக்காமல்
சுற்றறிக்கைவிடாமல்
சுருக்காய்ப் பதில் வேண்டும்.

வெட்டொன்று துண்டு இரண்டாக முடிவு சொல்லுங்கள்.
ஒன்று கதைக்குப் பின் செயல் இருக்கவேண்டும்.
அல்லது செயலுக்குப் பின் கதை இருக்கவேண்டும்.
இரண்டுமே இல்லை என்றால் நிலைமை மோசமாகும்.
பொறுமைக்கும் எல்லையுண்டு
எங்கள் தலைவன் சினந்தால்
உங்கள் தானைகள் தாங்காது.
அவரின் ஆணைக்காய் நாம் அனைவரும் எங்கள் அனைவதும்
தயாரே...
இறுதியாய் ஒன்று,
எப்பொழுதும் உங்கள் தோளில், அதிகாரத்தின் அடையாளமாகத்
தொங்கியபடி இருக்கும் அந்த வர்ணசால்வைத்துண்டு
எங்கள் கழுத்துக்களை கட்டிப்போட முயலுமானால்
அடித்துச் சொல்கின்றோம்
கொழும்பு கொழுந்துவிட்டெரியும்
இலங்கைத்தீவு இரண்டுபடும்
ஈழதேசம் உருவாகும் - எனவே
சண்டையா? சமாதானமா சரியான முடிவெடுங்கள்
எதற்கு நீங்கள் ரெடியோ? அதற்கு நாங்களும் ரெடி
இத்துடன் முடிக்கின்றேன்
இப்படிக்கு,
தமிழர்தேசத்திலிருந்து

தமிழர்கள் சார்பாக,
கா.பா.தமிழ்மாறன்.



## மண்ணின் மைந்தர்களின் கதை

# மாவீரன் 2ஆம் லெப்.சீனிவாசன்

# நான் உறங்கினாலும் என் சுடுகருவி உறங்காது



ஈழத்தின் விடுதலைப் போரில் புலிகளின் இராணுவ வளர்ச்சியையும் படைத்துறைசார் பலத்தையும் காட்டிய சமர் என்றால் அது ஜெயசிக்குறு சமரின் தொடர்ச்சியான சண்டைகளேயாகும்.

ஒரு நாளல்ல இரண்டு நாளல்ல சுமார் 02 வருடங்களாக அனைத்து விதமான நவீன படை மேலாண்மையைக் கொண்ட சிங்கள இராணுவத்துடன் எதிர்த் தாக்குதல் செய்து வெற்றிபெற்றதாகும்.

ஜெயசிக்குறு எதிர்ச் சமரானது சிங்கள மேலாண்மையின் படைச்சமநிலையை உடைத்தது என்பதோடு உலகத்தின் சில வல்லரசுகளின் படைத் துறை நிபுணத் துவங்களையும் போரிட்டு வெற்றிபெற்றது என்பதையே குறிக்கும்.

ஜெயசிக்குறு என்றதும் அந்த எதிர்ச்சமரில் எத்தனையோ போராளிகளினதும், மாவீர்களினதும் வீர வரலாறுகளும், வீரச்சாதனைகளும், தியாகங்களும், கொடைகளும் நினைவுக்குவரும். அதேபோலவே அந்தச்சண்டையில் நின்ற எத்தனையோ போராளிகளின் களவாழ்க்கையின் பகிடிகளும், நகைப்பிற்கிடமான செயல்களும் நீங்காத நினைவாகவுள்ளது.

அப்படிப்பட்ட பல நினைவுகளுள் முதன்மையாக உள்ளது. அந்தக்களத்தில் ஒரு போராளியாகவும், பின்பு அதே சமரில் ஒரு மாவீரனாகவும் ஆகிய ஒரு புனிதனின் நினைவாகும். அந்தப் புனிதனே மாவீரன் வீரவேங்கை 2 ஆம் லெப். சீனிவாசன் (கோபாலசிங்கம் பிரபாகரன், வெடிவைத்தகல், நெடுங்கேணி, வவுனியா)

ஜெயசிக்குறுச் சண்டைக்காக புளியங்குளத்தில் புலிகளின் படையணிகள் முகாமிட்டிருந்தபோது எதிரியின் கடுமையான தாக்குதலைச் சந்திக்கவேண்டியிருந்தது. நிமிடமொன்றுக்கு பல்லாயிரம் ரவைகள், எறிகணைகளென புளியங்குளத்தில் வெடிமருந்து மழையாகப் பொழிந்து கொண்டிருந்தது. அதேபோல் சூரியன் உதிக்குமுன்பே இயந்திர வல்லூறுகள் தன் எச்சத்தைப் போட்டுச் சென்றன. களத்திலுள்ள புலியணிகளுக்கு காலை உணவு வரத்தவறினாலும் ஒவ்வொரு நாள் காலையிலும் சிங்கள வான்படையின் கிபீர் விமானங்கள் வரத்தவறுவதில்லை. குண்டுபோட மறப்பதில்லை.

இப்படியான ஒரு நாளில் காலை விமானங்கள் குண்டுகளைப் போட்டுவிட்டுச் செல்ல சிறிது நேரம் கழிந்து சீனிவாசன் எம்மைநோக்கி ஓடிவருகிறான். டேய் என்னடா நடந்ததென தூரத்தில் வரும் போதே கேட்க,கையால் சைகை காட்டிவிட்டு ஓடிவந்தவனைப் பார்த்து சிரிப்பை அடக்க முடியவில்லை.

ஆனால் அவனோ வேதனையால் துடித்தான். விமானம் வீசிய குண்டுச் சிதறலொன்று அவனது மேல் உதட்டுக்குள் புகுந்து வெளிவராமல் நின்றது. பார்க்கவே பயமாகவும் அதேவேளை சீனிவாசனின் முகத்தில் வேல் குத்தியது போல் அழகாகவும் இருந்தது.

அவனால் வாய் திறந்து பேசமுடியாதளவு ஒரு பக்கம் சிறிதாகவும்,ஒருபக்கம் பெரிதாகவும் இருந்தது. நிச்சயமாக இவன் விமானம் குண்டுபோடும்போது பார்த்துக்கொண்டிருந்திருப்பான் என்பது எமக்குத்தெரிய, ஒருவாறு சிறியதொரு சிகிச்சையின் பின் அக்குண்டுச் சிதறல் எடுக்கப்பட்டு மேல் கீழாக ஐந்து தையல் போடப்பட்டது.

சிகிச்சை முடிந்ததுமே மருத்துவமனைக்குப் போகமாட்டேன் என அடம்பிடித்து விட்டான். இது அவனது வழமையான பிடிவாதம் என்பதை நினைத்து தளபதி இராகவனிடம் அனுப்பி அனுமதி கேட்டோம். அவரும் அவனது பிடிவாதம் தெரிந்து அனுப்பவேண்டாம் என்று சொல்ல சீனிவாசன் மகிழ்ச்சியால் எங்களை இகழ்ந்தான். ஆனால் அவனது மகிழ்வோ நீடிக்கவில்லை என்பது ஜெயசிக்குறுக் களத்தின். சிறிது நாட்களிலேயே தெரிந்தது.

சீனிவாசன் என்றதுமே அவனது உயரிய தேகமும், அழகான பற்களும், வாரிவிடாத சுருள் கேசமும் அவற்றுடன் அவனது களச் செயற்பாடுகளும் ஞாபகம் வரும்.

சீனிவாசன் எங்குசென்றாலும் தனது ரி561சுடுகருவியும், விநியோகப்பை (சப்பை கோல்சர்) தண்ணீர்க்குவளை, சாக்கு, மழைக் கவசத்துடனேயே திரிவான். படையப்பொருட்களை வைத்திருப்பதும், அவைகளைப் பராமரிப்பதிலும் அவனுக்கு நிகர் அவனே என்று குறிப்பது நல்லது.

தமிழீழத்தின் எழில் மிகு பிரதேசங்களில் ஒன்றான வெடிவைத்தகல் நெடுங்கேணியில் பிறந்த இவனுக்கு தாயகப்பற்று அதிகமாகவே இருந்தது. காரணம் இவர்களின் ஊருக்கு பத்துமைல் தொலைவில் பதவியா சிங்களக் குடியேற்றமும், டொலர்பாம், கென்பாம், சிலோன்தியேட்டர் என ஒவ்வொரு இடத்திலும் 1000 ஏக்கர் சிங்களக் குடியேற்றங்களை செய்திருந்தனர்.

அந்தச் சிங்களக் குடியேற்றங்களின் போது தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநியாயங்களையும், அட்டூழியங்களையும், இன அழிப்பையும் கேள்வியுற்ற சீனிவாசன் தமிழனின் நிலத்திலேயே,தமிழனுக்கு இவ்வளவு அட்டூழியங்களா? என சிந்திப்பதற்கு பரிகாரம் தேட தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 1994ஆம் ஆண்டு இணைந்துகொண்டான் சீனிவாசன்.

புளியங்குளம் மத்திய கல்லூரியில் ஆண்டு 08 படிக்கும்போதே தமிழர்களின் ஏமாற்றப்பட்ட அரசியல் வாழ்வையும், பறித்தெடுக்கப்பட்ட நிலங்களையும், படுகொலை செய்யப்பட்ட அப்பாவித்தமிழ் குடும்பங்கள் பற்றியும் கேட்டறிந்தவன், உடன் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்தான்.

துடிப்பும், எல்லாவிடயத்தில் ஆர்வமும் கொண்டவன், அடிப்படைப் பயிற்சியைச் சிறப்பாக முடித்தவுடன், வன்னிமாவட்ட சண்டை அணியில் சேர்ந்துகொண்டு தனது களப்பணியை ஆரம்பித்தான். சீனிவாசன் இயக்கத்தில் இணைந்து கொண்டதுமே தனது வீட்டாருக்கு எழுதிய முதல் கடிதத்தில் ஏனைய தனது இரண்டு சகோதரிகளில் ஒருவரையேனும் அல்லது நான்கு சகோதரர்களில் ஒருவரையேனும் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து எமது இனத்திற்காக போராட வேண்டும் என எழுதினான் என்பதை அடிக்கடி நினைவு கூருவார் தளபதி இராகவன்.

எல்லோரையும் விட தான் பெரிய வேலைகளைச் செய்யவேண்டும் என்பதற்காக தன்னை 60 மி.மீ ஏவுகருவி பிரிவில் இணைத்துக்கொண்டான். வன்னி மாவட்டத்தில் நடந்த பெரும்பாலான சண்டைகளுக்குச் சென்றவன். அதில் திறம்படச் சண்டைசெய்து காட்டினான்.

**க.மிரேசு**

சீனிவாசனின் திறமையான சண்டையைக் கண்ட அவனது பொறுப்பாளர் ஜி.பி.எம்.ஜிஎனும் கனரக துப்பாக்கி அணியில் செயற்பட அனுமதித்தார். அதன் போதும், அவ்வணியில் திறம்படச் செயற்பட்டதுடன், சண்டையில் கனரக அணிகளுடன் தனித்திறமையுடன் போரிட்டான். தனது சூட்டாளர் ஓய்வெடுக்கும்போதெல்லாம் தானும் அந்தக் கனரக ஆயுதத்தால் சுட்டு திறமையான சூட்டாளனாகவும், சண்டைக்காரனாகவும் வளர்ந்தவன். பல களங்களில் திறமையுடன் சண்டை செய்தான்.

தனது முதலாவது சண்டையான மண்டைதீவுச் சண்டை தொடங்கி, வன்னி மாவட்டத்தின் சிறுசிறு தாக்குதலில் ஆரம்பித்து, கொக்குத்தொடுவாய் தாக்குதலில் தனது அணிகள் எதிரியின் உச்சக்கட்ட எதிர்ப்பை காட்டியபோது தனது கனரக அணியுடன் சேர்ந்து எதிரியை எதிர்கொண்டு ஏனைய அணிகளின் சிக்கலான நிலையிலிருந்து மீள பேருதவி புரிந்ததை இன்றளவும் நினைவுகூருவர்.

தொடர்ந்து சூரியக்கதிர் நடவடிக்கை, ஓயாத அலைகள்-01, சத்ஜெய,பரந்தன் ஆனையிறவு, ஜெயசிக்குறு என தொடர்ந்து எல்லாச் சண்டைக்களங்களிலும் திறம்படச் சண்டை செய்தவன்.

தனது சண்டைகளின் போது விழுப்புண்ணடைந்து ஓய்வெடுப்பதே அவனது வெறுப்பான காலங்கள் என்று அவன் அடிக்கடி சொல்வதுண்டு.

தனது ஓய்வுகளின் போது கண்ணிவெடிப் பயிற்சியை முடித்தவன் அதிலும் தனது தனித்திறமையைக் காட்டி சாள்ஸ் அன்ரனி சிறப்பூப் படையணி கண்ணிவெடி அணியில் நல்ல விவேகமுள்ள வேகமுள்ள செயல் வீரனாக இருந்து தனது கடமைகளைச் செய்தான்.

1996 இல் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியில் இணைந்து கொண்டதிலிருந்து படையணிக்கென்று அவன் செய்த சேவைகள் பெரிதிலும்பெரிது. அத்தோடு கூடுதலான எதிரிகளின் காலை இவனது கண்ணிவெடிகளே எடுத்தது. பல எதிரிகளின் உயிர்களை தனது கண்ணி வெடியால் எடுத்தவன். எதிரி தனது ஊரையும்,தாயகப் பிரதேசத்தையும் ஆக்கிரமித்தபோதே எதிரியை பழிவாங்கத் துடித்தவன், சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம், தனது சுடுகருவியாலும், கண்ணிவெடியாலும் பல எதிரிகளின் உயிரைப் பறித்து தனது இதய ஆசைகளை நிறைவேற்றி தாயகத்திற்கு உரமூட்டினான்.

(21ஆம் பக்கம் பார்க்க)



# காரசாரம்

## நாம் போகும் பாதை நமக்குத் தெரிகிறதா..?

உலகம் இன்று எத்தனையோ வழிகளில் திருந்திவிட்டதாகத் தன்னை நம்பிக்கொண்டிருக்கிறது. ஏனெனில் அது தன் மக்களை முதலாளிகளுக்குச் சார்பாக நடக்கப்பழக்குவதில் வெற்றி கண்டு வருகிறது. நாகரிகம் வாழ்கிறதோ, வளர்கிறதோ தெரியாது. ஆனால் அது தன்னை அநாகரிகத்துக்குள் தள்ளிக்கொண்டு ஒரு மாயா உலகத்துள் மக்களை அதுவும் புத்திஜீவிகளாகத் தம்மைக் கருதும் மக்களை வெற்றிகரமாக ஈர்த்துவருகிறது.

இதன் காரணமாக, மிக உன்னத கோட்பாடாக பைபிள் கூறும் உன் 'அயலவனை நேசி' என்ற மொழி அர்த்தமற்றுப் போகிறது. சாதாரண மக்களையும், வசதியற்ற மக்களையும் யாரும் கவனத்தில் எடுப்பதில்லை. இந்த வகையில் மிகவும் வருந்தத்தக்க ஒரு நிகழ்ச்சிகள் அண்மைக்காலங்களில் நடைபெற்று வருகின்றன.

கல்வியில் ஒரு பிள்ளையின் வளர்ச்சியைக்கூட முழுமையாகக் கவனத்தில்கொள்ளாது தமது சொந்தக் குழந்தைகளையே யந்திரமாக மாற்றி வருகின்றனர்.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையைப் பற்றிப்பார்ப்போம். இப்பரீட்சைக்குத் தோற்றுதலும், அதில் தேறுதலும் ஒரு பட்டம்பெறும் நிகழ்வல்ல. ஆனால் முதலாளித்துவ அமைப்பில் இது இப்போது ஒரு பெருவிழாவாக்கப்பட்டதன் பின்னணியில் வசதிகுறைந்த ஒரு பெற்றோரின் பிள்ளை இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான முன்னேற்பாடுகளுக்கும், அதன் பின் பரீட்சையில் தேறிவிட்டால் பட்டம்?! பெறுவதற்கும் பெரும் செலவை எதிர்நோக்கவேண்டும்.

அண்மையில் ஒரு புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறு என்பது ஒரு பட்டப்படிப்புக்கு நிகரானது என்ற மாயை தோற்றுவிக்கப்பட்டுவிட்டதால் ஏழை மாணவர்கள், அது தமக்கு எட்டாக்கனி என்ற முடிவுக்கே வந்துள்ளனர்.

துணுக்காய் வலயத்தின் ஒரு கிராமியப் பாடசாலையில் முதன்மையாகத் தேறிவரும் ஒரு சிறுமியின் தந்தை வெளிப்படையாகவே தன் பிள்ளையை புலமைப் பரிசில் பரீட்சைக்கான பிரத்தியேக வகுப்பில் கலந்துகொள்ள அனுமதிக்கவில்லை. காரணம் "உதுக்குச் செலவழிக்கவும் கொண்டு சுத்தவும் எனக்கு நேரமுமில்லை, காசுமில்ல"

போனவரியம் பாஸ்பண்ணின பிளையளட்ட வாத்திமாருக்கு விருந்து வைக்க ஆயிரம் ரூபா கேட்டவையாம் என்பது அவருடைய மேலதிக தகவல். ஒரு வழிகாட்டிப் புத்தகம் முந்நூறு ரூபாவாம். புலமைப்பரிசில் நடாத்தப்பட்டு அதில் தரமான மாணவராகக் காணப் படும் மாணவருக்கு உதவிப்பணம் கிடைக்கும். அது வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ளவர்களுக்கு மட்டும். இன்று மத்திய வர்க்க, கீழ்மத்தியவர்க்க குழந்தைகளையே இப்பரீட்சை உள்வாங்குகிறது.

ஆரம்ப வகுப்பிலிருந்தே தயார்ப்படுத்தப்பட்டுவந்தால் மட்டுமே இப்பரீட்சையில் முந்தமுடியும். ஆனால், ஐந்தாம் ஆண்டுக்கு வந்து நடுக்கட்டத்தில் நடக்கும் பரீட்சையில் வெல்லும் மாணவர் தன்னை வளர்த்துவிட்ட முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் வகுப்பு ஆசிரியர்களை திரும்பியும் பார்ப்பதில்லை. அவர்களுடைய உழைப்பு-பலன் வேறுயாருக்கோ, பாராட்டும் அவருக்கே, இப்போது பட்டமளிப்பாக உதை மாற்றியதில் இன்னும் சிலர் பசியாறி மாலைமரியாதைகளையும் பெற்றுவிட இன்னொரு புறத்தில் புறக்கணிக்கப்பட்ட ஏனைய மாணவர்கள் ஆதங்கத்தோடு நிற்பதும் நடக்கிறது. ஆரம்ப வகுப்புகளிலேயே கற்கும் திறன் வகுக்கப்பட்டு ஒரே வகுப்பில் ஏபிசி தரமாக்கப்படுகிறது. கேட்டால் கல்வித் தரம் குறைந்த மாணவர்கள் மீது அதி கவனம் செலுத்தப்போகிறோம் என்பார்கள். வகுப்புக்களுக்கான ஆசிரியர் வருகை குறையும்போது உச்சத் தரமுள்ளவர்களுக்கே கற்பிக்கப்படுவதாகவும் மெல்லக் கற்போருக்கு 'பிறீக் கிளாஸ்' எனவும் மாணவர்களே கூறுகின்றனர்.

உண்மையாகவே இதில் ஆசிரியர்களினதோ, அதிபரினதோ பிழை எதுவும் இல்லை. அவர்கள் சரியாகத்தான் நடந்துகொள்கிறார்கள். பாடசாலையின் ஒட்டுமொத்த வளர்ச்சி என்பது அங்கு பெறப்படும் கல்விப் பெறுபேறுகளிலேயே தங்கியுள்ளது. எண்பது மாணவர்கள் கற்கும் ஒரு வகுப்பில் எட்டுப்பேராவது திறமைச்சித்தியடைந்தால்தான் அப்பாடசாலைக்கும் ஆசிரியர்களுக்கும் பெருமை என்பதுடன், பாடசாலையின் அபிவிருத்திக்கும் வழி பிறக்கும்.

இந்த ஆரவாரத்தில் எண்பது பிள்ளைகளில் எழுபத்திரெண்டு பிள்ளைகள் திறமைச்சித்தியடையவில்லை என்பதை வசதியாக எல்லோரும் மறந்து விடுகின்றோம். இதன் அடிப்படை எதுவாகவும் இருக்கலாம். மாணவர்கள் தரம்பிரிக்கப்பட்டு ஒதுக்கப்பட்டுவிட்டனர் என்றும் கொள்ளலாமா? கூடாது. எம் மண்ணில் தொடர்ச்சியான இடப்பெயர்விலும் இயற்கை அனர்த்தங்களின் போதும் மக்கள் பாடசாலைகளையே வதிவிடமாக எடுத்துக்கொள்வதாலும், மாணவர்கள் மாறி மாறி பாடசாலைகளை தேடவேண்டியிருப்பதாலும் அவர்களால் நான் வெல்லமுடியவில்லை.

நான் சின்ன வயதில் அரிவரிமுதல் எட்டாம் வகுப்புவரை ஒரே பாடசாலையில் கற்றேன்.அப்பாடசாலையில் அதற்கு மேல் வகுப்புக்களின்மையால் அதே ஊரின் உயர் பாடசாலையில் மற்ற வகுப்புக்களைக் கற்றேன். ஒரே நண்பர்கள், ஒரே பாடசாலை வீதி, ஒரே ஆசிரியர்கள், நாமே நடந்துபோய் நடந்துவரக்கூடியதாக இரண்டு கிலோமீற்றர் தொலைவில் அந்தப்பாடசாலை.

இந்த நடைதூரத்தில் நாம் அனுபவித்த சமூகத் தொடர்புகள் பாடசாலை விட்டதும் ஓடிப்போய் தண்ணீர்வாங்கிக் குடிக்கும் காக்காகடை, தலைக்குக் கட்ட வெட்டுத்துணி பொறுக்கும் சின்னராசா டெயிலர்க்கடை, குஞ்சியப்புவுக்கு சேலம் வீடிவாங்கும் சிறுபெட்டிக்கடை, சந்தியாக் குட்டி வளவு சிவத்தமாங்காய், குளத்துக்குள் ஒரு வண்டியளவு தோகைபரப்பி விழுந்துகிடக்கும் கூழைக்கிடாரி, முத்துச்சாமி வீட்டடியில் நின்று கண்ணடிக்கும் கொண்டப்பக்கிழவன், எப்போதும் நாட்டுப் பாடல்பாடி மகிழ்விக்கும் வெள்ளைச் சீலக்கார வீரம்மா, ஓராங்கட்டையடியில கிட்டியடிக்கிற இளந்தாரியள், மீன்காற தம்பிராசாவின் கூத்துநடை, முன்னே ஒரு பந்தை எறிந்து பின்னே ஒரு பந்தால் விரட்டியபடி நடக்கும் சக தோழர்கள்.

எங்கள் பகுதியில் அபூர்வமாகக் குடிவந்த ஆசிரியையுடன் கும்பலாகக் கூடி நடந்துசெல்லும் பெருமை. அழுக்குச் சுவர்களில் ஒட்டியிருக்கும் சுவரொட்டிகளைப் பிய்த்தெறிதல். பசிச்சோர்வோடு நடந்தாலும் மகிழ்ச்சியான அந்தமாதிரி நாட்கள். இந்தமாதிரிக்கொள்கைகள் இன்றைய பிள்ளைகளுக்கு இருக்கிறதா?

ஆரம்ப வகுப்புகளிலேயே மன அழுத்தங்கள் ஏற்பட்டுவிட தொடர்ச்சியான நோயாளிகளாகிவிடுகின்றனர். இதுபற்றி டாக்டர் எச்.ரீ.விக்கிரமசிங்க குழந்தை மருத்துவ ஆலோசகர் "போட்டிப் பரீட்சைகளில் பிள்ளைகளின் மன அழுத்தம் என்ற கட்டுரையில் பிள்ளைகளிடம் மேற்கொண்ட நோய்க்குறிகளின் பகுப்பாய்வில் கண்ட விபரங்களைத் தருகிறார். தலைவலி, பார்வை மங்குதல், தலைசுற்றல், நாட்பட்ட வயிற்றுவலி, மூட்டுவலிகள், தசைவலி, மூச்சையடைத்தல், வலிப்பு, மூச்சுத்திணறல், தூக்கமின்மை போன்ற நோய்கள் சிறுபிள்ளைகளுக்கு மன அழுத்தத்தால் ஏற்படுகின்றன என்கிறார்.

இத்தகு பரீட்சைகளின் பின்னணியில் பெற்றோர்களே பெரிதும் அல்லலுறும் மன உளைச்சலுக்கும் ஆளாகின்றனர். பெறுபேற்றை மிகக் கிட்டிய புள்ளியில் தவறவிட்ட பிள்ளைகள் தம்மளவிலும் அயலவர்களாலும் பெரும் அவமதிப்புக்கு உள்ளாகிறார்கள். இதை இன்னும் கூட்டிவிட்டு வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்ள வேண்டாமே.

உலகச் சந்தையின் ஊடுருவல்களின் மேலாதிக்கம் எம்மிடையே பரவவிட்ட பிறந்தநாள் விழாக் கலாச்சாரம், காதலர்தினம் போன்று புலமைப் பரிசில் பெறுதல் ஒரு பட்டமளிப்பு விழாவாக மாற்றப்பட்ட நிகழ்வும் அமைந்துவிட்டது. ஓட்டப் பந்தயத்தில் நீண்ட தூரம் ஓடும் வீரர்கள் போன்று போட்டி முடியும். இடத்தைக் கடந்ததும் விழுந்து படுக்கும் மாணவர்களும் உண்டு. கல்வியில் பெற வேண்டியது சமுதாயத்தின் ஒற்றுமை, நட்புறவு, தன்மீதான அன்பு செலுத்துதல், சூழலைப் புரிந்துகொண்டு சக மனிதர்களையும் மதித்தல் என்று கூறிக் கொண்டே போகலாம்.



இன்று போட்டி, பொறாமை, இயலாமை, வெறுப்பு போன்றவற்றின் அமைவிடமாக பிள்ளைகளின் உள்ளங்கள் அலைமோதுகின்றன. சமுதாயத்திலிருந்து யாரையும் ஒதுக்கி வைத்தலாகாது. புலன் வலுக்குறைந்தோர்களுக்கும் புதிய கல்வி வளர்ச்சியுண்டு, வசதியற்றவர்களாய், போர்ச் சூழலில் பாதிக்கப்பட்டோராய் இருக்கும் பிள்ளைகள் கல்வியைக் கைவிடக் கூடிய எதிர்வினைகளைத் தவிர்த்தால்... எமது கௌரவம் குறைந்துபோகாது. எதிர்காலச் சிறுவர்கள் எமது நாட்டுக்கான சிறுவர்களாகத்தான் இருக்கவேண்டும். அந்நியக் கலாச்சாரங்களில் அவர்கள் மூழ்கிவிட நாமே அடியெடுத்துக்கொடுக்கலாமா?

-மாயா-



# விசுக்விசுக் விசாலாட்சி

மகிந்த சிந்தன இவளவு கெதியாப் பல்டியடிக்குமெண்டு நான் கனவிலும் கருதயில்லை. குடிகாறன் பேச்சு விடிஞ்சாப்போச்சு எண்டமாதிரி, லெச்சனில நிக்கிறவன்ர பேச்சு வெண்டாப்போச்சு. பின்ன இப்ப ரணிலற்ற நிலைமை மகிந்தர் கலக்கிப்போட்டுது. நல்லாத்தான் கலக்கிப்போட்டுதெண்ணுறன். ஒரு மாதிரி ஆள் தெளிஞ்சிட்டுது எண்டுமட்டும் நினைச்சுப் போடாத'நுணலும் தன்வாயால் கெடும்'பின்ன பக்கக் கட்சிக்காறற்ற தோல்விக்கும் தன்ர வெற்றிக்கும் உதென்ன வெற்றியே? ஆத்தாதவன் அப்பீல் கேட்டமாரித் தேர்தல் ஆணையாளர், ஒரு விசியம் சிலவையும்பார்த்து நீதான் வெண்டிட்டாய் எண்டு போட்டார். ஆனா- என்னதான் மூளை கெட்டயோசினையா சிந்தனையவச்சுச் சொன்னாலும் இப்ப ஒரு உண்மை தெரிஞ்சிருக்கு.


தூண்டிலப் போட்டவனுக்கு மிதப்பில கண் இருக்கிறமாதிரி பதவிக்கதிரையில இருக்கிறவைக்கும் தங்கட கதிரைய அசையாமப் பிடிக்கிற அவசரம் இருக்கும்தானே- எட எப்பிடியோ எதிராளி தோத்துப் போனதுக்கு என்ன காரணம். எங்கயெண்டாலும் வெண்டதுக்கென்ன காரணம். தமிழற்ற வாக்குத்தானே. அப்ப அடுத்த லெச்சனுகள்ள அதையும் தூண்டில் போட்டு வச்சாக் கதிரை அசையாது எண்டதுக்கு உறுதி பயமேயில்லை. எண்டொரு பார்வை விழுந்திருக்குப் பொடியா-அதோட பிரபா சிந்தனயப் பார்த்துக்கொண்டிருந்ததோட ஆக்கள் பயங்கர அலேட் இனியும் மகிந்த சிந்தனயக்கட்டி வச்சழுதா அதுகும் போச்சடா அரகரா இதுகும்போச்சடா சிவசிவாண்டு போயிடும்.அதுதான் அதுதான் கொஞ்சமும் லாபமில்லாத சண்டைக்குள்ள ஏன் கொல்லப்படவேணு மெண்டும் ராணுவம் யோசிக்குதாம். அதெல்லாம் கிடக்கட்டும் மெய்யேடா கொழும்பான கொழும்பிலேயே தமிழற்ற குறிச்சியள்ள வோட்டு விழயில்லயாமே. எனக்குப் பெரிய ஆத்திரம் தான். இந்த மக்கள வோட்டுப் போடச்சொல்லி நாடாளுமன்ற லெச்சன் நேரம் உந்தப் புலியள் ஊரூராக் கூட்டம் போட்டவை தானே. இப்ப எங்களுக்கு வோட்டுப் போட்டென்ன கிடக்கு போடாம என்ன கிடக்கெண்டு பேசின ஒரு சொல்லுக்குப் பம்மீற்றுதுகள்.

இப்ப மகிந்தர் தன்ர கிளைப்பட்டாளத்தோட கூடி மந்திராலோசனையில இறங்கிப் பேச்சுவார்த்தைக்கு நாங்கள் வாறம், யுத்த நிறுத்தம் தொடரும். எண்டெல்லாம் திருவாய் மலந்தருளியிருக்கிறார்.

மெய்யேடா,என்ன சந்திரிகா அம்மையார் பதவி போனபிறகும் பதவியில வந்த பணத்தில விளையாடியிருக்கிறாவாம். இது என்ன புதிசோ தலையிலயிருந்து அடிவரைக்கும் முதல் பொறுப்பில இருந்தவர் விலகப் புதிசா வாறவர் செய்யிற வேலை இதுதானே. முத்தத்தில நிக்கிற பூச்செடியில இருந்து வீட்டுப்படலை தொட்டு ராணுவத் தளபதிவரைக்கும் மாத்து மாத்தெண்டு மாத்தி முதல் இருந்ததெல்லாஞ் சுத்து மாத்து. இப்பதான் செய்யிறதுதான், சுத்து மாத்து எண்டு ஊர் உலகத்துக்கெல்லாம் தம்பட்டம் அடிச்சு- உடனடியா முதலிலிருந்த பெரியவருக்கெதிராக விசாரணைக் கொமிசன், ஊழல் புகார் இத்தியாதி இத்தியாதி. "எருது ஏழையாய்யிருந்தாப் பசு பத்தினித்தனங் கொண்டாடுமாம்." அப்ப அம்மா செய்த செயல்களுக்கு இப்ப ஐயா ஞாயங் கேப்பார் போல தெரியுது.

புதுமேடை, புது நடிகர், புது இயக்குநர். கொஞ்ச நாளைக்குள்ள சனத்தைக் கவர வெளிக்கிட அதுக்கிடையில தமிழீழத்துக்க மாவீரர்நாள் புதுப்படம் போல சனத்தை கிண்டிவிட்டிட்டுது. இது ஒரு எதிர்பார்த்த திருப்பந்தான்ரா. இனி மகிந்தர் தமிழ் சனத்தின்ர உள்ளங்கள்ள நீங்காத இடம் பிடிக்கிறமாதிரி ஏதும் செய்தாகவேணும். ஒற்றைப்பின்னல் ரெட்டைப்பின்னல் விவகாரமில்ல இது. இனிவாற லெச்சனில பச்சைக்கட்சிக்கு விழுந்த வோட்டுக்களைச் சூறையாடுற திட்டம்-பின்ன நாட்டுப்பற்று ஐக்கியம் நாசமறுப்பெல்லாம் பதவிக்கதிரைக்கு முன்னால வெறும் சம்பல்.

ஜே.வி.பிக்காரருக்கும் லெச்சனோட மூக்குடைஞ்சுதான் போச்சு. அவை நெச்சமாரி வெற்றியில்ல இனி சண்டை சமாதானம் திண்ட தேங்காய்பூவெண்டு ஒண்டுங் கதைக்கேலாது. சனத்தின்ர எண்ணம் வேறமாரிப்போட்டுது. ஏதடா புலியள் சண்டையாம் எண்ட கதை கேட்ட உடனேயே யாழ்ப்பாணத்தில உள்ள இராணுவம் ஏன் அங்க நிற்குது. யாழ்ப்பாணத்தால எங்களுக்கு என்னவருது. உதை விடுங்கோ எங்கட சாவுகளத் தடுத்து நிறுத்துங்கோ எண்டு பத்திரிகையிலேயே புலம்பியிருக்கிறார் ஒருதர். எப்பிடியோ நிம்மதியான வாழ்க்கைக்கு சனத்துக்குத் தேவை சண்டையில்லாத தேசம். எண்டத விட அரசியல் வாதியளுக்குத் தேவை நம்பிக்கை வைக்கிற சனம்- அதால கிடைக்கிற பதவி.



சிறுகதை

# சுவரில் படமாய் அல்ல இதயத்தில் ஓவியமாய்

அத்தையின் கேள்விகளுக்கு பதில் கூறி அவன் களைத்துவிட்டான். புலன் விசாரணை அதிகாரி போல துருவித் துருவிக் கேட்டுக் கொண்டிருந்தார். அவரைப் பார்க்கப் பாவமாய் இருந்தது. தாயுள்ளம் துடியாய் துடிப்பதைப் புரிந்துகொண்ட அவன் மனமும் துடிக்கத்தான் செய்தது.

"உன்னையும் அவளையும் பற்றி எவ்வளவு கற்பனைசெய்து வைச்சிருந்தம். ம்... எல்லாம் முடிஞ்சு போய்ச்சு. இனி அதப் பற்றி நினைச்சு என்ன பயன்?' அத்தையிடமிருந்து நீண்ட பெருமூச்சொன்று வெளிப்பட்டது.

"நீ அவளக் காண்றேல்லயா?"

"காணுறனான்"

"கடைசியா எப்ப கண்டனி?"

"இப்ப கிட்டடியில தான்"

"என்னைப் பற்றி ஒண்டும் கேக்கேல்லையா? அவளப் பார்த்து எவ்வளவு காலமாச்சு! அவளுக்கு எங்களில கொஞ்சங்கூடப் பாசமில்ல. பெத்த பாசம் நாங்க துடிக்கிறம். என்ர பிள்ள ஒரு குறையுமில்லாமச் சுகமா இருக்கோணும் எண்டு அம்மாளாச்சிக்கு நேத்தி வைச்சிருக்கிறன். எட்டு வருசமா அவளுக்காகத் தீக்குளிக்கிறன். அம்மாளாச்சி கைவிடமாட்டா.

அம்மாளாச்சி மீது அசையா நம்பிக்கை கொண்ட மாமா இந்த வருடமும் தீக்குளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய, வெளியே செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்.

உங்களுடைய அம்மாளாச்சியின் இருப்புக்கே மிருணா போன்றவர்கள் தான் காரணம் என நினைத்தவனாய் அமைதியாய் இருந்தான்.

"நான் ஒருக்கா அவசரமா வெளியில போயிற்று வாறன் அத்தையோட கதைச்சுக் கொண்டிரு"

"ஓம் மாமா! போயிற்று வாங்கோ"

"என்னைப் பற்றி ஒண்டும் கேக்கேல்லையா?"

அத்தையின் கேள்விக் கணைகள் தொடர்ந்தன.

"அம்மாவையும்,அப்பாவையும் சுகங்கேட்டதாகச் சொல்லச் சொன்னவள். விரைவாக விடுப்பில வருவாளாம்" மனமறிந்து கூறிய பொய்யை மனச்சாட்சி சாடியது. அவளைத்தான் காண்பதே இல்லையென்று எப்படிச்சொல்வான். கண்களுக்குள்ளால் ஊடுருவி மனதில் இருப்பதை வெளியே பற்றியிழுக்க முற்படுபவள் போல அவனது கண்களைச் சில விநாடிகள் உற்று நோக்கிவிட்டு, அவனுக்குத் தேநீர் தயாரிப்பதற்காய் உள்ளே சென்றாள் அத்தை.

எத்தனையோ பேருக்குப் போக்குக் காட்டிய அவனது விழிகள் அத்தையிடம் தோற்றுவிடுமோ என அஞ்சினான்.

சிந்தனை வசப்பட்டவனாய் சுவரை நோக்கினான்.

சுவரில் மாட்டப்பட்டிருந்த புகைப்படங்களில் மிருணாவின் பல்வேறு தோற்றங்கள். வலைப்பந்தாட்ட வெற்றிக் கிண்ணம் பெறும் வெற்றி வீராங்கனையாய், உடற்பயிற்சிப் போட்டியில் குழுத்தலைவியாய், பரத நாட்டிய நங்கையாய் பல தோற்றங்களில்... இருக்க வேண்டிய ஒரு தோற்றத்தைத் தவிர கிழிக்க முயன்ற மிருணாவின் கைகளிலிருந்து பறித்தெடுக்கப்பட்டுத் தப்பிப் பிழைத்த குழந்தையாய்த் தவழும் மிருணாவின் தோற்றம். பெரிய சட்டத்துக்குள் இருந்து பொக்கை வாயால் சிரித்தது. நீதனும் தன்னையறியாமல் சிரித்தான்.

குடும்பப் படத்தில் அவனது கண்கள் நிலைத்தன. மாமாவின் கழுத்தில் தொங்கியபடி அவனைப் பார்த்துச் சிரித்த மிருணாவின் கண்களில் மின்னலடித்தது. மின்னலடிக்கும் கண்கள் அவனை இறந்த காலத்துக்கும், நிகழ்காலத்துக்குமாய் இழுத்தடித்தது.

மிருணாவின் வீட்டில் இடம்பெற்ற சித்தப்பாவின் திருமண வைபவத்துக்கு வந்திருந்த வேளை, அவளது விளையாட்டுத் துப்பாக்கியை வேண்டுமென்றே உடைத்தபோது இந்தக் கண்கள் தான் அவன் மீது விசுவாமித்திரப் பார்வையை வீசியது. பிய்த்தெடுத்து விடுபவள் போல அவள் முறுக்கிய காதுகளைத் தொட்டுப் பார்த்துக்கொண்டான்.

தன்னுடன் இனிமேல் கதைக்கக் கூடாதென ஒரு நாள் சவால் விட்டுப் போனவள் ஓரிரு நாள் கழித்து இடைவேளையின் போது அவனது வகுப்பு வாசலில்,"உன்னோடு நேசமடா..." எனத் தயங்கித் தயங்கி நின்றாள். அன்றுதான் அத்தை வாங்கிக் கொடுத்த பென்சிலின் கூரை உடைத்துவிட்டு கடித்துக் கடித்துக் கூர் எடுக்க முயற்சித்து முயற்சியின் தோல்வியால் ஆட்டுப் புழுக்கை ஆகிவிட்டிருந்த பென்சிலை அவனிடம் நீட்டி, அவன் கொடுத்த புதிய பென்சிலை வாங்கிக் கொண்டு நன்றியுரைத்த கண்கள் இவை.


மீசையை மழித்துவிட்டுத் திரியும் சின்னமாமா நித்திரை கொள்ளும் நேரத்தில் கரியால் மீசை வைக்க அவனை இரகசியமாய் அழைக்கும் கண்கள்.

பிள்ளையார் கோயில் திருவிழாவில் அவன் முதன் முதலாய்க் கட்டிய வேட்டி கழன்று விழுந்த போது கைகொட்டிச் சிரித்த கண்கள்.

"எல்லாரும் பட்டம் தெளிக்கினம் இனி நீ என்னோட கதைக்கக் கூடாது. கண்டாச் சிரிக்கவும் கூடாது. கதைச்சா அடிப்பனடா" என அவனை மிரட்டிப் போன கண்கள்.

தன்னுடன் கதைக்காமல் இருப்பவளுக்கு ஆத்திர மூட்டுவதற்காய் முருகன் கோயில் திருவிழாவில் பக்கத்து வீட்டுப் பரணிக்கு குளிர்களி வாங்கிக் கொடுத்தவனை ஓரப் பார்வையால் முறைத்த கண்கள்.

தோழியுடன் நாவற்பழம் பொறுக்க வந்து, மரத்திலிருந்து ஒவ்வொன்றாய் விழும் பழங்களை ஓடி ஓடிப் பொறுக்கிச் சாப்பிட்டு விட்டு பழங்கள் ஒவ்வொன்றாய் விழும் மர்மத்தை அறிய அண்ணாந்து பார்த்த போது மரத்திலிருந்து பழங்களை ஒவ்வொன்றாய்ப் பறித்துப் போட்டுக்கொண்டிருந்த இவனைக் கண்டதும் நாணிப்பணிந்த கண்கள்...



மிருணாவின் கண்கள் பல தோற்றங்களில் அவன் முன் தோன்றியது. வைத்தகண் வாங்காமல் அவள் கண்களையே பார்த்துக்கொண்டிருந்தான்.

எல்லோரும் பகிடி பண்ணுகிறார்கள் என்பதற்காய் அவனுடன் கதைக்காமல் விட்ட மிருணாவை நீண்ட காலத்தின் பின் அவன் சந்தித்த சூழல் வித்தியாசமானது.

பணிக்காகச் சென்றவன் மிருணாவை அங்கு எதிர்பார்க்கவில்லை. ஒருவருக்கொருவர் அறிமுகப் புன்னகையைக் கூடப் பரிமாறிக்கொள்ள முடியாத சூழல். .கழுகுக் கண்களின் பார்வையில் பட்டுவிட்டால் பணித் தடங்கலுடன் உயிரும் பயனற்றுப் போய்விடலாம்.

அந்தச் சூழலிற்கு ஏற்றால் போல நாகரிக உடையில் அழகாய் எவ்வளவு தெரிந்தாள்? எதிரே தன்னை நெருங்கிக் கொண்டிருக்கும் அவளுடன் ஒரு வார்த்தையாவது பேசிட வேண்டும் என மனம் படபடத்தது. அவன் மனதை கட்டுப்படுத்த முயன்று கொண்டிருந்தபோதே. அவள் அவசரமாய் அவனைக் கடந்து சென்றுவிட்டாள். சனநெரிசல் மிகுந்த அவ்விடத்தில் அவனை விலத்திச் சென்ற போது தெரியாமல் தட்டுப்பட்டதுபோல அவன் கைகளை அழுத்திச் சென்ற அவளது கைகள். அவனிடம் இறுதி விடைபெறுகிறது என்று அவனுக்குத் தெரியவில்லை. அவளுடைய கை உணர்த்திய செய்தியைப் புரிந்து கொண்டவனாய், புரிந்து கொள்ளாதவனாய் சற்றுத் தூரம் சென்ற பின் அவளைத் திரும்பிப் பார்த்தான் அவள் திரும்பிப் பார்க்காமலே போய்க்கொண்டிருந்தாள். இன்னொரு தடவை அவள் முகத்தைப் பார்க்கமாட்டோமா என அவன் மனம் ஏங்கியது. அவள் திரும்பிப் பார்க்காமலே போய்விட்டாள். அவனை ஒரு தடவை திரும்பிப் பார்க்க அவளும் விரும்பியிருப்பாளோ!

"அந்தப் படத்தில் அப்பிடி என்ன பார்க்கிறாய்?' அத்தையின் குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினான். தேநீரை அவனிடம் நீட்டிய அத்தையின் பார்வையும் அந்தப் புகைப்படத்தின் மீது திரும்பியது. அவரது முகத்தில் கவலை ரேகைகள்.

"தேத்தண்ணி குடிச்சிட்டு வா உனக்கு ஒண்டு காட்டுறன்"

அத்தை பீடிகை போட்டார். அவர் அப்பிடி எதைக் காண்பிக்கப் போகின்றார் என்ற ஆராய்ச்சியில் அவன் மனம் இறங்கியது.

"தேத்தண்ணி ஆறப் போகுது கெதியாக் குடிமோனே"

அத்தையின் கூற்றைக் கருத்தில் கொண்டவனாய், ஆறியிருந்த தேநீரை அவசரமாய் உறிஞ்சினான். "மிருணாவக் கடைசியாச் சந்திக்கேக்க வேற என்ன சொன்னவள். தகப்பனப் பற்றி ஏதும் கேட்டவளே! அந்த மனுசன் அவளப் பார்க்கோணுமெண்டு துடியாய் துடிச்சுக் கொண்டிருக்கு. நித்திரையால திடுக்கிட்டு எழும்பி மிருணா மிருணா எண்டு கூப்பிடுறார். அவளுக்கு ஏதோ நடந்திட்டுது என்கிறார். ம்.... ஒரேயொரு பொம்பிளைப் பிள்ளையெல்லே... எனக்கும் பயமா இருக்கு"

அத்தை நீதனிடம் விடை தேடுபவர் போல அவன் கண்களுக்குள் தேடினார். அவன் அந்தப் பார்வையை எதிர்கொள்ள முடியாமல் கண்களை வேறு பக்கம் திருப்பினான்.

அத்தை தனது உடுப்புப் பெட்டிக்குள் அவசரமாய் எதையோ தேடினார். நீதன் மௌனமாய் அவரையே பார்த்துக் கொண்டிருந்தான். தேடி எடுத்த அந்தப் பத்திரிகைத் தாளின் ஒரு பகுதியை அவன் முன் நீட்டினார். நீதன் அதிர்ந்து, நிமிர்ந்து அத்தையை நோக்கினான்.

தொடுவதற்கே பயந்தபடி தலைமுடியில் பிடித்து காக்கிச் சட்டைக்காரர் தூக்கி வைத்திருந்த அந்த முகம்.... கிட்டிப்புள் அடிக்கும் போது நெற்றியில் அவன் ஏற்படுத்திய காயத்தின் தழும்பு அவனுடைய கண்களுக்கு மட்டும் சாதுவாய்த் தெரிந்தது.

மற்றவர்களுக்கு அது புலப்பட வாய்ப்பில்லை. செவ்விளநீர் எண்ணெய் வைத்து அத்தை வளர்த்தெடுத்த நீண்ட சுருண்ட கரிய தலைமுடி குலைந்தபடி, இணைந்த புருவங்கள், "முழிச்சி" என்ற பட்டத்தைப் பெற்றுக் கொடுத்திருந்த அகன்ற கண்கள், சாதித்த மகிழ்ச்சியில் அமைதியாய் மூடியபடி நீண்ட மூக்கு...

தன்னை மறந்து நீண்ட நேரமாய்ப் படத்தையே பார்த்துக் கொண்டிருந்தவன் நிமிர்ந்து அத்தையை நோக்கினான். அவரின் விம்மல் அழுகையாய் வெடித்தது. வாய் உப்புக்கரிந்தது. கன்னத்தைத் தொட்டுப் பார்த்தான். அவன் கண்ணீரால் கன்னம் நனைந்திருந்தது. வேகமாய்க் கண்ணீரை வழித்தெறிந்தான்.

"எனக்கு ஒண்டும் தெரியாதெண்டு நினைச்சிட்டியா? நான் ஒவ்வொரு நாளும் எண்ணெய்பூசி, பிடித்த இந்த மூக்கு... ஆசையாய் கொஞ்சின கன்னம்... அம்மா எண்டு முதல் முதலாய்க் கூப்பிட்ட அந்த வாயக் காணேல்ல... எனக்கு ஒண்டையும் மறைக்க வெளிக்கிடாத..

அத்தை அவனைப் பிடித்து உலுப்பினார். அவன் செய்வதறியாது திகைத்து அத்தையைத் தேற்ற முயன்றான்.

"இஞ்சரப்பா என்ன செய்துகொண்டிருக்கிறாய்?'

மாமாவின் குரல் அத்தை அழுகையை நிறுத்திக் கண்ணீரைச் சுவடு தெரியாமல் துடைத்தார். முகத்தில் புன்னகையை வரவழைத்துக் கொண்டார்.

"பொறுங்கப்பா வாறன்"

அந்தப்படத்தை அவசரமாய் இருந்த இடத்தில் மறைத்தார்.


**தமிழ் நிலா**

"மிருணாவைக் கண்டா ஒருநாள் விடுப்பிலயெண்டாலும் ஒருக்கா வந்து சாகப்போற இந்தக் கிழடுகளப் பாக்கச் சொல்லிவிடு. அம்மன் கோயில் தேருக்கிடையில பிள்ள விடுப்பில வருவாள். அம்மாளாச்சி கட்டாயம் கொண்டு வருவா. நீ இருந்து பாரன் என்ர நேத்தியெல்லாம் வீணாப்போகாது."

மாமா நம்பிக்கையுடன் உரைத்தார். நீதனை ஒரு தடவை திரும்பிப்பார்த்துவிட்டு அத்தை முகம் கழுவுவதற்காய்க் கிணற்றடிக்கு விரைந்தார்.

நீதன் மிருணாவைத் தன் உயிரில் கலந்த உறவாக்கிக் கொள்ள விரும்பினான்.காலம் அதை மறுதலித்துவிட்டது. காலம் கட்டளையிட்ட பாதையில் சேர்ந்து நடக்க விரும்பினான். அவள் பாதையில் எதிர்பட்ட தடையை நீக்கி, தடைநீக்கியாய்ப் பயணத்தை முடித்துக்கொண்டாள். அவனதும் ஒரு சிலரதும் நெஞ்சமெனும் கல்லறையில் அவள், சுவரில் படமாய் அல்ல... இதயத்தில் ஓவியமாய் அவள் சிலர் நெஞ்சங்களில் குடியிருக்கிறாள். குமுறி அழும் இதயத்தை இறுகப்பற்றியபடி தட்டுத் தடுமாறி நாற்காலியில் அமர்ந்தான் நீதன்.

# டென்மார்க்கின் தனிப்பெரும் இலக்கியவாதி கிரிஸ்ரியன் அன்டர்சன்



ஒரு காலத்தில் வாழ்ந்த அரசன் தனது செல்வத்தையெல்லாம் நவீன மோஸ்தரில் உடைகளை அணிவதில் விரயமாக்கினான். அவனது நேரம் இராச்சிய விடயங்களை விட்டு உடையலங்காரத்தில் கழிந்தது.

ஒரு நாள் அவனது சபைக்கு வந்த சில நெசவாளர்கள் தங்களால் புதுமையான துணி நெய்ய முடியும். அந்தத் துணியில் ஆடை தயாரித்து அணியும் போது மிகவும் அழகாக இருக்கும். ஆனால் முட்டாள்களின் கண்களுக்கு அந்த உடை தென்படாது! என்றனர்.

இப்படியான துணியில் உருவாக்கிய ஆடைகளை அணிய விரும்பிய அரசன் பொன்னும் பொருளும் கொடுத்தும் தனக்கு ஆடை தயாரிக்க துணி நெய்யும் படி கட்டளை இட்டான்.

தொடர்ச்சியாக துணி நெய்வதற்கு நெசவாளர்கள் பொன்னும் பொருளும் பெற்றனர்.

துணி நெய்வதை பார்வை இட அரசன் தனது மந்திரியை அனுப்பினான். மந்திரி பார்த்தபோது தறியில் துணி இருக்கவில்லை. மனத்துக்குள் ஆச்சரியப்பட்டாலும் எதுவும் சொல்லாமல் அரசனிடம் மிகச்சிறந்த துணி நெய்யப்படுகிறது எனக் கூறினார்.

அரசன் தனது அரண்மனை உத்தியோகத்தரை துணியை பார்வை இட அனுப்பிய போதும் இதுவே நடந்தது.

இறுதியாக அரசரின் வருடாந்த ஊர்வலத்துக்கு உடைகள் தேவைப்பட்டபோது அரசன் வந்து தறியை பார்த்தான் வெறுமையாக இருந்தது. நெசவாளர்கள் 'அரசே! இந்தத் துணி மென்மையானது. நாங்கள் வெட்டித் தருகிறோம்' என கூறி கத்தரிக் கோலால் காற்றில் வெட்டுவது போல் வெட்டி துணியை எடுத்து ஆடைகளாக்கினார்கள். அரசன் ஆச்சரியப் பட்டாலும் ஆடைகளை வாங்கி உடுப்பதாக பாவனை செய்து கொண்டார். உடை முட்டாள்களின் கண்களுக்கு தெரியாது என்பது அவன் மனத்தில் இருந்தது.

உடைகளை அணிந்துகொண்டு அரசன் உலாச் சென்றபோது மந்திரிகள் மற்றும் உத்தியோகத்தினர் 'ஆகா ஓகோ' என பாராட்டினர். அரசனும் மகிழ்ச்சியில் மனம் நிறைந்தான்.

உலா முடியும் தறுவாயில் சிறுவன் ஒருவன் 'ஐயே அரசரின் உடம்பில் எதுவும் இல்லை' என சிரித்தான்.

அப்பொழுதுதான் அரசன் தான் முட்டாளாகியதை உணர்ந்துகொண்டான்.

இருநூறு வருடங்களுக்கு முன்பு டென்மார்க்கில் பிறந்து சிறுவர்களுக்குக் கதைகள் எழுதிய கான்ஸ் கிரிஸ்ரியன் அன்டர்சனின் (Han Christian Anderson) கதைகளில்.

இந்தக் கதை எனக்குப்பிடித்தது. சிறுவயதில் இதைப்படித்த காலத்தில் எழுதியவரை அறியவில்லை. சில வருடங்களின் முன் மெல்பேர்னில் பாரதி பள்ளி சிறுவர்களால் நாடகமாக அரங்கேறிய போது எக்காலத்துக்கும் பொருந்தும் அரசியல் தன்மையை உணர்ந்து கொள்ள முடிந்தது.

மிகவும் வறிய குடும்பத்தில் பிறந்து வளர்ந்த கிரிஸ்ரியன் அன்டர்சன் பதினைந்து வயதாக இருக்கும் போது ஒரு ஜிப்சி பெண் "இந்த கொப்பன்கேகனே உன்னை கொண்டாடும்" என ஆருடம் கூறினார்.

*1805 ஆம் ஆண்டு* ஏப்பரல் ஐந்தாம் திகதி பிறந்த அன்டர்சனுக்கு டென்மார்க் மட்டுமல்ல பல நாடுகளில் விழா எடுக்கப்படுகிறது.

சிறுவயதில் வறுமையின் கொடுமையில் இருந்து தப்ப கற்பனை உலகத்தில் கதைகள் புனைவதிலும் பாவைகள் செய்வதிலும் நேரத்தைக் கழித்தார். சிறுவர்களுக்கான 168 கதைகள் இருநூறுக்கு மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

அக்கிளி டக்கிளிங் லிட்டில் மேர்மயிட் பிரபலமானவை. உலகத்தில் கடந்த காலத்தில் கிரிஸ்ரியன் அன்டர்சனின் கதைகளை கேட்டு வளர்ந்த குழந்தைகள் ஏராளம் இவர்களுக்கு ஒரு உலகத்தை சிருஷ்டித்து கொடுத்த பெருமை அன்டர்சனுக்கு உண்டு.

தமிழ் மொழியில் இப்படி எவ்வளவு கதைகள் எமது கலாச்சார பின்னணியோடு கிடைத்தன என்பது கேள்விக்குரிய விடயம்.

பஞ்ச தந்திர கதைகள், ஈசாப் கதைகள் வேற்று மொழியில் இருந்து வந்தவை. குழந்தைகள் இலக்கியம், சிறுவர் நாடகங்கள் எமது மொழியில் எக்காலத்திலும் புறக்கணிக்கப்பட்ட பகுதியாகும்.

இளமையில் கேட்கும் கதைகள், பார்க்கும் சம்பவங்கள், வளர்ந்த குடும்ப சூழ்நிலை குழந்தைகளை சிறுவர்களாக்கி பின் மனிதர்களாக்குகிறது.

தமிழ் பெரியவர்கள் உலகம் வன் முறை நிறைந்தது. இன, மத, சாதிய மற்றும் பால் வன்முறைகளோடு தற்பொழுது அரசியல் மற்றும் சினிமா வன்முறையும் சேர்ந்து கொண்டுள்ளது.

எந்த விடயத்திலும் குழந்தைகளின் மனங்களில் பதிந்தால் எக்காலத்திலும் மாறாது.

கிரிஸ்ரியன் அன்டர்சனை நினைவு கூரும் இவ்வேளையில் தரமான சிறுவர் இலக்கியம், நாடகங்களின் தேவை தமிழில் உண்டென்று சொல்ல வேண்டி உள்ளது.

நன்றி இணையம்

## வேறொருவன்

எங்கே என்
நான்
யாரேனும் அழைத்துப்போங்கள்
என்னை அங்கே
சுவடுகளையாவது தொட...
தவறிய அடையாளங்களையாவது
எடுத்துவர...
எத்தனை சிலுவைகளில்
எத்தனை சமாதிகளில்
இப்போது நான்.
ஒப்பாரியே இல்லாமல் இழவு
கொஞ்சம் கொஞ்சமாய் மரணம்,
கொஞ்சம் கொஞ்சமாய் உயிர்ப்பு
இன்னொன்றாகி.

நான் வேறொருவன்.
பல தடவை எனக்காக
என் அவன்
சிலுவையில், கூண்டில்
இன்னும் பல தீர்ப்பில்
காலம் வீழுந்த தூரத்தில்
எங்கோ என்
நினைவுகளும் மங்கலாய்,
தூரமாய்,
காணாமலும்
யார் யாரிடமோ எல்லாம்
கொஞ்சம் கொஞ்சமாய் அவன்
அவனும் இரசிக்கப்பட்டான்,
நானும் இரசிக்கப்படுகிறேன்
அவன் இங்கே

இனியும் வாழமுடியாது
உண்மைப் பெருவெளியை
நிரப்பிவிட்டது பொய்யிருள்
எத்தனை தடவை
உயிர்த்தாலும்
அவனை கொன்றுவிட
தயாராய்
நானும் – உலகமும்.

ப.அருள்நேசன்

## அழுகைத் தீ..!

தீர்மானிப்பதற்கென்று
என்னிடம்
எதுவுமில்லை.
யாருமில்லாத இன்னுமொரு
கிரகத்தின்
வெறுமையோடும்...
மிக நீளமான
எதிர்காலம் பற்றிய
எண்ணங்களோடும்...
சுவாசிக்கத் துடிக்கின்றன
நுரையீரல்கள்!
என்னிலிருந்து என்னை
இல்லாமல் செய்யும்
கொடிய துயரங்களின்
கொடுமைகள் மட்டும்
நீங்குவதாக இல்லை, சாபமாக!
இருப்பினும்
மகிழ்வின்
இறுதி நிமிடங்கள்
வற்றிவிடவில்லை நம்முள்
என் தாயின் கருவறையைவிட
உன் இதய அறைக்கு
இறுமாப்பு அதிகம்!
அவள் என்னை மகனாக்கினாள்...
நீ என்னை மனிதனாக்கினாய்...
தாலாட்டுப் பாடமுடியாத
அவளின் ஏக்கத்தின் தீர்வாய்
நீ பாடுகின்றாய் மடிசாய்த்து!
இரத்தம் ஒழுகிக்கொண்டிருக்கும் – நம்
இதயங்கள் கூட
இன்னமும்
கர்வப்படுவது அல்லது
கௌரவப்படுவது
சாகடிக்கப்படமுடியாத
நம்
காதலுக்காக...
அட...
கண்ணீர்கூட
நல்ல
நண்பர்கள் பார் நமக்கு!

த.நிரஞ்சலன்

## சொற்சிலம்பு-115

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆ | று | ங் | சீ | வா | அ | நோ |
| மா | கு | லி | பா | ந் | மி | ம் |
| கா | ரி | தி | தே | னி | ண் | ட |
| தெ | னா | ம் | லி | ளை | கீ | இ |
| மூ | ட் | தா | ஷி | ர் | லி | பி |
| சா | ர் | ய | க் | ஸ் | கி | ரு |
| செ | உ | கோ | ன் | சி | த் | கை |

### சொற்சிலம்பம் -113 இன் விடைகள்

01. அ,ஆ,உ

02. பங்களாதேஷ்.

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பிவையுங்கள்.

### சொற்சிலம்பம் - 113 இன் பரிசுக்குரியவர்

த.டிலக்ஷன்,
தரம்-01,
கிளி/ உருத்திரபுரம் ம.வி,
கிளிநொச்சி.

### சொற்சிலம்பம் - 113 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. தி.நகுல்ராஜ், உடுத்துறை வடக்கு, தாளையடி.

02. ர.மீனலோஜினி, 119/3 திருவையாறு, கிளிநொச்சி.

03 கி.டிலக்சன், தரம்-4B கிளி/கிளிநொச்சி ம.வி கிளிநொச்சி.

04. ஏ.நந்தன், D -8 பெரியபரந்தன், பரந்தன்.

05. பா.லினோசிகா தரம்-5, கற்சிலைமடு அ.த.க.பா, ஒட்டுசுட்டான்.

06. ஜெ.யதுர்சிகன், தரம்-5A கிளி/இராமநாதபுரம் ம.வி, இராமநாதபுரம்.

07. ஆனந்தா, டிப்போறோட், கோண்டாவில்.

08 ர.சாரங்கன், தரம்5, யா/முத்துத்தம்பி ம.வி, யாழ்ப்பாணம்.

01. தமிழீழத்தின் தேசிய மரத்தின் பெயர்?

01) ..........................................


02. உலகில் அதிக நாடுகளை கொண்ட கண்டம்?

01) ..........................................

சொற்சிலம்பம்-115
ஈழநாதம்.
யாழ்சாலை.
கிளிநொச்சி.

பெயர் :- ..........................................

முகவரி
:- ..........................................
..........................................
..........................................



சொ.ஜானுகா, தரம்-4B
கிளி/ வட்டக்கச்சி ம.வி.



## இளைய நாதம்

## யானை மீன்

நீரையும் மீனையும் பிரிக்க முடியாது. நீர் வாழ்முதுகெலும்பிகளான இவை துடுப்புக்கள் மூலம் நீந்தியும் செவுள்கள் மூலம் சுவாசித்தும் வாழ்கின்றன. இவற்றின் உடல் மெல்லிய எலும்புகளினாலான செதில்களினால் போர்த்தப்பட்டிருக்கும். வெப்ப மண்டலப் பகுதிகளில் இருந்து குளிர் நிலவும் துருவப் பகுதிகள் வரை உலகில் உள்ள அனைத்து நன்னீர் நிலைகளிலும் உவர்நீர் நிலைகளிலும் வாழ்கின்றன.

மீன்களில் 30000 இற்கும் மேற்பட்ட இனங்கள் உள்ளன. ஹாக் மீன், லாம்ப்ரே போன்ற துவக்க கால மீன்கள், சுறா, திருக்கை போன்ற குருத்தெலும்பு மின்கள் மற்ற எலும்பு மீன்கள் என்று மூன்று வகுப்புகள் உள்ளன.

யானை மீன் என்பது எலும்புச் சட்டகமுடைய மீன்கள் வகுப்பில் மோர்மிரி.்.போர்மெஸ் (MORMYR IFORMES) வரிசையைச் சேர்ந்தது. இதை மோர்மிரிட் என்றும் கூறுவார்கள். ஆபிரிக்காவில் நன்னீர் நிலைகளில் வாழும் இதன் கீழ் உதடு மிக நீளமாக இருக்கும். அல்லது முகறைப்பகுதி குழாய் வடிவில் நீளமாக யானை துதிக் கை போல் அமைந்திருக்கும். இது தனது நீண்ட உதடு அல்லது முகறையால் பாறை அல்லது மண்ணைக் கிளறி தனது இரையான சிறு உயிரினங்களைப் பிடித்துண்ணும்.

பெரும்பாலான யானை மீன்கள் 15 செ.மீ நீளம் வரை இருக்கும். ஒரு சில மீன்கள் 1.5 மீற்றர் நீளம் வரை வளரக் கூடியவை. இதில் பெரும்பான்மை யானவற்றுக்கு வால் பக்கம் மின்விசையை உண்டாக்கும் ஒரு உறுப்பு அமைந்துள்ளது. இந்த உறுப்பு தொடர்ந்து மின்விசையை உற்பத்தி செய்து கொண்டே இருக்கும் சேறு



நிறைந்த நீரில் இது நீந்திச் செல்ல இந்த மின் சக்தி உதவுகின்றது.

## தொகை அகராதி


| | |
|---|---|
| அறப்பகுதி | ~இல்லறம், துறவறம் |
| இருமை | ~இம்மை, மறுமை |
| உவா | ~அமாவாசை, பௌர்ணமி |
| நூல் | ~முதனூல், வழிநூல், சார்பு நூல் |
| இலக்கணம் | ~எழுத்து, சொல், பொருள், யாப்பு,அணி |
| உண்மைப்பொருள் | ~பதி, பசு, பாசம் |
| பா | ~வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா |

ந.பவித்ரா,
தரம்-9,
கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி.

### இங்கு தொடர்பில்லாத ஒருவர் உள்ளார் அவர் யார்?



## உணவகம்




நன்றி:- பன்டேடைம்ஸ்


**ஒருவருடைய மணமுறிவுக்கு ஆயிரம் காரணங்கள் இருக்கலாம். உங்கள் அன்பு வாழ்வைவிட நடைமுறை வாழ்வின் சிக்கல்கள் பெரிதல்ல.**

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப் படுகின்றதாகக் கூறுகின்றோம். அப்படியென்றால் அநேகமான திருமணங்கள் ஏன் விவாகரத்தில் முடிவடைகின்றன. இன்றைய நிலையில் மணவாழ்வில் இணையும் தம்பதியினரை விட விவாகரத்துக்காக நீதிமன்றத்தில் காத்திருக்கும் ஜோடிகள் ஏராளம்.

உலகில் விவாகரத்தானது கட்டுக்கடங்காத ஒரு விடயமாகவே உருவெடுத்துவிட்டது. சர்வசாதாரணமாக இந்த விடயம் சமூகத்தில் எவ்வளவு பாரதூரமான பின்விளைவுகளை ஏற்படுத்துகின்றது என்பதை யாரும் சிந்திப்பதில்லை.

எதிர்பார்த்த விருப்பங்கள், கனவுகள், நிறைவேறாமல் ஏமாற்றம் அடையும்போது அங்கு அன்பு மறைந்து சண்டை சச்சரவுகள் உருவாகி வேதனை ஆட்டிப் படைக்கும் போது கோபமும், வெறுப்பும் வரும்போது விவாகரத்துத்தான் ஒரே வழியென்று முடிவெடுக்கின்றார்கள்.

ஒருவருடைய மணமுறிவுக்கு ஆயிரம் காரணங்கள் இருக்கலாம். உங்கள் அன்பு வாழ்வைவிட நடைமுறை வாழ்வின் சிக்கல்கள் பெரிதல்ல. மணவாழ்வைப் பொறுத்தவரையில் மனக்கசப்பு வந்துவிட்டால் கணவன் மனைவி ஒருவருக்கொருவர் வேண்டாத வார்த்தைகளால் நொறுக்குகின்றனர்.



# விவாகரத்தா..? ஏன் இந்த முடிவு..?

விவாகரத்தானது, ஒருவருடைய மன உளைச்சலுக்கும் சுயமரியாதைக்குறைவுக்கும் காரணமாக இருப்பதுடன், சமூகத்தில் மகிழ்ச்சியற்றவர்களும், ஒருவித வெறுமையுணர்வுடன் இருப்பவர்களும், விவாகரத்துப் பெற்றவர்களும், பிரிந்து வாழ்பவர்களும் என்பதே உண்மை. அதைவிட பெற்றோரின் விவாகரத்தால் மன அழுத்தத்திற்குள்ளாகும் பிள்ளைகளையும் கல்வி நாட்டம் இல்லாதவர்களையும் உருவாக்குகின்றன.

கணவன் மனைவியிடையே உணர்வுபூர்வமான உடல் ரீதியான அன்பின் பிணைப்பாகவே திருமணம் ஏற்படுத்தப்படுகின்றது. இதனைப் பலர் வெறும் சட்டபூர்வமான வாக்குறுதிகளாகக் கருதுவதால் வாழ்வில் சிறு பிரச்சினைகள் வந்தாலும், அதனை விரிவுபடுத்தி எந்த நேரமும் அதனை முறித்துக் கொண்டு இலகுவில் விலகி விடலாம் என்றுதான் கருதுகிறார்களே தவிர, மணவாழ்வில் ஏற்படும் சவால்களுக்கு எவ்வாறு முகம் கொடுத்து வெற்றி காணலாம் என்பதை யாரும் உணர்வதில்லை.

திருமணத்திற்குப் பின்னர் மணவாழ்வில் வார்த்தைகளால் நொறுக்கப்பட்டவர்களின் மனங்களில் சிறு சிறு கீறல்கள் கூட பெரிய இடைவெளிகளை ஏற்படுத்தி என்றுமே நிரப்பமுடியாத அந்த விரிசல் விவாகரத்து என்ற முடிவுக்கு இட்டுச் செல்கின்றது.

சிலருடைய மணவாழ்க்கை சிறப்பாக அமையாது விட்டாலும் தங்கள் சுயகௌரவத்திற்காக, பிள்ளைகளின் நல்ல எதிர்காலம் கருதி பரம்பரையின் பாரம்பரியம் எண்ணி, கணவன் மனைவி இருவரும் ஒருவர் முகம் ஒருவர் பார்க்காமல், பேசாமல் ஒரே வீட்டில் சேர்ந்து வாழ்பவர்களும் இருக்கிறார்கள். கால ஓட்டத்தில் அவர்களது பிரச்சினை தீர்ந்து விடுவதால் மீண்டும் மணவாழ்வில் வெற்றிகொள்கின்றார்கள். சட்டமோ, மனிதனோ கொடுக்காத ஆறுதலை காலம்கொடுக்கும் என்ற உண்மையை உணர்ந்து அவசரப்பட்டு விவாகரத்து என்ற முடிவுக்கு வராமல் இருப்பது நல்லது.

பல கணவன், மனைவியிடையே தவறான நடத்தையே அநேகமான விவாகரத்துக்குக் காரணமாகின்றது. பலமும், பலவீனமானதும் இந்த மானிட வாழ்வு இந்தத் தவறுக்குக் காரணமென்ன? இவற்றிலிருந்து எவ்வாறு விடுதலையடையலாம் என்று சிந்தியுங்கள். "சந்தோசத்துக்கு மிகவும் வேண்டியது மன்னிக்கும் குணமே" ஒருவர் தவறை ஒருவர் மன்னித்து உங்கள் துணையை ஏற்றுக் கொள்ளுங்கள். அத்துடன் மணவாழ்வை பலமாக வைத்திருக்கும் தம்பதியர்களுடன் பழகுங்கள். நீங்கள் எடுத்த முடிவு சரியா தவறா என்று புரியும்.

ஒரு காலத்தில் ஒருவரையொருவர் தீவிரமாகக் காதலித்திருப்பீர்கள். உங்கள் காதல்களை மூடி அதே காதலை மீண்டும் புதுப்பித்துப் பாருங்கள். அதெல்லாம் சரிப்பட்டுவராது என்று கருதினாலும் மீண்டும் மீண்டும் சிந்திக்கச் சிந்திக்க எல்லாக் கசப்பும் மறைந்து அன்பு மலரும்போது விவாகரத்து என்ற முடிவுக்கு வந்த உங்கள் வாழ்க்கை உங்களைப் பார்த்து வெட்கப்படும்.

**அன்பு கணேஸ்**

## சோயா ரொட்டி




தேவையான பொருட்கள்:-

| | |
|---|---|
| கோதுமை மா | - 250 கிராம் |
| சோயா பருப்பு | - 100 கிராம் |
| தேங்காய்ப்பூ | - அளவாக |
| வெங்காயம் | - 5 |
| பச்சைமிளகாய் | - 4 |
| முருங்கையிலை | - ஒருகைப்பிடி |
| பட்டர் | - 1மே.கரண்டி |
| உப்பு | - அளவாக |

செய்முறை:-


★சோயாப் பருப்பை மூன்று மணித்தியாலம் வரை ஊறவைத்து அரைத்துக்கொள்ளவும்.

★வெங்காயம், பச்சைமிளகாய், முருங்கையிலை இவற்றைச் சுத்தம் செய்து குறுணலாக வெட்டிக்கொள்ளவும்.

★மாவுடன் பட்டர், உப்பைச் சேர்த்து நன்கு பிசைந்துகொள்ளவும்.

★அரைத்த சோயா, வெங்காயம், பச்சைமிளகாய், முருங்கையிலை இவற்றை மாவுடன் சேர்த்துக் கலந்து நீரைச் சிறிது சிறிதாகச் சேர்த்து இறுக்கமாகக் குழைத்துக்கொள்ளவும்.

★பின் சிறு வட்டங்களாகத் தட்டி எண்ணெய் பூசிய தோசைக்கல்லில் சுட்டு எடுக்கவும்.



# பெற்றோர்களை கௌரவப்படுத்துங்கள்

பெற்றோர்கள் பாதுகாப்பின்றி தவிக்கும் நிலை கண்டு நெஞ்சு பொறுக்குதில்லை. நாம் இப் பூமியில் பிரகாசமாய் வாழ எண்ணெய்யாய் தம்மை உருக்கியவர்கள் பெற்றோர்களே. இதனை எப்போதும் நாம் மறக்கக் கூடாது.

"காவோலை விழ குருத்தோலை சிரிக்கிறதாம்" குருத்தோலை தானும் காவோலையாவேன் என்பதை மறந்து. அதுபோல் தான் இன்றைய பிள்ளைகள். தமக்கென்று ஒரு வாழ்வு வந்ததும் பெற்றவரை புறந்தள்ளிவிடுகின்றனர். இப்படியான நடைமுறைகளால் தான் இன்று வயோதிபர் இல்லங்களில் பெற்றோர் இருந்து பெரும் மனக் கவலைப்படுகின்றனர். ஒவ்வொரு பிள்ளைகளும் மனச் சாட்சியோடு நடந்தால் பெற்றோரின் மனமகிழ்வுக்கு வழி பிறக்கும். அவர்கள் இளமையில் இருக்கும் போது எத்தனை இடர்கள்பட்டு எம்மை பாதுகாத்திருப்பார்கள். அவற்றை நாம் மறந்து நடக்கலாமா?

ஒரு வீட்டில் நடந்த சம்பவம் அங்குள்ள தந்தை தாய் இருவரும் எல்லாப் பிள்ளைகளுக்கும் திருமணம் முடித்துக் கொடுத்துவிட்டு ஒரு பிள்ளையோடும் இராமல் தனிமையில் இருந்து பெரும் துன்பப்படுகின்றனர். அவர்கள் உடம்பில் கிள்ளிப் பிடிக்கவே சதையில்லை. ஆனாலும் உடலில் உள்ள உறுதி தளரவில்லை. ஏனம்மா நீங்கள் உங்கட பிள்ளைகளோடு போய் இருக்கலாம் தானே என்று கேட்க அவர்கள் கூறிய வார்த்தை இவைதான்.

தனக்கு ஐந்தும் பெண் பிள்ளைகளாம். கடைசி மகளோடு தாங்கள் இருந்தார்களாம். அன்றும் வழக்கம் போல மதிய உணவை உண்டபின் முன் முற்றத்தில் உள்ள மரத்தடியில் கொஞ்சம் இளைப்பாறினார்களாம். அப்போது மகளும் மருமகனும் சண்டை பிடிக்கினம். தாங்கள் என்னவென்று வினவிய போது கொப்பாவையும், கொம்மாவையும் வைத்துச் சாப்பாடு போட என்ர உழைப்புக் காணாது என்று மகளுக்கு அடிவிழுந்ததாம். அன்றிலிருந்து தாங்கள் இருவரும் இப்படித் தனிய இருந்து கவலைப்படுவதாவும் தங்களால் தங்கள் மகள் துன்பப்படக் கூடாது என்றும் அந்தப் பெற்றோர் கூறி கண்ணீர்விட்டனர்.

இவ்விடயத்தை பாருங்கள் மருமகன் நினைக்கவேண்டும் தன்னுடைய தாய் தந்தை போல தானே மாமன் மாமி என்று. மருமகனால் மட்டும் பிரச்சினையல்ல.

எத்தனையோ மகன் மாரும் இன்று மனைவி மாரின் பேச்சைக் கேட்டு பெற்றோரை தவிக்க விடுகின்றனர். மகள்மாரும் கணவன்மாருக்கு பயந்து தம் பெற்றோரை கவனியாமல் வாழ்கின்றனர். இவையாவற்றுக்கும் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். சாப்பாடு கொடுப்பதே ஒரு சுமையாக பிள்ளைகள் நினைப்பது எவ்வளவு வேதனைக்குரிய விடயம். எத்தனை இரவுகள் கண்விழித்து வயிற்றுப்பசி மறந்து எமக்கு உணவு கொடுத்து எம்மை ஆளாக்கி விட்டிருப்பார்கள் எம் பெற்றோர்.




அவர்கள் உடல் தளர்ந்தமையால் தான் நாம் இன்று உடல் வலுவோடு உள்ளோம் இதனை எந்தப் பிள்ளைகளும் மறக்கக் கூடாது.

**சு.சிவாஜினி**

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




## குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்— 76**

பெயர்:............................................

முகவரி:............................................

............................................

**குறிப்பு:**
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

SRI LANKA RED CROSS SOCIETY

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சிக் கிளை

# உதவிக் கணக்காளருக்கான பதவி வெற்றிடம்

எமது தாபனத்திற்கு உதவிக் கணக்காளர் பதவி வெற்றிடம் இருப்பதால் தகுதி உடையோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமை:-** பல்கலைக்கழகம் ஒன்றில் கணக்கியல் பட்டம்/அல்லது அதுக்கேற்ப தகுதியான அங்கீகரிக்கப்பட்ட தகைமை/ உயர்தரப்பரீட்சை யில் வர்த்தகம் உட்பட சித்தியடைந்திருத்தல்.

**வயது எல்லை:-** 25 - 45

**அனுபவம்:-** ஐந்து வருட அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் அனுபவம்.

**வதிவிடம்:-** கிளிநொச்சி மாவட்டத்தை நிரந்தரமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

**கணினி:-** காரியாலய முகாமைத்துவ கணினி சான்றிதழ் இருத்தல் வேண்டும்.

மேற்படி தகுதியுடையோர் எதிர்வரும் 05.12.2005இற்கு முன் தங்களது விண்ணப்பங்களை கௌரவ தலைவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**குறிப்பு:-** கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவி குறிப்பிடல் வேண்டும். நேர்காணலுக்கான கடிதம் அனுப்பி வைக்கப்படும்.

இ.கார்த்திகேசு,
கௌரவ தலைவர்.

(சி-13412)



SRI LANKA RED CROSS SOCIETY

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சிக் கிளை

# சாரதிகள் பதவிக்கான பதவி வெற்றிடங்கள்

எமது தாபனத்திற்கு சாரதிகள் தேவையாகவுள்ளது.

கீழ்காணும் தகுதியுடையவர்கள் அப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

**தகைமை:-**

1. ஜி.சி.ஈ. சாதாரண தரம் அல்லது எட்டாம் வகுப்பு பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.
2. வாகன சம்பந்தமான திருத்தங்கள் செய்யும் ஆற்றல் இருத்தல் வேண்டும்.
3. கனரக வாகன அனுமதிப் பத்திரம் (கனினி செய்து) இருத்தல் வேண்டும்.
4. அனுபவம் 05 வருடங்கள்.
5. கிளிநொச்சியை பிறப்பிடமாக உள்ளவராயின் முன்னுரிமை வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி 05.12.2005**

**குறிப்பு:-**
கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவி குறிப்பிடல் வேண்டும். மேற்படி தகுதி உடையவர்கள் எதிர்வரும் 05. 12. 2005க்கு முன் தங்கள் விண்ணப்பங்களை கௌரவ தலைவர் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சிக் கிளை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

நேர் காணலுக்கான கடிதம் தங்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

இ.கார்த்திகேசு,
கௌரவ தலைவர்.

(சி-13413)



# கல்வியாண்டு 2005/2006 ற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன



**A/L** தகைமைகளுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர் கல்வி யினைப் பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அனேகமானோர் பிரபல பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவதிலும் **(Admission)** உயர்கல்விக்கான வாய்ப்புக்களைப் பெறுவதிலும் தவறிவிடுகின்றனர். சர்வதேச அங்கீகாரமுள்ள **EDEXCEL, UK** வழங்கும் **BTEC HND** தகைமை உலகின் பிரசித்தி பெற்ற பல பல்கலைக்கழகங்களில் **B.Sc (Hons)** பட்டப்படிப்பின் இறுதியாண்டிற்கான நேரடி அனுமதியைப் பெற்றுத்தருவதோடு உயர்கல்விக்கான ஏனையக்களையும் உறுதிசெய்கின்றது. அதுமட்டுமல்லாது **HND** தகைமையைப் பெற்றுக் கொண்டவர்கள் போட்டி மிகுந்த வேலைவாய்ப்புச் சந்தையில் இலகுவில் தகுதியான வேலைகளைத் தட்டிச் செல்கின்றனர்.



கிருஷாந்தஸ் ஜூட்
சுண்டிக்குளி

சென். பற்றிக்ஸ் கல்லூரியின் மாணவனாகிய நான் **A/L** 2004 கணிதப்பிரிவில் பரீட்சைக்குத் தோற்றிப் பல்கலைக்கழக அனுமதி தவறவிடப்பட்ட நிலையில் எனது வாழ்க்கைக்கு இந்த **IIS** நிறுவனம் நம்பிக்கையான ஒரு வழியைக்காட்டியது. தகவல் தொழில்நுட்பக் கல்விக்கு தனித்துவம் மிக்க **IIS** நிறுவனத்தில் மாணவனாக இருப்பதையிட்டு பெருமையடைகிறேன். **Edexcel International UK** நிறுவனத்தின் **HND** கற்கைநெறியைப் பயின்றுவரும் நான் இக் கற்கைநெறியின் அங்கீகாரம் தொடர்பாக திருப்தி யடைந்துள்ளேன். இவ்வாண்டில் பட்டம் பெற்று வெளியேறிய மாணவர்களுக்கு வெளிநாட்டு உயர்கல்வி, வேலை வாய்ப்பு எனப் பல்வேறு சந்தர்ப்பங்கள் தேடி வருவதையிட்டு எனக்கும் ஓர் ஒளிமயமான எதிர்காலம் உண்டென நானும் எனது பெற்றோரும் நம்பிக்கையுடன் உள்ளோம்.

**BTEC HND**
World Class Qualifications
Delivered Locally....... Recognised Globally

**B.Sc ( Hons ) / BEng ( Hons )**
1 year at leading Universities in UK, USA, Australia, Canada etc.

↑

**BTEC HND**
Computing / Software Engineering / Business Information Technology ( 1 ½ years )

↑

**GCE A/L**
with Subjects

edexcel
INTERNATIONAL
Approved Training Centre

# IIS CITY CAMPUS

# 181, Navalar Road, Jaffna.
TP No. : 021 222 8060 / 021 222 2201



# வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டம்

திட்டத்திற்கான கிராமங்களைத் தெரிவுசெய்ய புள்ளிகள் பின்வருமாறு வழங்கப்படுகின்றன.

★ அளவிடக்கூடியகாரணிகள்

| | |
|---|---|
| 1. அழிவுற்ற வீடுகளின் எண்ணிக்கை | - 40 புள்ளிகள் |
| 2. இடம்பெயர்ந்து மீளத் திரும்பியோர் | - 15 புள்ளிகள் |
| 3. நலிவுற்றோர் வறுமையுற்றோர் எண்ணிக்கை | - 15 புள்ளிகள் |
| 4. போரினால் பாதிப்படைந்தமை | - 05 புள்ளிகள் |
| உபமொத்தம் | - 75 |

★ அளவிடமுடியாத காரணிகள்

| | |
|---|---|
| 1. பொருளாதார வசதியீனம் | - 05 புள்ளிகள் |
| 2. பின் தங்கிய கல்வி வசதிகள் | - 05 புள்ளிகள் |
| 3. அடிப்படை சமூக உட்கட்டமைப்பு வசதிக்குறைவு | - 05 புள்ளிகள் |
| 4. சமூகப் பின்னடைவு | - 05 புள்ளிகள் |
| 5. நீண்ட காலமாக அபிவிருத்தியில் புறக்கணிப்பு | - 05 புள்ளிகள் |
| உப மொத்தம் | - 25 புள்ளிகள் |
| முழுத்தொகை | - 100 புள்ளிகள் |

உங்கள் வீடு யுத்தத்தால் அழிவடைந்திருப்பின் அவ் விபரத்தினை வீடு உள்ள முகவரிக்கான கிராம அலுவலரிடம் கண்டிப்பாகப் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

**தொடர்ந்து விபரமறிய நாளைய பத்திரிகையை வாசியுங்கள்.**

(சி.13460)



உலா 61

# ஏ9 - ஏரம்பு

## எங்களுடைய மக்களை யாராலும் ஏமாற்ற முடியாது!

வணக்கம் வணக்கம் எல்லாருக்கும்! உங்கட பக்கம் வெள்ளம் எல்லாம் எப்பிடி? என்ரை குஞ்சுகள் எல்லாரையும் கும்பிட்டுக் கேட்கிறன்; கவனமாய் இருங்கோ. மற்றது மழையை எங்களால நிற்பாட்டேலாது. ஆனால், வெள்ளம் ஏற்படிற காலத்தில வரக்கூடிய தொற்றுநோய்களை நாங்கள் கவனமாய் இருந்தோமெண்டால் கட்டாயம் கட்டுப்படுத்தலாம். அதேமாதிரி போக்குவரத்தில ஈடுபடிறவையும் மழைகால நெருக்கடி நிலைமையளைக் கருத்தில கொண்டு, அதீத அவதானத்தோட நடவுங்கோ!

ஏற்கெனவே போரால ஏற்பட்டது போதாதெண்டு நீங்களும் வேற... தயவுசெய்து வேண்டாம்! உங்களுக்கு விளங்குமெண்டு நினைக்கிறன். மற்றது ஒரு அன்பான வேண்டுகோள், உரிமையோட கேட்கிறன், குறை நினைக்கப்படாது!

தங்கட வீடுகளை இழந்து தற்காலிகமாயோ இல்லாட்டி கிடைச்ச இடங்களிலையோ சிரமங்களுக்கு மத்தியில குடியிருக்கிற எங்கட உறவுகள் இந்த மழை வெள்ளத்துக்குள்ளை எப்பிடியெல்லாம் கஸ்ரப்படுகினம் எண்டிறதை மனசில இருத்தி, ஒவ்வொருத்தரும் தங்களால முடிஞ்சளவுக்கு சின்னனாய் ஏதாவது செய்யலாம். 'சக மனிதனின் வேதனையில் தான் கடவுள் தனது தேவைகளை இனங்காட்டுகிறார்' எண்டிறதுக்கொப்ப கடவுளுக்குச் செய்யிறதாய் நினைச்சுக்கொண்டு ஒவ்வொருத்தரும் சின்னதாய் (நேரே கொடுக்கிறது அந்த மக்கள் மனதில தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தலாம். ஆகவே புனர்வாழ்வுக்கழகம் போல ஏதாவதொன்றினூடாக) ஏதாவது செய்தால், கடவுள் உண்மையிலேயே ஏற்றுக்கொள்ளிற காணிக்கையாய் அது இருக்கும் பிள்ளையள்.

மற்றது என்ன இந்தாள் ஏதோ சொல்லிட்டு தொடர்ந்தும் எழுது தெண்டு ஏங்கிப்போய் பார்ப்பியள். அதொரு பெரீய்.....ய கதை. பேந்தைப் பயன் சொல்லிறன். இப்ப நாட்டு நிலைமையளைப் பற்றிக் கதைப்பம். ஏனெண்டால் தமிழ் மக்கள் வாக்குச் சீட்டு இல்லாமலேயே தங்கட அரசியல் தெரிவையும், நிலைப்பாட்டையும் சில விளக்கங்கெட்டதுகளுக்கு தெளிவுபடுத்தியிருக்கிற இந்த சந்தர்ப்பத்தில கன பேய்ப்பம்பலுகளையும் காணக்கூடியதாய் இருக்கிது பாருங்கோ!

சின்னனில தமிழ்ப்பாடப் புத்தகத்தில 'களவெடுத்தாலும் பொய் சொல்லாதே!' எண்டொரு கதை படிச்சது உங்களுக்கு ஞாபகம் இருக்குமெண்டு நினைக்கிறன் (நான் இந்த வயசிலயே மறக்கேல்லை...). அதில பொய் சொன்ன மந்திரியை சிறையில அடைச்சிட்டு, களவெடுத்தாலும் உண்மை சொன்ன திருடனை மந்திரியாய் அமர்த்தின அரசன்ரை கதை வருகிதெல்லோ!

அதேமாதிரித்தான் கடந்த 5ஆவது சனாதிபதித்தேர்தல் முடிவுகளும் அமைஞ்சிருக்கு. அப்ப மகிந்த உண்மை பேசிற ஆளோவெண்டு உடன குறுக்குக்கேள்வி கேட்பியள். அப்பிடியுமில்லை! உண்மையைப் பேசாத, குறைவான (தமிழ்மக்களை நோக்கி) பொய்களைப் பேசுபவர் தான் மகிந்த. ஆனால், ரணில் தரப்போ மூச்சு விடிறதே நச்சுப்பொய்களை மட்டும்தான். தமிழ் மக்களின்ரை இருப்பைத் தீர்த்துக் கட்டிறதையே தீர்வாகக்கொண்ட பேரினவாத நிலைப்பாட்டில இருந்து கொஞ்சமும் மாறாமல் இருந்து கொண்டு, ஏதோ தான் பெரிய மென்போக்குவாதியெண்டும், நாங்கள் தனக்கு ஆதரவளிப்போம் எண்டும் நினைச்ச அவருக்கு எங்கட சனம் நல்ல பதிலடி கொடுத்திருக்கிது.

அதிலையும் தேர்தலுக்கு முந்திய நாட்களில யாழ்-நூலகம் எரிச்ச காமினியின்ரை மகன் நவீன் திசநாயக்கா மற்றும் மிலிந்த மொறகொட மூலம் உச்சக்கட்ட பேரினவாதப்புத்தியைக் காட்டி சிங்கள வாக்குகளையும் ஒட்டுமொத்தமாய் கவர நினைச்ச அவருக்கு உது கட்டாயம் வேணும். உலகத்திலயே 65 000 வாக்காளர் இருக்கிற பகுதியில இருந்து ஒற்றை வாக்கை மட்டும் பெற்றுக்கொண்ட அரசியல் பிரமுகர் ரணில் ஆகத்தான் இருக்கும்.

அதேநேரம் வாக்களிக்கிறதுக்கு அச்சுறுத்தல் இருந்ததால தான் சனம் பகிஸ்கரிச்சது எண்டு கருத்துச் சொல்லிற சில கொழும்பு புத்திசீவியளைப் பார்த்து நான் கேட்கிறன். தேர்தலுக்கு முந்தியும் பிந்தியும் கலாநிதிப் பட்டம் தாங்கிய ஒரு அரசியல் விண்ணர் உட்பட ஒரு சிலர் கிடைச்ச வானொலியளில எல்லாம் 'மகிந்தவின்ரை இனவாதப்போக்கிற்கு எதிரான சனநாயகவாத சக்தியான ஐ.தே.கவுக்கு சிறுபான்மை(?) மக்கள் ஆதரவளிக்கோணும்' எண்டு வலியுறுத்தினவை. இப்பைகூட ஒருத்தர் இயக்கத்தின்ரை அச்சுறுத்தல் இருந்ததாலதான் சனம் வாக்களிக்கேல்லை எண்டு 'தங்கட மீசையில மண் இல்லைபோல' பொரிக்கிறார்.

நான் பாருங்கோ மழைக்கு மட்டும் பள்ளிக்கூடப் பக்கம் ஒதுங்கின ஆள்! அவையள் Phd அது இதெண்டு 26 எழுத்துகளையும் கூட வைச்சிருக்கிறவை, இருந்தாலும் பகிரங்கமாய் கேட்கிறன்; பேரினவாத சக்தியளின்ரை கை ஓங்காமல் இருக்கிறதுக்காக தமிழ்மக்கள் தான் வாக்களிக்கோணும் எண்டு நிலைமை இருக்கிறதை அவரே ஒத்துக்கொள்ளிறார். அப்பிடியெண்டால் சிங்களத்தரப்பு தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வை விரும்புதெண்டு காட்டிறதுக்காக, தமிழ் மக்கள் ரணிலுக்கு ஆதரவளிக்கோணும் எண்டு சொல்லிறியள்.

பேரினவாதத்தை வெளிப்படையாவே ஒத்துக்கொள்ளிற மகிந்த தரப்பை விடுவம். மலையகத்தைச் சேர்ந்த 2கட்சியளையும்... இல்லை... கட்சியளின்ர ஆதரவையும் வாங்கின நிலைமையில ரணிலுக்கு ஏதோ இப்ப கிடைச்சிருக்கிறதில கூட மூண்டிலொரு பங்கு வாக்குகள் மலையகத் தமிழ்மக்களுடையதே தவிர, சிங்களச்சனத்தின்ர இல்லை. ஆனாலும், ஆட்சிக்கு அவர் வந்திருந்தால் இதுவரைக்கும் காணப்படாத பேரினவாத ஆட்டம் ஆடி 2ஆவது சனாதிபதித்தேர்தலுக்கான சிங்கள ஆதரவைத் திரட்டப் பார்த்திருப்பார்.

சந்திரிகா எங்கட உரிமையளை அங்கீகரிச்சு சமாதானம் கொண்டு வருவா எண்டு நப்பாசைப்பட்டு 1994 இல நாங்கள் தமிழர் அளிச்ச ஆதரவில வந்த சந்திரிகா மெடம் கடைசியில இருக்குமட்டும் சதிராடிட்டு, போறநேரம் பார்த்து சமஷ்டியைப் பற்றி போதிக்கிறா. அப்ப மென்போக்குவாதி(?) ரணில் எப்பிடிக் கதைச்சவர்? 'பெரும்பான்மையான சிங்கள மக்கள் தமிழினத்தின்ரை உரிமையளை அங்கீகரிச்சு, கடும்போக்குவாதியான(?) மகிந்தவை ஒருதலைப்பட்சமாய் நிராகரிச்சிட்டினம்' எண்டொரு பிம்பத்தைத் தோற்றுவிக்கிறதுக்காக தமிழ்மக்கள் தான் வாக்களிச்சாகோணும் எண்டிற நிலைமை எதை வெளிப்படுத்திது?

ரணிலுக்குத் தேவைப்பட்ட வாக்குகள் போல 3 மடங்கு வாக்குகள் யாழ்ப்பாண மாவட்டத்தில மட்டும் போடப்படாமல் கிடந்திருக்கெண்டால், தமிழ் மக்களின்ரை நிலைப்பாட்டை புரிஞ்சுகொள்ள [illegible]கோணும். இரவல் பலத்துக்காக அவர் சர்வதேச வலைப்பின்னலுகளை பின்னோ பின்னெண்டு பின்னிபிடரி தெறிக்க கவிண்டிட்டார். ஆனால், எங்கட இனத்தின்ர பலம் எங்கட மக்களிட்டை பரவலாய் வியாபிச்சு தேசிய ஆன்மாவாய் உருவெடுத்திருக்கு. அதை ஒருத்தரும் ஒண்டும் செய்யேலாது. மற்றம்படி இந்தத் தேர்தலில சிங்கள மக்கள் தங்கட தெரிவை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தோணும் எண்டிறது மட்டும்தான் தமிழ்மக்களோட நிலைப்பாடாய் இருந்திச்சிது.

இல்லை ஒரு கதைக்கு ரணிலுக்கு தமிழ்மக்கள் வாக்களிச்சு வெல்லப்பண்ணினாப்போல, அடுத்த தாய் இஞ்சை எங்களுக்கு என்ன உரிமையள் கொட்டவே போகுது? தான் விரும்பினாலும் அரசியலமைப் பின்ரை சரத்துகள் தமிழ்மக்கள் எதிர்பார்க்கிற அதிகாரப்பகிர்வைக் கொடுக்கிறதுக்கு தடையாய் நிக்கிதுகள், மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லை எண்டு கன சிக்கல்கள் இருக்கெண்டு இன்னும் ஒரு 6 வருசத்துக்கு இழுத்துக்கொண்டு போக, எங்களை என்ன இஞ்சை ஆவெண்டு வாய் பார்த்துக்கொண்டு கிடக்கவே சொல்லிறியள்? அடையாள அட்டையள் கேட்கப்படிறது குறையிறதும், கொழும்பில செக்பொயின்ருகள் குறையிறதும் தான் சமாதானம் எண்டு நினைக்கிற அளவுக்கு ஏன் வலு 'சீப்' (Cheap) ஆகிட்டியள்?

நாளைக்கு எங்கட நாடு சுதந்திரம் அடைஞ்ச பிறகு எங்கட பல்கலைக்கழகங்களில நீங்கள் எல்லாம் வந்து படிப்பிக்கலாம். நான் உயிரோட இருந்தால் தெரிஞ்சாக்களோட கதைச்சு இப்பத்தைய விட உங்களுக்கு சம்பளம் கூட்டித்தரச்சொல்லி சொல்லிறன். சொகுசான வேலை போயிடும் எண்டு நீங்கள் கவலைப்பட்டு, தரமிறங்கி உப்பிடியெல்லாம் அலம்பத்தேவையில்லை!

இந்த இடத்தில பழைய சம்பவம் ஒண்டு ஞாபகத்துக்கு வருகிது. 1994 இல சந்திரிகா பதவியேற்ற புதுசில பென்சனியர் பேரம்பலம் உட்பட என்ர பள்ளிக்கூடக்கூட்டாளிமார் சிலர் 'என்ன இருந்தாலும் அவள் தாய்மாதிரி இல்ல, மிச்சம் நல்லவள் 'வசந்தமாளிகை' யில வாற வாணிசிறீ மாதிரி' எண்டு மெச்சிக்கொண்டிருந்தவை. பேந்து பாவங்கள், 'வாணிசிறீ' கைதடியில அடிச்ச குண்டில ஆக்கள் சரி! கூடவே தமிழ்மக்கள் பகிஸ்கரிச்சதையிட்டு கவலை தெரிவிக்கிற சில வெளிநாடுகளிட்டை ஒரு சந்தேகம்;

தென்கொரிய சனாதிபதியைத் தெரிவு செய்யிறதுக்காக வடகொரியாவில தேர்தல் வைச்சால் ஆராவது உடன்படுவியளோ? தாய்வானின்ரை தலைவிதியைத் தீர்மானிக்கிற முடிவுகள் சீனாவில எடுக்கப்படிறதை அனுமதிப்பியளோ? சீனாவில மத உரிமைகளுக்காக மாஞ்சு மாஞ்சு குரல் கொடுக்கிறவையள் அரேபிய மக்களுடைய குரலை ஏன் செவிமடுக்கிறேல்லை? 1993 இல கொண்டு வரப்பட்ட சர்வதேச நீதி மன்றம் (நெதர்லாந்தின் 'தி ஹேக்' நகரில்) முழு அளவில செயற்படிறதுக்குத் தடையாய் சீனா, ரஷ்யாவோட அமெரிக்காவும் நிக்கிறது ஏன்?

இல்லைப் பாருங்கோ! போன வருசம் பொதுத்தேர்தலில தமிழர் தெரிவுசெய்த தமிழ்ப் பிரதிநிதியள் 22 பேரின்ர ஆதரவோட உருப்படியான முடிவு எதனையும் எடுக்கிறதுக்கு சிங்களப்பேரினவாதம் அனுமதிச்சதோ? இல்லைத்தானே! ஆனால் தமிழருக்கெதிரான தீர்மானங்களில மட்டும் ஒற்றுமையாய் 2 பெரிய கட்சியளும் செயற்பட முடிஞ்சிருக்கிது. பிள்ளையள் சிலர் நினைக்கலாம்; சனாதிபதித்தேர்தலைப் பகிஸ்கரிச்ச நாங்கள் பொதுத்தேர்தலில மட்டும் ஏன் பங்கெடுத்தனாங்கள் எண்டு. இப்ப பாருங்கோ நாங்களெல்லாரும் தெரிவுசெய்து அனுப்பின 22 தமிழ்ப் பிரதிநிதியளும் நாடாளுமன்றத்தில எங்களுடைய எண்ணங்களைப் பிரதிபலிக்கிறவையாய், எங்கட குரலாய் இருக்கினம். ஆனால், எங்கட ஆதரவோட வாற சிங்கள சனாதிபதியளோ எங்களை உழக்கி மேல ஏறின பிறகு, அடுத்த 6 வருசத்துக்கு சிங்களப்பேரினவாதத்திட்டை தான் எப்பிடியெல்லாம் நல்ல பேர் வாங்கலாமோ, அவ்வளவுக்கு எங்களை நசுக்கப் பார்ப்பினம். அதுதான் கடந்த 60ஆண்டுகளும் எங்களுக்கு உணர்த்தின பாடம், பிள்ளையள்! அதென்ன! தேர்தலுக்கு முன்னால அரும்பொட்டாய் கொண்டுவரப்பட்ட பட்ஜெட்டை மட்டும் அர்த்தமற்றதெண்டு ஐ.தே.க புறக்கணிக்கலாம், நாங்கள் மட்டும் அர்த்தமற்றதொரு தேர்தலைப் புறக்கணிக்கக்கூடாதோ!

உதுதான் பிள்ளையள் வாய் திறக்க முதல், அந்த விசயத்தைச் சொல்லிறதுக்கு தனக்கு யோக்கியதை இருக்கோ எண்டு தெளிவாய் இருக்கோணும் (நானும் உதில கவனமாய் இருக்கிறன்). என்னவோ பிள்ளையள்! 50 வருசமாய் தமிழருக்குப் பேய்ப்பட்டம் கட்டி, ஏமாத்தி வந்த பேரினவாத (இரண்டு வேட்பாளர்களும்) சக்தியளுக்கு இனியும் எங்களை ஏமாத்தேலாது, நாங்கள் தெளிஞ்சிட்டோம் எண்டு பரவலாய் எங்கட அன்புச்சனம் தெரிவிச்சிட்டிது. குறிப்பாய் ராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளை இருந்துகொண்டு தெளிவாய் உங்கட எதிர்ப்பை வெளிப்படுத்தி, தமிழீழத்தேசிய ஆன்மாவின்ரை ஒன்றித்த குரலாய் ஒலிச்ச மக்களுக்கெல்லாம், தமிழினத்தின்ரை அதியுச்ச குருதியையும் வியர்வையையும் வலிகளையும் தன்னுள் தாங்கி நிற்கும் 'ஏ9' வீதி சார்பில் என்னோட 'ஆய்' கள் உரித்தாகட்டும்! எங்கட தலைவரின்ர மாவீரர் உரையில சொல்லப்பட்டிருக்கிற மாதிரி நாங்கள் எல்லாரும் சேர்ந்து முழுத்தேசிய இனமும் விடுதலைக்குத் தயாராகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறதால எல்லாரும் உறுதியாயும், உண்மையாவும் இருங்கோ! வெற்றி எங்களுக்கே! ●

# ஒதியமலையின் ஓலம்...

1984~12~02
அன்று அதிகாலை
விண்ணைத்தாண்டி
அதற்கு அப்பாலும் கேட்டது
ஒதியமலையின் ஓலம்!

எப்பாவம் செய்தார்கள்
இவர்கள்..?
ஏன்... எதற்காக...
இப்படிக்கொன்றாய்?

இரணியப் பகையே
செயலற்றுப்போச்சோ உம்மிதயம்?

ஒன்றா இரண்டா...
முப்பத்திரண்டு உயிர்கள்
முடிந்தன உன் ஊழிக்கூத்தில்.

ஒன்றுமே தெரியாதது போல
பேச்சின்றி இறைந்தார்
ஒதியமலைப் பிள்ளையார்?

வாசிகசாலை
அன்று மட்டும்
பிரேத அறை ஆனதேன்?

பிடரி மயிர் பிடித்து
வெட்டித்தறிப்பதற்கு
தமிழர் யாருமே
வேள்விக் கடாக்களல்லர்!

வேலி பிரித்து வந்து
தாலியறுத்துப் போனாய்
இழவுவீடுகளாச்சு
எல்லோர் வீடுகளும்.

கொப்பளித்துப் பீறிட்ட
குருதியில் குளித்துச்
சிவந்தது ஒதியமலை
மட்டுமல்ல...
ஒவ்வொருவர் விழிகளும்தான்.

படுகொலைகளுக்கென்றே
பயிற்றப்பட்ட இராணுவங்கள்
அடுக்கினால் நிரல்படுத்தி
உலகிலேயே...
சிறிலங்காதான் முதலிடம்.

ஓ...
ஒதியமலை போற்பல
படுகொலைகள்
நிகழ்ந்தேறிவிட்டன.
இனிமேற் படுகொலைகளே
நிகழாத வாறு!

பகையே கேள்!
பொதுசனங்கள் வாழாத
மண் எந்தமண் தெரியுமா?
அது தான் தமிழீழமண்!

குண்டெறியக் கற்றுவிட்ட
குடிசனங்களே வாழ்கின்றன.
"நின்று கதைக்க நேரமில்லை
எல்லைக்குப்போக வேண்டும்"
கேட்கிறதா குரல்.

பகையே...
இனிமேலும்
வேலி பிரித்து வருகின்ற
சோலி உமக்கில்லை.
எல்லைக்கே நாம் வந்துவிட்டோம்.

ஏன் தெரியுமா..?
வாசலில் வைத்தே
உம்மைச் சந்திப்பதற்காகவே
மட்டுமல்ல...
ஒதியமலை போல் அவலங்களை
இனி ஒருபோதுமே
எம்மண் சந்திக்கவே கூடாது
என்பதற்காகவும் தானே!

**வேலணையூர் சுரேஷ்**


# யாழ்ப்பாணத்தில்

ஈழநாதத்தின்
கிளைப்பணிமனை

உங்கள் தொடர்புகளுக்கு
வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:021-222 7917



# மக்கள் வங்கி அறிவித்தல்

PEOPLE'S BANK

## அடைவு நகைகள் பகிரங்க ஏல விற்பனை

மக்கள் வங்கியின் யாழ். பிரதான வீதி, உரும்பிராய் நீடித்த கருமபீடம், நெல்லியடி, சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ் பல்கலைக்கழகம், திருநெல்வேலி நீடித்த கருமபீடம், யாழ். கன்னாதிட்டி, யாழ்.ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் நீடித்த கருமபீடம், காங்கேசன்துறை, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், பருத்தித்துறை ஆகிய கிளைகளில் 31.08.2004 இற்கு முன் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள், 2005.12.03, 2005.12.04, 2005.12.05 ஆகிய திகதிகளில் மக்கள் வங்கி யாழ் ஸ்ரான்லி வீதிக்கிளையில் காலை 9.00 மணிமுதல் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

குறிப்பிட்ட திகதிக்கு முன் அடகு வைத்து இதுவரை மீட்காதவர்கள் 2005.12.02 முன் தங்களது நகைகளை மீட்டுக்கொள்ளுமாறுகேட்டுக் கொள்கின்றோம்.

**பிராந்திய முகாமையாளர்,**
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமை அலுவலகம், யாழ்ப்பாணம்.

(சி.13414)


## ஈரவிழிகளுடன் ஈரைந்தாண்டின் நினைவஞ்சலி



### லெப்ரினன் நாதன்

**முத்துக்குமாரசாமி சசிகுமார்**
8ஆம் வட்டாரம், வல்லன், புங்குடுதீவு.

தாயின் மடியில் 30-07-1977
தாயக மண்ணில் 02-12-1995


வல்லனில் அன்னையின் மடியினில் மலர்ந்து வல்லையின் அண்ணனின் வழியினில் நடந்து வன்னியில் சிறுத்தைப் படையணி வீரனாய் வளர்ந்து யாழ்நகர் சென்று செருக்களமாடி, வெங்கொடுமைச் சிங்களத்து ஈனர் படை அழித்து; இன்னுயிர் தன்னை ஈகமாய் ஈந்திட்ட வேங்கையின் மைந்தனே! எங்கள் பாசமகனே! பத்தாமாண்டில் பாசமுடன் உந்தன் பாத மலர் தன்னில் எங்கள் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

அன்புடன் நினைவுகூரும்
அப்பா, அம்மா, சகோதர சகோதரிகள்,
அத்தான்மார், சித்தப்பா சித்தி
குடும்பத்தினருடன்,
அன்புத்தங்கை கனித்தமிழ் (போராளி)

த.முகவரி:-
"ஸ்ரீராமஜெயம"
கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு.

(6650)



"கங்குலியின் ஆட்டத்தைப் பார்த்திருக்கிறேன். அவரது திறமையை மதிக்கிறேன். நாட்டின் சிறந்த சகலதுறை வீரர்களில் கங்குலியும் ஒருவர். இருப்பினும் கங்குலி அல்லது வேறுயாராக இருந்தாலும் தேர்வு செய்யும் முழு உரிமையும் தேர்வுக் குழுவுக்குத் தான் உண்டு" என இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் (பிசிசிஐ) புதிய

# கங்குலி சிறந்த சகலதுறை வீரர்

## - சரத் பவார்

தலைவர் சரத் பவார் தெரிவித்துள்ளார்.

முன்னாள் இந்தியக் கப்டன் கங்குலியின் ஆதரவாளரான ஜக்மோகன் டால்மியாவின் அணி பிசிசிஐ தேர்தலில் தோற்கடிக்கப்பட்டு, சரத்பவார் தலைமையிலான அணி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலைமையில் கங்குலியின் நிலை குறித்து கேள்விகள் எழுந்துள்ளன.

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட்டில் பங்கேற்கும் இந்திய அணியில் கங்குலி சேர்க்கப்பட்டுள்ளார். இப்போது பவார் தலைவர் பதவி ஏற்றுள்ள நிலையில் கங்குலி விளையாட அனுமதிக்கப் படுவாரா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

இதற்கேற்றாற் போல் கங்குலியை மீண்டும் அணிக்குக் கொண்டுவர பின்புலமாக இருந்த தேர்வுக்குழுவின் உறுப்பினர்கள் பிரணாப்ரோய் (கிழக்கு மண்டலம்) யஷ்பால் சர்மா (வடக்கு), கோபால் சர்மா (மத்திய) ஆகிய மூவரும் பவார் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டதும் தேர்வுக் கமிட்டியில் இருந்து மாற்றப்பட்டுள்ளனர்.

இருப்பினும் புதிய பிசிசிஐ கமிட்டியிலும் கங்குலிக்கு ஆதரவாளர்கள் உண்டு என்றே கூறப்படுகிறது. பவார் கூட கங்குலிக்கு எதிராக கடுமையான நிலையை மேற்கொள்ள மாட்டார் என்றே தோன்றுகின்றது.

கங்குலி குறித்த பவாரின் கருத்தும் இதையே பிரதிபலிக்கிறது. கிரிக்கெட்டுக்கு கங்குலி ஆற்றிய அரும்பணிகள் குறித்து அறிந்து வைத்திருக்கிறேன். இதேபோல் மேற்கு வங்க மாநிலம் கிரிக்கெட்டு அளித்துள்ள பங்களிப்புக்களும் மறக்க இயலாதது" என்கிறார் பவார்.

உலகில் இன்று பெருமளவான ரசிகர்களை கவர்ந்த ஆட்டமாக கால்பந்து விளங்குகின்றது.

இதில் ஐரோப்பிய ஆபிரிக்க அமெரிக்க நாடுகள் தன்னிறைவு கண்டுள்ள அதேவேளை ஆசிய நாடுகளின் கால்பந்து நிலை கவலைக்கிடமாகவுள்ளது. குறிப்பாக தெற்காசிய நாடுகளின் நிலை பரிதாபம்.

இந்தியா, இலங்கையை எடுத்துக்கொண்டால் கிரிக்கெட்டை விட்டால் வேறுபாடில்லை என்ற நிலை தான் நிலவுகின்றது.

கிரிக்கெட்டில் எதிரணிகள் அஞ்சும் அளவுக்கு வளர்ந்துள்ள இவ் அணிகள் கால்பந்தில் கடைசி நிலையில் தொடர்ந்தும் இருப்பது வேதனையான ஒரு விடயமே.

அடுத்த வருடம் ஜேர்மனியில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கால்பந்து போட்டி 34 ஆவது போட்டியாக அமைந்துள்ளது. இதில் இதுவரைக்கும் தெற்காசிய நாடொன்றும் பங்கேற்றதாக வரலாறு இல்லை.

பின்னர் அவுஸ்திரேலிய கால்பந்து அணி நிரூபித்துள்ளது.

அதன் கடின உழைப்புக்கு கிடைத்த மிகப்பெரிய ஊதியமாக 2006 ஆம் ஆண்டு ஜேர்மனியில் நடக்கும் உலகக் கிண்ண கால்பந்துப் போட்டியில் பங்கேற்கும் தகுதியை பெற்றுள்ளது.

விளையாட்டில் கில்லாடிகளாகத் திகழும் அவுஸ்திரேலியர்களுக்கு அனைத்துமே அத்துப்படி. அவர்கள் எதில் இறங்கினாலும் சாதிக்கத் தவறுவதில்லை அதற்கு உதாரணமாக 32 வருடங்களின் பின் உலகக் கிண்ணத்துக்கான பிரவேசம் சாட்சியமாகவுள்ளது. அந்த அணி இரண்டு தடவைகள் உலகக் கிண்ணத்தை கைப்பற்றிய உருகுவே அணியை தோற்கடித்து பெறப்பட்டது.

எனவே கிரிக்கெட்டை விட்டால் வேறு இல்லை என்று இராது கால்பந்தை வளர்க்க தெற்காசிய நாடுகளும முன்வரவேண்டும் என்பதே ரசிகர்களின் விருப்பமாகவுள்ளது. இதற்கு இளைஞர்களை கால்பந்தில் பங்கேற் பதை ஊக்குவிப்பதுடன் இதற்கான வீரர்கள் மாற்றுத்




# எப்போது கிடைக்கும் அந்த வாய்ப்பு?

இந்த நிலையில் இதில் எமது நாடும் பங்கேற்க வேண்டும் என தெற்காசிய நாடுகள் எதுவரை முயற்சித்தன என்பதும் கேள்வியே.

உலகக் கிண்ண இறுதிச்சுற்றில் விளையாடும் அணிகள் கண்டங்கள் ரீதியாகவே தெரிவு செய்யப்படுகின்றன. எனவே கடுமையாக உழைத்தால் நிச்சயம் அந்த வாய்ப்பை பெறமுடியும் என்பதை 32 வருடத்திற்கு

திட்டத்தை அறிமுகப்படுத்துவதுடன் இங்கிருக்கும் வீரர்களை இங்குள்ள அணிகளுக்கும் மாற்றிக்கொள்ள வேண்டும். இந்த இரண்டையும் கடைப்பிடித்தால் சர்வதேசதரம் கொண்ட அணி ஒன்றை உருவாக்கலாம் என்கிறார் கால்பந்து அரங்கில் வலுவான அணியாகத் திகழும் பிரேசில் அணியின் முன்னாள் கால்பந்து வீரர் தங்கிமென்டோடி அரஜோ.



# நாளை..? அடுத்த குளூஸ்னர்

இந்தியாவுக்குத் தோனி, இங்கிலாந்துக்கு பீட்டர்சன் இப்படியே போனால்... தென்னாபிரிக்காவுக்கு ஜஸ்டின் கெம்ப் எனச்சொல்லலாம். அந்த அளவுக்கு ஜஸ்டின் கெம்ப் கிரிக்கெட்டில் விளாசுகிறார். சமீபத்திய நியூசிலாந்துக்கு எதிரான ஒரு நாள் தொடரில் விஸ்வரூபம் எடுத்தார். பொண்ட் பந்துவீச்சில் சிக்சர்அடித்து தலைசிறந்த அதிரடி வீரராக அடையாளம் காட்டினார். இந்தத் திடீர் எழுச்சியின் பின்னணி என்ன? அவரே கூறுகிறார்.

'அடுத்த குளூஸ்னர்' என்று உங்களை அழைக்கிறார்களே எனக் கேட்கப்பட்டதற்கு அப்படி எல்லாம் நினைக்கவில்லை. தென்னாபிரிக்க அணியின் சிறந்த அதிரடி ஆட்டக்காரராக விளங்கியவர் குளூஸ்னர். அவரோடு ஒப்பிடுவதை மிகப் பெரும் கௌரவமாகக் கருதுகிறேன். இப்போது தான் கிரிக்கெட்டில் காலடி எடுத்து வைத்துள்ளேன். குளூஸ்னரை எட்டிப் பிடிக்க இன்னும் அதிக தூரம் பயணம் செய்ய வேண்டும்.

களத்தில் இறங்கிவிட்டால் எந்தக் கடின இலக்கையும் எட்ட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு பிறந்துவிடும். முதலில் தேவையான நேரத்தை எடுத்துக்கொள்வேன். அதன் பின் இலக்கை எப்படி எட்டுவது என நன்கு திட்டமிடுவேன். திட்டமிட்டு 'ஷொட்' அடிக்கும் போது எதுவும் சாத்தியம் தானே!

அனுபவம் இல்லாததால் முதலில் துடுப்பெடுத்தாடும் போது திணறலாம். இன்னும் அதிக போட்டிகளில் பங்கேற்கும் போது இந்தக் குறை நிவர்த்தி செய்யப்படும்.

திடீரென எழுச்சி கண்டுள்ளீர்கள் என கேட்கப்பட்டபோது,

தொடர்ந்து விளையாடிய போது கிரிக்கெட் குறித்த ஞானம் அதிகரித்துவிட்டது. முழுக் கவனத்துடன் செயல்படத் தொடங்கினேன். அணியிலும் நிரந்தர இடம் கிடைத்துவிட்டது என்கிறார் கெம்ப்.



# இந்தியாவுக்கு பாகிஸ்தான் அழைப்பு

இந்திய கிரிக்கெட் அணியின் உத்தேச பாகிஸ்தான் சுற்றுப் பயணத்திட்டம் நிறைவேறுவதற்கு பிசிசிஐ புதிய நிர்வாகிகள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றும் பாக். கிரிக்கெட் வாரியம் கேட்டுக்கொண்டுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத் தலைவர் ஷஹாரியார் கான் இது தொடர்பாக பிசிசிஐ புதிய தலைவர் சரத் பவாருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

பாகிஸ்தான் வாரியம் அனுப்பியுள்ள உத்தேச திட்டத்தின்படி இந்திய அணி சனவரி.1 முதல் பாகிஸ்தான் பயணம் மேற்கொண்டு 3டெஸ்ட் மற்றும் 5ஒருநாள் தொடர்களில் ஆடவேண்டும் என்று உள்ளது.

புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்க அமைச்சு

வடக்கு~கிழக்கு மாகாணசபை

வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் II(நிகோட் II)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியப்படுத்தப்பட்டது.

"ஆ.அ.வ" கடன் இல. 2168-SRI(SF)

# கேள்வி அறிவித்தல் 04

## கட்டட நிர்மாண வேலைகளைப் பெறுதல்

01. வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டத்தின் (NECORD-II)ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழே உள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்து தொழில் தருனராக குறிப்பிடப்படும் (NECORD), கருத்திட்டத்தின் பணிப்பாளருக்காக கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்விகோருவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.

| தொடர் இலக்கம் | ஒப்பந்த இனங்காட்டல் இலக்கம் | கேள்வியின் பெயர் | ஆகக் குறைந்த ITCAD பதிவு | கேள்வி பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | KN/NECORD-II/AG/01 | புளியம்பொக்கணை மேற்கு விவசாயப் போதனாசிரியரின் அலுவலகமும் விடுதியும் மீள் நிர்மாணம். | M7 | 31,000.00 |
| 02 | KN/NECORD-II/AG/02 பகுதி1 | கிளிநொச்சி விவசாய அபிவிருத்தி திணைககளத்திற்கு மாவட்ட அலுவலகம் மற்றும் பயிற்சி நிலையமும் அமைத்தல். | M5 | 108,000.00 |
| 03 | KN/NECORD-II/AG/02 பகுதி2 | கிளிநொச்சி விவசாய அபிவிருத்தித் திணைக்களத்திற்கு விடுதி அமைத்தல். | M7 | 46,000.00 |
| 04 | KN/NECORD-II/ED/02 | KN/கிளாலி றோ.க.த.க.பாடசாலையில் 120'x25' வகுப்பறைக்கட்டடம் அமைத்தல். | M7 | 27,000.00 |
| 05 | KN/NECORD-II/ED/03 | KN/ஊற்றுப்புலம் அ.த.க.பாடசாலையில் 120'x25' வகுப்பறைக்கட்டடம் அமைத்தல். | M7 | 26,000.00 |
| 06 | KN/NECORD-II/AG/04 | KN/புனித அந்தோனியார் றோ.க.த.க. மிஷன் பாடசாலையில் 120'x25' வகுப்பறைக்கட்டடம் அமைத்தல். | M7 | 26,000.00 |
| 07 | KN/NECORD-II/AG/05 | KN/வேரவில் இந்துமகாவித்தியாலயத்தில் 120'x25' வகுப்பறைக்கட்டடம் அமைத்தல். | M7 | 27,000.00 |
| 08 | KN/NECORD-II/AG/06 | KN/திருவையாறு மகாவித்தியாலயத்தில் 120'x25'வகுப்பறைக்கட்டடம் அமைத்தல். | M7 | 27,000.00 |
| 09 | KN/NECORD-II/AG/07 | KN/செல்வாநகர் அ.த.க.பாடசாலையில் 120'x25' வகுப்பறைக்கட்டடம் அமைத்தல். | M7 | 27,000.00 |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கேள்விகள் திறந்துள்ளது.

I. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர், பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் மேற்படி அட்டவணையில குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருக்கவேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக (ICTAD டுடன் M7இற்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்கவேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்த தன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன் கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இதற்கு வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன்/அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் ஆதரவளிக்கப்படவேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கேள்வி கோருபவர் வேண்டப்படுகின்றனர்.

IV. இக்டாட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைக் பொறுப்பேற்பவர் போதிய கேள்வி கோரும் ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.

V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

VI. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்கவேண்டும்.

04. மேற்படி பந்தி 2இல் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளுக்கு கேள்வி கோரலாம். ஒவ்வொரு ஒப்பந்த விடயமும் புறம்பான கேள்வியாக அமையவேண்டும். ஏதேனும் ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை நிகொட் திட்டத்தின் கீழ் நடைமுறையிலிருக்கும் ஒப்பந்தம் உட்பட மூன்றாகும்.

05 ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர் மேலதிக தகவல்களை கேள்விப்படிவத்திலிருந்து பெறமுடியும் என்பதுடன், கேள்வி ஆவணங்களை வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டம் (நிகொட்) மாவட்ட செயலகம், கிளிநொச்சி என்ற விலாசத்திலுள்ள மாவட்ட பிரதித் திட்டப்பணிப்பாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசிஇல.021-228 5734, தொலைநகல் 021-228 5735, மின்னஞ்சல் Knnecord@sltnet.lk.

06 கேள்வி ஆவணங்களை 02.12.2005ஆம் திகதிலிருந்து 12.12.2005 திகதிவரை காலை 9.30 மணியிலிருந்து பிற்பகல் 3.00மணிவரை வேலைநாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து இது தொடர்பாக மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 1000 தை (கேள்வி ஆவணம் ஒன்றுக்கு) செலுத்திக் கொள்வனவு செய்துகொள்ளலாம்.

07 கேள்வி கோருபவர்களுக்கான பணிப்புரையின் பிரிவு I வாசகம் II குறித்துரைக்கப்பட்டவாறு தேவையான கேள்வி அடங்கிய ஆவணங்களை இதுதொடர்பாக பந்தி 8இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுடன் இணங்கும் வகையில் ஒப்படைக்கப்படவேண்டும்.

08 அரக்குமுத்திரையிட்ட கேள்விகள் உரிய பிணைப்பணத்துடன் தலைவர், மாவட்ட கேள்விச்சபை, நிகொட் கருத்திட்டம், கச்சேரி, கிளிநொச்சி என்ற முகவரிக்கு 19.12.2005ஆம் திகதி பி.ப 1.00மணிக்கு முன்பதாக கிடைக்கவேண்டும். உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

09. ஒப்பந்தகாரர்களுக்கு கேள்வி கோருவதற்கு வேண்டிய விளக்கத்தை அளிப்பதற்கான கூட்டம் ஒன்று 09.12.2005 ஆம் திகதி அன்று முற்பகல் 10.30 மணிக்கு கச்சேரியில் நடைபெறும்.

10. கேள்வி தயாரிப்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருனர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

*தி. இராசநாயகம்,*
*தலைவர்,*
*மாவட்ட கேள்விச்சபை,*
*அரசாங்க அதிபர்,*
*கிளிநொச்சி மாவட்டம்.*

(சி-13416)

மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு

வடக்கு~கிழக்கு மாகாணசபை

வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி விரிவாக்கத் திட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது.

"ஆ.அ.வ" கடன் இல. 2084-SRI(SF)

# கேள்வி அறிவித்தல் 04

## கட்டட நிர்மாண வேலைகளைப் பெறுதல்

01. வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி விரிவாக்கல் திட்டத்தின் (NECORD-EXTENSION) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழே உள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்து தொழில் தருனராக குறிப்பிடப்படும் (NECORD), கருத்திட்டத்தின் பணிப்பாளருக்காக கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதி வாய்ந்த கேள்விகோருவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.

| தொடர் இலக்கம் | ஒப்பந்த இனங்காட்டல் இலக்கம் | கேள்வியின் பெயர் | ஆகக் குறைந்த ITCAD பதிவு | கேள்வி பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | KN/NECORD-EXT/AG/02 பகுதிI | பரந்தனில் நெல் ஆராய்ச்சி நிலையம் மீளமைப்பு. | M6 | 67,000.00 |
| 02 | KN/NECORD-EXT/AG/02 பகுதிII | பரந்தனில் நெல் ஆராய்ச்சி நிலையம் மீளமைப்பு. | M7 | 48,000.00 |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கேள்விகள் திறந்துள்ளது.

I. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர், பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருக்கவேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக (ICTAD டுடன் M5இற்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்கவேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்த தன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன் கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இதற்கு வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன்/அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் ஆதரவளிக்கப்படவேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கேள்வி கோருபவர் வேண்டப்படுகின்றனர்.

IV. இக்டாட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைக் பொறுப்பேற்பவர் போதிய கேள்வி கோரும் ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.

V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவ்டிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

VI. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்கவேண்டும்.

04. மேற்படி பந்தி 2இல் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளுக்கு கேள்வி கோரலாம். ஒவ்வொரு ஒப்பந்த விடயமும் புறம்பான கேள்வியாக அமையவேண்டும். ஏதேனும் ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை நிகொட் திட்டத்தின் கீழ் நடைமுறையிலிருக்கும் ஒப்பந்தம் உட்பட மூன்றாகும்.

05. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர் மேலதிக தகவல்களை கேள்விப்படிவத்திலிருந்து பெறமுடியும் என்பதுடன், கேள்வி ஆவணங்களை வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டம் (நிகொட்), மாவட்ட செயலகம், கிளிநொச்சி என்ற விலாசத்திலுள்ள மாவட்ட பிரதித் திட்டப்பணிப்பாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல.021-228 5734, தொலைநகல் 021-228 5735, மின்னஞ்சல் Knnecord@sltnet.lk.

06. கேள்வி ஆவணங்களை 02.12.2005ஆம் திகதிலிருந்து 12.12.2005 திகதிவரை காலை 9.30 மணியிலிருந்து பிற்பகல் 3.00மணிவரை வேலைநாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து இது தொடர்பாக மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 1000 தை (கேள்வி ஆவணம் ஒன்றுக்கு) செலுத்திக் கொள்வனவு செய்துகொள்ளலாம்.

07. கேள்வி கோருபவர்களுக்கான பணிப்புரையின் பிரிவு I வாசகம் II குறித்துரைக்கப்பட்டவாறு தேவையான கேள்வி அடங்கிய ஆவணங்களை இதுதொடர்பாக பந்தி 8இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுடன் இணங்கும் வகையில் ஒப்படைக்கப்படவேண்டும்.

08. அரக்குமுத்திரையிட்ட கேள்விகள் உரிய பிணைப்பணத்துடன் தலைவர், மாவட்ட கேள்விச்சபை, நிகொட் கருத்திட்டம், கச்சேரி, கிளிநொச்சி என்ற முகவரிக்கு 19.12.2005ஆம் திகதி பி.ப 1.00மணிக்கு முன்பதாக கிடைக்கவேண்டும். உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

09. ஒப்பந்தகாரர்களுக்கு கேள்வி கோருவதற்கு வேண்டிய விளக்கத்தை அளிப்பதற்கான கூட்டம் ஒன்று 09.12.2005 ஆம் திகதி அன்று முற்பகல் 10.30 மணிக்கு கச்சேரியில் நடைபெறும்.

10. கேள்வி தயாரிப்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருனர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

*தி. இராசநாயகம்,*
*தலைவர்,*
*மாவட்ட கேள்விச்சபை,*
*அரசாங்க அதிபர்,*
*கிளிநொச்சி மாவட்டம்.*

(சி-13415)

அண்மையில் ஏற்பட்ட எங்கள் பிரதேசங்களில் உள்ள கிணறுகள் பாதிக்கப்பட்டுள்ளன. வெள்ளம் கிணற்று நீருக்குள் கலந்தது இதில் முதலாவது பிரச்சினை.

மேற்கட்டு இல்லாத ஒரு திறந்த கிணற்றினுள் மழை வெள்ளமும், சாதாரணமாக வழிந்தோடும் நீரும் உட்புகும் ஆபத்து உண்டு. இது தவிர வெள்ளம் வரக்கூடிய பிரதேசங்களில் உள்ள கிணறுகளின் மேற்கட்டுகள் போதுமான அளவுக்கு கட்டப்படாமையும் வெள்ளம் உட்புகுவதற்கான ஒரு காரணமாக அமைந்துவிடுவதும் உண்டு.




# எங்கள் பொருண்மிய வளம்


சிதம்பரதிரு

இத்தகைய கிணறுகளின் நீரைப் பாவிப்பதனால் பல்வேறு நோய்கள் ஏற்படும். தொற்று நோய்களை உருவாக்கக்கூடிய கிருமிகளை இத்தகைய நீர் கொண்டிருக்கும்.

இவ்வகையான சிக்கல்களில் இருந்து கிணறுகளைப் பாதுகாக்க உரிய ஒழுங்கின் படி கிணறுகளுக்கு மேற்கட்டு கட்டுதல் அவசியமானதாகும்.

இந்த மேற்கட்டு இரண்டு பிரிவுகளைக் கொண்டதாக அமைய வேண்டும் என துறைசார்ந்த நிபுணர்கள் தெரிவிக்கின்றார்கள்.

நிலமட்டக்கட்டில் இருந்து மேற்கட்டானது குறைந்த பட்சம் 80 செ.மீற்றர் உயரமாவது இருக்கவேண்டும். இக்கட்டின்



தடிப்பு அகலம் குறைந்ததாக பாவனையாளர் ஏறி அமர முடியாத அல்லது நிற்க முடியாத தன்மை கொண்டதாக அமையவேண்டும்.

நிலமட்டக்கட்டு புறநீரை உட்புகவிட முடியாதபடியும் 2மீற்றர் (இரண்டு) அகலமுடையதாகவும் அமைதல் பொருத்தமானதாகும். இது கிணற்றில் இருந்து எல்லாப்பக்கங்களிலும் வெளிச் சாய்வு கொண்டதாக அமைக்கப் படவேண்டும்.

நிலமட்டக்கட்டு அதிக அளவு சேதத்தை தடுக்கவேண்டி இருப்பதனால் எவ்வித வெடிப்புகளும் இல்லாதவாறு மிகக் கவனமாக அமைக்கப்பட வேண்டும்.

நீர்வளம் எங்கள் வளங்களில் பிரதானமானது மட்டுமல்ல நீரானது எங்கள் தேவைகளின் அடிப்படையானதும் அத்தியாவசியமானதும் ஆகும்.

எனவே இவற்றில் நாம் அக்கறை காட்டவேண்டும்.

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்தச் சீறிடும் சிறுத்தைக்கு, தனது கடமையே பெரிதென எண்ணியவனுக்கு திடீரென விபத்தொன்று ஏற்பட்டது. சிலவேளை அந்த விபத்தில் தப்பியிருந்தால் களத்திலே இது நடக்கவில்லையே என ஏங்கியிருப்பான்.

அன்று காலை ஏழுமணியிருக்கும் புதூரில் உள்ள எதிரி மேலும் முன்னேற முயற்சி செய்ததை அறிந்த கட்டளைத் தளபதி தீபன், நடவடிக்கை ஒன்றை திட்டமிட்டு தளபதி சேகரிடம் கூறியதற்கு அமைய தளபதி சேகர் படையணி ,கண்ணிவெடி அணிகளை அழைத்து கதைத்துவிட்டு,ஏனைய எமது அணிகளோடு கதைத்துக்கொண்டிருந்தார். கண்ணிவெடிகள் வைக்கப்பட்டிருந்த இடத்தை நோக்கி சீனிவாசன், தருமன் இன்னும் ஓர் போராளியென மூவரும் நடந்து சென்று கையில் எடுத்ததை நாம் பார்த்துக்கொண்டேயிருக்க அந்தச் சம்பவம் நடந்தேறியது.

சென்றவர்கள் கண்ணிவெடியைக் கையிலெடுக்க முனைந்ததுமே அது வெடித்துச் சிதறியது. எங்கள் அருமையான அந்தப் புனிதர்கள் தங்கள் இலட்சியக் கனவோடு தமிழன்னையின் காற்றோடு காற்றானார்கள். அவர்களின் இலட்சியப்பற்றுடன் தாயக விடுதலையும் வீறுகொள்கிறது.

மாவீரன் 2ஆம் லெப். சீனிவாசன் தனது நாட்குறிப்பேட்டில் எழுதியிருந்த பலவரிகளில் ஒன்று.

எந்த நேரமும் நான் உறங்கிவிட்டாலும் என் சுடுகருவி உறங்காது. எனது சுடுகருவிக்கும் உயிரும்,உணர்ச்சியும், உற்சாகமும் உண்டு. ஏனெனில் எனது நெஞ்சு எனது தாயக விடிவை எண்ணி கொதித்துக் கொண்டிருப்பதை என் சுடுகருவி அறியும். நான் இறந்தாலும் அது இன்னோர் தோளிலேறி கடமைசெய்து எனது தாயகத்தைமீட்கும் போரில் பங்குகொள்ளும் என ஆழமான வரிகளை அந்த மாவீரன் எழுதியிருந்தான்.

# தூறல் நீர்ப்பாசனமும் யாழ். குடாநாட்டில் அதன் அவசியமும்

*(சென்றவாரத் தொடர்ச்சி....)*

**தூறல் நீர்ப்பாசனத்தின் நன்மை, தீமைகள்:-**

தூறல் நீர்ப்பாசன முறையில் நீரானது உயர முக்கத்தைப் பயன்படுத்தி சிறிய துவாரமுள்ள குழாய்களினூடாக பயிர்களின் மீது விசிறியடிக்கப்படுகின்றது. இத்தோற்றப்பாடானது மழைத்தூறலைப் போன்றதாகும். இத்தூறல் நீர்ப்பாசனத்தினூடாக பயிர் நிலங்களில் ஏனைய நீர்ப்பாசன முறைகளை விட சீரான நீர்ப்பரம்பல் பெறப்படுகின்றது. இந்நீர்ப்பாசன முறையானது நீரைத் தேக்கிவைக்கும் தன்மை குறைந்த மணற்தன்மையான பயிர் நிலங்களில் மற்றைய நீர்ப்பாசன முறைகளுடன் ஒப்பிடும் பொழுது கூடுதல் வினைத்திறன் உள்ளதாக செயற்படுகின்றது. அத்துடன் இதில் பயன்படுத்தப்படுகின்ற உபகரணங்களின் இலகுத்தன்மை காரணமாக எத்தகைய தரை உயர வேறுபாடுள்ள பயிர்ச் செய்கை நிலங்களிற்கும் பயன்படுத்தக்கூடியதாக உள்ளது. தூறல் நீர்ப்பாசன முறையின் மூலம் பயிர் நிலங்களை ஒரு குளிர்ச்சியான நிலையில் பேணமுடிவதில்லை. வித்து முளைத்தலிற்கும் நாற்று வளர்ச்சிக்கும் துணைபுரிகின்றது. இதன் மூலம் விளைச்சலின் தரத்திலும் அளவிலும் கணிசமான அளவு அதிகரிப்பு ஏற்படுகின்றது.

மேலும் விசேடமாக வடிவமைக்கப்பட்ட தூறல் நீர்ப்பாசனத் தொகுதியினூடாக திரவ நிலையில் விவசாய உரங்கள், களைநாசினிகள் மற்றும் கிருமி நாசினிகள் விசிறக்கூடியதாகவுள்ளது. இதனால் வேலையாட்கள் பற்றாக்குறையான இக்காலப்பகுதியில் அதற்குரிய செலவினைக் குறைத்து நிறைந்த பயனை நாம் பெறக்கூடியதாகவுள்ளது.

நீரை விசிறியடிக்கும்போது சில வகையான பீடைகள பயிரின் மேற்பகுதியிலிருந்து கழுவியகற்றப்படுவதால் பொறிமுறை ரீதியான பீடைக் கட்டுப்பாடும் சாத்தியமாகின்றது. உதாரணமாக மிளகாயில் ஏற்படும் இலைச்சுருள் நோயினை ஏற்படுத்தும் காரணிகளான பனிப்பூச்சியும் சிற்றுண்ணியும் தூறல் நீர்ப்பாசனத்தின் போது கழுவுப்பட்டு அகற்றப்படுவதால் இலைச்சுருள் மூலம் ஏற்படும் தாக்கத்தைக் குறைக்கின்றது.

தூறல் நீர்ப்பாசனம் செய்யப்படும்பொழுது பாத்திகள், வாய்க்கால்கள் என்பன தேவையற்ற காரணத்தினால் பயிரின் அடர்த்தி கூட்டப்படுகிறது. உதாரணமாக 1000 கன்றுகள் பயிர் செய்யப்படுகின்ற



நிலத்தில் 1200 கன்றுகள் பயிர் செய்யப்படக் கூடியதாக இருக்கும். மேலும் இந்நீர்ப்பாசனமானது மண்ணரிப்பைத் தடுக்கின்றது. நீர் ஆவியாதல் மூலம் இழக்கப்படுவதைத் தடுக்கிறது. மிக முக்கியமான அம்சமாக தூறல் நீர்ப்பாசனமானது மண்ணின் நீரின் அளவைவயற்கொள்ளளவிலும் வைத்திருக்க உதவுகிறது. இதன் மூலம் உச்ச விளைவைப் பெறக்கூடியதாக இருக்கின்றது. தாவரங்களுக்குத் தேவையான நீரின் அளவினை மட்டும் மண்ணிற்கு வழங்கப்படுவதால் மண்ணில் உவர்த்தன்மை உருவாக்கப்படும் சாத்தியக்கூறுகள் இல்லை. அத்துடன் மேலதிக நீர் மண்ணின் ஊடாக ஊடுவடியும்பொழுது மண்ணில் காணப்படும் பசளைகள், நைத்திறேற்றுக்கள் போன்றன நிலத்தடிநீருக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. ஆனால் இந்நீர்ப்பாசனத்தில் மேலதிகமான நீர் இறைக்கப்படாமையினால் நிலத்தடி நீரின் தரமானது பாதிக்கப்பட மாட்டாது.

தாவரங்களின் இலைகளின் துவாரங்கள் மூலம் வெளியேறும் கசிவு நீர் காலையில் தூறல் நீர்ப்பாசனத்தின் மூலம் அகற்றப்படுவதனால் இலைகளில் ஏற்படும் எரிவு நோய் அகற்றப்படுகின்றது. மேலும் பனிக் காலங்களில் பனித் தாவரங்களின் இலைகளில் படிவடைந்து காலையில் சூரிய வெப்பத்தினால் ஆவியாகும்பொழுது நுனி கருகுதல் ஏற்படுவதை தூறல்நீர்ப்பாசனத்தின் மூலம் சீர்செய்யலாம். உதாரணமாக வெங்காயம் பனிக் காலங்களில் நுனி கருகுவதால் விவசாயிகள் அக்காலத்தில் வேறு பயிர்களை பயிர் செய்கின்றார்கள். ஆனால் தூறல் நீர்ப்பாசனம் மூலம் வருடம் முழுவதும் வெங்காயம் பயிர் செய்யப்பட்டு அதிகூடிய வருமானத்தை விவசாயிகள் பெறலாம்.

தூறல் நீர்ப்பாசனத்தில் நீரானது கூடிய விசையுடன் விசிறப்படுவதால் கல்சியம் காரணமாக நுண்துளைகள் அடைக்கப்படுவது சாத்தியமில்லை. தூறல் நீர்ப்பாசனத்தின் தீமைகளை உற்று நோக்கினால் தூறல் நீர்ப்பாசனத்தை மேற்கொள்ளும் போது நீரின் சீரான பரம்பலைக் கட்டுப்படுத்தும் காரணியாக காற்றின் அதிவேகம் செல்வாக்குச் செலுத்துகின்றது. இதனைத் தவிர்த்துக்கொள்வதற்கு நாம் காற்றின் வேகத்தைக் கவனத்திற்கொண்டு நீர்ப்பாசனம் மேற்கொள்ள வேண்டும். எனினும் சாதாரண நியம நிலைகளில் நீரின் வினைத்திறன் சராசரியாக 75%-85%மாகவுள்ளது.

தூறல் நீர்ப்பாசனம் செய்யப்படும்பொழுது பயிர்ச் சுற்றாடலில் வெப்பநிலை குறைக்கப்பட்டு ஈரப்பதன் கூட்டப்படுவதால் நோய் பீடைத் தாக்கம் கூடவாக இருக்கும் எனவும் அவதானிகள் கருத்துக் கூறுகின்றார்கள்.

மேலும் மிளகாய் போன்ற பயிர்களுக்கு தூறல் நீர்ப்பாசனம் செய்யப்படும்பொழுது பயிர்களில் உள்ள பூக்கள் நீர்த்துளியின் விசை காரணமாக விழுவதற்கு ஏதுவாக அமைகின்றது. ஆயினும் இத்தோற்றப்பாடானது நீர்த்துளியின் அளவினை மாற்றி அமைப்பதன் மூலம் நிவர்த்தி செய்யப்படலாம். அதேபோல வெங்காயம் போன்ற வற்றுக்குப் பாவிக்கப்படும் பொழுது வெண்காயத் தாழானது நீர்த்துளி விசிறலின் விசைகாரணமாக உடைக்கப்படலாம் என்ற கருத்துக்களும் உண்டு. இதுவும் நீர்த்துளியின் விசையையும் பருமனையும் மாற்றி அமைக்கப்படுவதன் மூலம் நிவர்த்தி செய்யப்படலாம். மேலும் தூறல் நீர்ப்பாசனமானது மிகக் குறைந்தளவு விவசாயம் செய்யும் விஸ்தீரணம் உடைய விவசாயிகளுக்கு சிபாரிசு செய்ய முடியாது. ஆகக் குறைந்தது கால் ஏக்கர் விஸ்தீரணமானது அவ்விவசாயி கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் விவசாய நிலமானது வடிவத்தின் ஓர் சீரான அமைப்பு இருத்தல் வேண்டும். அல்லாவிடின் தூறல் நீர்ப்பாசன பகுதிகள் சரியான முறையில் பொருத்தப்படமுடியாது. மேலும் தூறல் நீர்ப்பாசனத்திற்கான செலவு அண்ணளவாக ஒரு கால் ஏக்கர் நிலத்திற்கு 25000/= ஆனது (பம்பி தவிர) மூலதனச் செலவாக இருக்கும். ஆகையால் பொருளாதார வசதி உடைய விவசாயிகளே இத்தூறல் நீர்ப்பாசனத்தைப் பாவிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இவை தவிர தூறல் நீர்ப்பாசனமானது பயிர்ச் செய்கை தவிர வேறு பல தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு உலகளாவிய ரீதியில் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றது. உதாரணமாக கோழி மற்றும் மிருக வளர்ப்பு பண்ணைகளில் சூழலைக் குளிர்ச்சிப் படுத்துதல், பண்ணைகளில் ஏற்படும் தீ விபத்துக்களைக் கட்டுப்படுத்தல், பூமியின் கடினமான தரைகளில் நீரின் பரம்பலைக் கூட்டல், வளிமண்டலத்தில் உள்ள தூசித் துணிக்கைகளை அகற்றுதல், அழகிற்காக வீடுகளில் அமைத்தல் பேன்றனவாகும். இவ்வாறு பல நன்மைகளை கொண்ட தூறல் நீர்ப்பாசனத்தை யாழ். குடாநாட்டில் விரைவாக அறிமுகப் படுத்தி குடாநாட்டின் தரைக்கீழ் நீரின் அளவையும் தரத்தினையும் மேலும் மேலும் அதிகரித்து உதவுதல் இக்குடாநாட்டு மக்கள் அனைவரினதும் கடமையாகும்.





## அத்தியாயம்- 19

பகுதி -75

“அவன் இப்ப இந்த வனாந்திரத்துக் குள்ள போறான். தன்னட தகப்பன சிறைக் குள்ள வைச்சுப் புதைச்சிருக்கிற மலைத் தேடுறான். இப்ப அந்த சின்னப் பையன். கிண்டத் தொடங்கிறான். அவன் கிண்டுறான்... அவன் கிண்டுறான்... சவளைத் தூக்கிய டிப்ஸ் சிறைச்சாலை இருந்த இடத்தில் மண்ணைக் கிண்டி அகற்றினான். மேலே வைத்திருந்த மட்டைத்துண்டை எடுத்துவிட்டு உள்ளே எட்டிப் பார்த்தான். "ஓம் ஆள் உள்ளுக்குத்தான் இருக் கிறார்." அறிவிப்பாக வந்தது டிப்ஸின் குரல். "இவ்வளவு காலமும் செய்த எல்லாத்துக்குமாக அவர் மனம் வருந்துறார். 'நான் உன்னில நேசம் டிப்ஸ்' தயவு செய்து எனக்கு உதவு. நீ எனக்குத் தேவை எண்டு சொல்லுறார். அதால அந்தப் பையன் சிறையைத் திறந்து தன்ர தகப்பன வெளியால விடுறான்"

டிப்ஸ் மிக அவதானமாக அப்பாப் பொம்மையைத் தூக்கி வெளியே எடுத்தான். அப்பாப் பொம்மை யையும் பையன் பொம்மையையும் தன் கைகளில் வைத்துக்



கொண்டே அமைதியாக அவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவற்றைப் பொம்மை வீட்டுக்குத் திரும்ப எடுத்துச் சென்ற அவன் அங்கிருந்த வாங்கொன்றில் அக்கம் பக்கமாக அவற்றை இருத்தி விட்டான்.

தன் கைகளிலிருந்து மணலை நன்றாகத் துடைத்து விட்ட டிப்ஸ், மீண்டும் ஜன்னலருகில் சென்று, அமைதியாக வெளியே பார்த்துக் கொண்டிருந்தான்.

“அந்தப் பையன் தன்ர அப்பாவ மீட்டெடுத்து விட்டான். அந்த அப்பா, அந்தப் பையனுக்குத் துன்பம் தாற விதத்தில, தான் செய்த எல்லாத்துக்கும் வருந்துறதாச் சொன்ன வர்." என்ற நான் தொடர்ந்து “தான் டிப்ஸை நேசிக்கிறன் எண்டும் டிப்ஸ் தனக்கு வேணும் எண்டும் சொன்னவர்" என்றேன்.

டிப்ஸ் என்னை நோக்கித் திரும்பி னான். அவனது கடைவாயில் மெல்லிய புன்னகை ஒன்று உருக்கொண்டிருந்தது. "நான் இண்டைக்கு அப்பாவோட கதைச்சனான்" என்று மென்மையாகச் சொன்னான்.

“அப்பாவோட கதைச்சனீங்களா? என்ன கதைச்சனீங்கள்?"

“அது இப்பிடித்தான் நடந்தது. அவர் இண்டைக்கு காலைச் சாப்பாட்ட முடிச்சுப் போட்டு கோப்பி குடிச்சுக் கொண்டு காலைப் பத்திரிகையைப் பார்த்துக் கொண்டிருந்தவர். நான் நேரா அவருக்குக் கிட்ட நடந்து போனன். போய், 'காலை வணக்கம் அப்பா. இண்டைய நாள் நல்ல ஒரு நாளா உங்களுக்கு இருக்கட் டும்' எண்டு சொன்னன். அவர் தான் வாசிச்சுக் கொண்டிருந்த பத்திரிகையை கீழ வைச்சிட்டு, 'காலை வணக்கம் டிப்ஸ். உனக்கும் இந்த நாள் நல்ல விதமாகப் போகட்டும்' என்றார். எனக்கு அப்பிடித்தான் நடந்தது. இன்றைய நாள் அற்புதமாகப் போனது" என்றான்.

மகிழ்ச்சியோடு சிரித்தபடி விளை யாட்டறைக்குள் சுற்றி வந்தான். "ஞாயிற்றுக் கிழமை அப்பா எங்கள தன்ர காரில கடற் கரைக்குக் கூட்டிப் போனவர். லோங் ஐலன் டில கன தூரம் நடந்து போய் சமுத்திரத்தக் கண்டனான். அப்பாவும் நானும் நீக் கரைவரை நடந்து போனனாங்கள். அவர் எனக்குச் சமுத்திரத்தைப் பற்றியும் நீர் வற்று நீர் பெருக்குப் பற்றியும் சொன்னவர். சமுத்திரங்கள், ஏரிகள், நதிகள், நீர்த்தேக்கங்கள், தடாகங்களுக்கு இடையில இருக்கிற வித்தியாசங்கள் விளங்கப் படுத்தினவர்.

பிறகு மணல் கோட்டை ஒண்ட நான் கட்டத் தொடங்கினன். எனக்குத் தான் உதவி செய்யலாமா என்று அவர் கேட்டார். நான் என்ர சவள அவரிட்ட கொடுத்தன். இரண்டு பேரும் மாறி மாறி மண்ணை அள்ளிப் போட்டம். கடல் தண்ணிக்குள்ளால நடந்து போனனான். ஆனா தண்ணி சரியான குளிரா இருந்ததால கன நேரம் தண்ணிக்குள்ள நிக்கயில்ல. அந்த உல்லாசப் பயணத்துக்கெண்டு கொண்டு வந்த மதியச் சாப்பாட்டக் காரிலேயே வச்சு சாப் பிட்டனாங்கள். நல்ல சந்தோசமாப் பொழுது போச்சுது. "முழு நேரமும் அம்மா சிரிச்சுச் சிரிச்சுக் கொண்டே இருந்தவ"

“அப்ப அண்டைக்கு அம்மாவோடயும் அப்பாவோடயும் பொழுதுச் சந்தோசமா கழிச்சிருக்கிறீங்கள்... என்ன?" என் கருத்தைச் சொல்வது போல் கேட்டேன்.

“ஓம்" என்றான் டிப்ஸ். "சந்தோசமான நாள் அது. கடற்கரைக்குப் போனதும் வந்ததும் அற்புதமான பயணமாக இருந்தது. கோவமான சொல்லு ஒண்டுமே சொல்லப்படயில்ல. ஒரு சொல்லுக் கூடஇல்ல."

“கோவமான ஒரு வார்த்தையும் சொல்லப்படயில்ல. அப்பிடித் தானே?"

மணல் பெட்டியை நோக்கி நடந்து சென்ற அவன், பெட்டியின் விளிம்பில் அமர்ந்து கொண்டான். "இந்த இடத்திலதான் நான் அவருக்கெண்டு ஒரு சிறையைக் கட்டினனான். இங்க தான் அவரைச் சிறையில போட்டு பூட் டினனான். மணலால மூடிப் புதைச்சனான். அவரைச் சிறையை விட்டு வெளியில எடுத்து ஏன் விடுதலை செய்ய வேணும் எண்டு என்னை நானே கேட்டுக் கொண்டேன். பிறகு அவரை அவற்ற பாட்டில விடு. அவர சுதந்திரமா இருக்க விடு எண்டு எனக்கு நானே சொல்லிக் கொண்டேன்."

“அப்ப... அவர விடுதலை செய்து விட வேணும் எண்டு நீங்கள் முடிவு எடுத்தனீங்கள் அப்பிடித்தானே?" நான் கேட்டேன்.

. "ஓம்" என்றவன், "அவரப் பூட்டிப் புதைச்சு வைச்சிருக்க வேணும் எண்டு நான் விரும்பயில்ல. அவருக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேணும் எண்டு மட்டும் தான் நினைச்சனான்.

“எனக்கு விளங்குது. அவருக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேணும் எண்டு மட்டும் தான் நீங்கள் நினச்சனீங்கள்" என்றேன்.

டிப்ஸ் புன்னகை செய் தான்.




“இன்றைக்கு நான் அப்பாவோட கதைச்சனான்" என்ற டிப்ஸின் குரலில் மகிழ்ச் சியும் ஒருவிதமான நிம்மதியுணர்வும் ஒலித்தன.

தன்னுடைய தகப்பனுடனான உற வில் முன்னையை விட அதிக பாதுகாப்புணர் வைப் பெற்ற பின்புதான் டிப்ஸினுடைய பழி தீர்க்கும் மற்றும் வெறுப்பு உணர்வுகளின் வெளிப்பாடுகள், அதிகமதிகம் வெளிப்படையா கவும் நேரடியாகவும் முழுமையாகவும் வெளிப்படுத்தப் படுகின்றன என்பதை கவனிப் பது ஆர்வமூட்டுவதாக இருந்தது. அந்தத் தகப்பன், சமுத்திரங்கள், ஆறுகள், சிற்றாறுகள் பற்றிய தகவல்களை பெருமளவில் தந்தது மட்டுமல்லாமல் மணல் கோட்டை கட்டுவதிலும் அவனோடு பங்கெடுத்திருந்தார்.

டிப்ஸ் இப்போது, முன்னயைவிட அதிக திருப்தி தருகின்ற அனுபவங்களை விட தன் தந்தையுடனான ஊடாட்டத்தில் பெறு கின்றான் என்று கேள்விப்படுவது மகிழ்ச்சி தந்தது.

## அத்தியாயம்- 20

அடுத்த வியாழக்கிழமை காத்திருக் கும் அறைக்குள் வந்த உடனேயே, "இதோ மீண்டும் வந்துவிட்டேன்" என உற்சாகமாக குரல் கொடுத்தான் டிப்ஸ். "கோடைகால விடுமுறைக்குப் போவதற்கு முன் இன்னும் சில தடவைகளே இங்க வரலாம்"

“ஓம் இன்றையையும் சேர்த்து கிட்டத்தட்ட மூன்று முறை வரலாம்" என்றேன் நான். "அதற்குப் பிறகு நாங்கள் இரண்டு பேருமே விடுமுறைக்காக சென்று விடுவோம்"

“நாங்கள் அந்தத் தீவில கனதூரம் போவம். இந்த வருசம் என்ர விடுமுறையை நான் விரும்புவன் எண்டு நினைக்கிறன். அம்மம்மா வும் வழமையான தன்ர விடுமுறைக் காலத்துக் குப் பதிலா இந்தக் கோடைவிடுமுறையை எங்களோட கழிக்கத் திட்டம் போட்டிருக்கிறா. அந்த யோசினை எனக்குப் பிடிச்சிருக்குது" என்றான் டிப்ஸ்.

விளையாட்டறைக்குள் அவன் சுற்றி வந்தான். பெண்பிள்ளைப் பொம்மையைத் தூக்கி எடுத்துக்கொண்டான். "இந்தா இருக்கிறா என்ர சகோதரி" என்று ஏதோ அந்த பொம் மையை முன் ஒருபோதும் காணாத மாதிரி உரத்துக் குரல் கொடுத்தான். "இவள் சரியான குழப்படி அல்லவா? நான் அவள ஒழிச்சுக்கட்டப் போறன். அவளுக்கு ருசியான அரிசிப் புடிங் குடுக்கப்போறன். அதில என்ன விசேசம் எண்டா, நான் அதில நஞ்சை வைக்கப்போறன். நான் அவளுக்கு நஞ்சு கொடுக்கப்போறன். அவள் ஒரேயடியாப் போய்ச்சேர்ந்திருவாள்"

“உங்கட சகோதரிய ஒழிச்சுக்கட்ட விரும்புறீங்களா?" நான் கேட்டேன்.

“சில நேரங்களில அவள் கத்திக் குழறிக் கொண்டு பாய்ஞ்சு விறாண்டி எனக்கு நோவை ஏற்படுத்திப்போடுவாள். எனக்கு அவளெண்டாச் சரியான பயம். சில நேரங்களில் நானும் ஆளுக்கு அடிச்சு, விறாண்டி விடுறனான். ஆனா அவள் அதிகம் வீட்ட வாறேல்ல. கெதியா வீட்டவந்து இருக்கப்போறாள். இந்தக் கோடை விடுமுறைக்கு எங்களோடதான் இருக்கப் போறாள். இப்ப அவளுக்கு அஞ்சு வயசு"

“சிலநேரங்களில நீங்கள் இரண்டு பேரும் ஆளுக்காள் அடிச்சு விறாண்டிக்கொள்ளுறனீங் கள் அல்லவா?"

“ஓம்" என்றான் டிப்ஸ். "ஆனா அவள் வீட்ட அதிகம் வாறயில்ல. போன சனி ஞாயிறு வீட்டவந்தவள்" "அப்ப எப்பிடிப்போச்சுது?"

“ஐயோ!" என்று பெரிதாக இழுத்துக் கொண்டே தோள்களைக் குலுக்கிக்கொண்டான் டிப்ஸ். அவள் வாறது எனக்குப் பிரச்சினை யில்ல. சில நேரங்களில அவளோட விளையா டுறனான். ஆனா என்ர அறையுக்க வரவிடுற யில்ல.

“என்ர பெறுமதியான சாமான்கள் கனக்க அதுக்குள்ள இருக்கு. அவள் ஏதாவதொண்ட இழுத்து எடுத்துக் கிழிக்கப் பாக்கிறவள். அப்பி டிச் செய்யேக்கதான் சண்டைவாறது. இப்ப அதிகம் சண்டை பிடிக்கிறயில்ல. அடுத்த வருசம் வீட்டிலேயே வந்து இருக்கப்போறா. நான் போற பள்ளிக்கூடத்துக்குத்தான் அடுத்த வருசத்தில இருந்து அவளும் போவாள்"

“அதப்பற்றி நீங்கள் என்ன 'நினைக் கிறீங்கள்.?" என்று நான் கேட்டேன்.

“எனக்கு அதப்பற்றிப் பிரச்சினையில்ல. அவள் வீட்டில இருக்க வாறதப்பற்றி நான் சந்தோசப்படுறன் எண்டுதான் நினைக்கிறன். பள்ளிக்கூடத்தில தான் சரியான தனிமையில இருக்கிறன் எண்டு அவள் உணர்ந்திருப்பாள் எண்டு தான் நான் நினைக்கிறன். அவள் போனது எங்கட பெரியமாமியிட பள்ளிக்கூடம். ஆனா அவள் வீட்ட வரவேணும் எண்டுதான் எல்லாரும் நினைக்கினம்" (தொடரும்)

## உலகை ஆட்டிப் படைக்கும் புதிர் விளையாட்டு

புதர்-09இற்கான விடையினை சரிபார்த் துக் கொள்ளுங்கள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8 | 6 | 5 | 9 | 4 | 7 | 2 | 3 |
| 4 | 5 | 3 | 2 | 7 | 8 | 6 | 1 | 9 |
| 9 | 7 | 2 | 1 | 6 | 3 | 5 | 8 | 4 |
| 7 | 3 | 8 | 9 | 1 | 6 | 4 | 5 | 2 |
| 5 | 4 | 9 | 7 | 8 | 2 | 1 | 3 | 6 |
| 2 | 6 | 1 | 3 | 4 | 5 | 8 | 9 | 7 |
| 3 | 1 | 7 | 6 | 5 | 9 | 2 | 4 | 8 |
| 6 | 2 | 4 | 8 | 3 | 1 | 9 | 7 | 5 |
| 8 | 9 | 5 | 4 | 2 | 7 | 3 | 6 | 1 |

ஒற்றை இலக்கம் என்று அதற்கு பொருள். றூபிக்சதுர முகிக்குப் பின் (Rubik Cube) உலகிலேயே ஆகப் பிரபலமான எண்- விளையாட்டாக உருவாகி யிருப்பது சுடோக்கு ஆகும்.

### புதிர் -10

அதனுடைய சித்திரவதையை அனுபவியுங்கள். அதுதரும் பேரின் பத்தை உணருங்கள்.

இந்தப் புதிரில் ஒருபெரிய சதுரத் துள் 3X3 அளவிலான 9 சிறிய சதுரங்கள் உள்ளன. இந்த ஒவ்வொரு சதுரங்களுக்குள்ளும் 1-9 வரையான எண்களை நிரப்ப வேண்டும். ஒருமுறை பயன்படுத்திய

## சுடோக்கு (SUDOKU)

இப்புதிரை தீர்க்கத்தொடங் கினால் அதைக் கீழே வைக்கவே மாட்டீர்கள்.

எண்கணித அறிவு எது வும் இதற்குத் தேவையில்லை. உங்களுக்குத் தேவையானதெல் லாம் தர்க்கபூர்வமான மனமும் ஒரு பென்சிலும் ஒரு அழிறப்பரும் மட்டும்தான். முயற்சியைத் தொடங்குங்கள்.

எண்ணை இந்தச் சதுரங்களில் மீண்டும் பயன் படுத்தக் கூடாது.

அதேபோலவே பெரிய சதுரத்து நிரைகளிலும் நிரல்களிலும் ஒரு முறை பயன்படுத்திய எண்ணை மீண்டும் பயன்படுத்தக்கூடாது.

ஒருகுறிப்பிட்ட புதிருக்கு ஒரு சரியான தீர்வு மட்டும் உள்ளது.

*(இதற்கான விடை அடுத்தவாரம்)*

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 7 | | | | 4 | | |
| | | 2 | | | | 1 | | |
| 8 | 3 | | | | | | 5 | 9 |
| | | | | | | | | |
| 9 | 1 | 4 | | | | 2 | 3 | 5 |
| | 8 | | 5 | | 4 | | 7 | |
| 4 | | 9 | | 3 | | 5 | | 7 |
| 7 | 2 | | 9 | | 5 | | 1 | |
| 3 | | | 7 | 4 | 2 | | | 8 |

## படித்ததில் பிடித்தது

தமிழில்:-இ.றஜித்,
ஆங்கிலத்தில்:- T.ரெக்பார்மாட்.

# வலி

வலி அவதிகளின்
கருவறை
பிறக்கும் பூகம்பம் புயல்கள்
வாழ்க்கையின்
வேரைப்போய் அசைக்கும்.

ஒரு முனகலில்
கண்டுபிடித்துவிடும் கடலின் ஆழத்தை
உதிரம் சொட்டச் சொட்ட
ஓர் அலறல்.

கவிதை சந்தங்களை
வாயடக்க வைத்துட்டு
உற்றுக் கேட்கும்.

இன்பம்
ஆறடி தள்ளி நின்று
வாழ்க்கையோடு அளவளாவினால்
உயிரோடு கலந்து உறவாடுவது வலி.

உறங்கி நகரும் நதி
ஒரு பாறைபட்டதும் விழிக்கும்
வாழ்வு விழிப்பதற்கு வழியில் வலி.
அது மரணத்தைத் தொட்டுக்
கொண்டே
வாழ்க்கையைச் சாப்பிடும்
சுவைக்கத் தெரிந்தவனுக்கோ
வலியிலும் சுவையுண்டு
அதைத் தொட்டுக்கொண்டே
மரணத்தைச் சாப்பிடுவான் அவன்.

வலி ஓர் அசைவப் பிராணிதான்
சுவாசப்பையின் காற்றின் ஊடே
வேகமாய் பாய்ந்து
பிடித்திழுக்கிறது சதையை எலும்பை.

இருதயக் கூட்டுக்குள்ளே
இரத்தத்தில் அது கைகழுவும் போது
கதவுகள் சடசடக்கின்றன.

ஞாபகம் முழுக்கப் பரவிப்
புதுவலி
ஆக்கிரமித்து ஆட்டிப் படைக்கும்போது
தம்மை அடக்கிவிட்ட குளிசை
மருந்துகளை
எள்ளி
நகையாடிக் கைதட்டுகின்றன
பழைய வலிகள்.

வலியின் பிடரிகளை
இறுகப்பற்றிச் சவாரி செய்பவனிடம்
கண்களைச் சிமிட்டும் அறை கூவல்கள்
காலிடறிக் கவிழ்ந்து விழும்.

## சிந்தனைக்கு சில...

அ.அனாஸ்டிகா

* அதிக பணம் இல்லாதவன் ஏழையல்லன். அதிகம் பணத்திற்கு ஆசைப்படுபவனே ஏழை!

* ஆயிரம் முட்டாள்களுக்கு தலைவனாய் இருப்பதை விட ஒரு அறிவாளிக்கு அடிமையாய் இருந்து இறப்பது மேலானது.

* மூவர் ஒரு இரகசியத்தைக் காக்க முடியுமென்றால் இருவர் இறக்க வேண்டும்.

* ஒரு கோழை பத்து தைரிய சாலிகளையும் தன்னைப் போலவே கோழைகளாக்கி விடுவான்.

* நண்பனுக்காக உயிரைக் கொடுப்பது கடினமல்ல உயிரைக் கொடுக்கும் அளவிற்கு நண்பர்களைப் பெறுவது கடினம்.




அப்பாடி இண்டைக்கு ஒருமாதிரி வானஞ் சிரிக்கிது.

சிரிச்சாப் போல போட்ட நெல்ல மூடி நாலு நாளாத் தண்ணிபாயுது.

போன வரியம் மார்கழியிலதான் பெரு வெள்ளம். இந்தவரியம் இப்பவே பாத்தியே.

கோடை முழுக்க ஒழுங்காப் பெய்யேல்ல இப்ப வந்து நிக்குது.

மழை அப்பிடித்தானே போனா வரத் [illegible]ரியா வந்தாப் போகத [illegible]தெரியாது. இன்னும் கார்த்திகை நடுப்பக்கம் வரேல்ல குளங்கள் வான் போட்டுட்டுது.

குளம் உடைக்க இந்தா அந்தாண்டு இருந்தது. சனமெல்லாம் பள்ளிக்கூடத்துக்குப் போயிற்றுதுகள்.

பள்ளிக்கூடத்துக்குப் போனாப்போல ஒழுங்காப் படிக்கோணுமே. கிளிநொச்சிக் குளத்தை கோடையில பாத்தனியே.

ஓ...ஓ... தண்ணி ரெண்டு கரையும் நிக்க நடுக் குளத்துக்க மாடு மேஞ்சது.

மாடு மேயுற அளவுக்கு நடுக்குளம் உயந்தா கனகாலமா குள வேலை செய்யேல்லயோ....

ஏன் செய்யாமல் குளத்தின்ர அலைகரையால மண் கொண்டேக்கொட்டிக் கொட்டி மூடுகினந்தானே.

அட கடவுளே நகரப் பகுதிக் குளங்களெல்லாம் மண்ணைக் கொட்டினா கொள்ளளவு குறையும். கொள்ளளவு குறைஞ்சா ஊருக்கானே தண்ணி வரும். உதொருக்கா முறைப்பாடு செய்யத்தான் வேணும்... அவற்ற வீடெங்க.

குளத்து வானுக்கதான் ஆத்துக்கரையடைச்சுக் கல்வீடு கட்டியிருக்கிறார் போய்ப்பார்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –148



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

படத்திற்கு மெருகூட்டுங்கள்–148

..........

பெயர் : ..........
முகவரி : ..........

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –147



சி.தர்சி,
இல-70 கட்சன்வீதி,
வட்டக்கச்சி.

### பரிசுக்குரி[illegible] வரிகள்

துள்ளி ஏறி விளையாடிடவே
கொள்ளை ஆசை எனக்கும்–எந்தன்
பள்ளிக்கு நீ எப்போ கிடைப்பாயோ?
பிள்ளை நானும் ஆடி மகிழவே!

### பாராட்டுக்குரிய வரிகள்

ஏற்றமும், இறக்கமும் மாறி மாறி வரும்
போரும் சமாதானமும் போல-எது வரினும்
துவளாமல் துணிந்து நின்று
நிமிர்ந்த வாழ்வை நாம் பெறுவோம்.

திருமதி ரா.சுஜந்தன்,
பரவிப்பாஞ்சான்.

ரணில் இறங்க மகிந்தா உயருகிறார்
இது சிங்கள தேசத்து அரசியல்
எமது தேசம் ஏற்ற இறக்கம் அற்றது
உயர் இலட்சிய தாகம் நிறைந்தது.

சு.ராஜசெல்வி,
கிளி/சென் திரேசா பெண்கள் கல்லூரி.

குழந்தையின் ஊஞ்சலில்
காகக் கூடா!
தாகத்தோடு எழுந்து
தாங்கும் சிறுவர்களை.

S.சிவா,
பருத்தித்துறை.

இயற்கையின் கொடுமையால் கடல் எழுந்து
விளையாடிப் போயிற்று
பதினொரு மாதங்களாய்
குழந்தைகளைக் காணவில்லை இந்த 'சீசோ'.

எஸ்.ராஜி,
வட்டக்கச்சி.

இப்போட்டிக்கான பரிசினை வழங்குவோர்


அருச்சுனா
புகைப்படக்கலையகம்
கிளிநொச்சி புதுக்குடியிருப்பு

# மாவீரர் நாள் 2005 சில பதிவுகள்



ஆலங்குளத்தில்


வன்னிவிளாங்குளத்தில்


விசுவமடுவில்


உடுத்துறையில்


முள்ளியவளையில்


முல்லைக்கடலில்


முள்ளியவளையில்


டென்மார்க்கில்


நோர்வேயில்


தென் ஆபிரிக்காவில்


சுவிஸில்


சுவீடனில்


லண்டனில்


கனடாவில்


இத்தாலியில்


EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...



**தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை**

ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்

கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com



(C-11725)